விசுவநாதம்

மதுரை நாயக்கர் வமிச திலகனான விசுவநாதன்
பெருமைகளை எடுத்துக்கூறும்

ஒரு தமிழ் நாடகம்

(மூன்றாம் பதிப்பு)

தஞ்சைக் கலியாணசுந்தரம் உயர் கலாசாலை மாஜி உதவிப் பண்டிதரும்,
'தமிழகம்' உதவிப் பத்திராசிரியருமான
C. S. முத்துஸாமி ஐயர்
இயற்றியது.

MADRAS-1
சென்னை-1

பிரசுர கர்த்தர்:
M. R. அப்பாதுரை, B.A.,
57, ஆண்டர்ஸன் தெரு,
சென்னை.

பதிப்புரிமை] 1941 [விலை ரூ. 1-8-0

42551

M. I. P. PROJECT
Microfilmed.

5074a

அபிப்பிராயங்கள்

ம-ள-ள-ஸ்ரீ C. S. முத்துசாமி ஐயர் இயற்றிய 'விசுவநாதம்' என்னும் நாடகத்தைப் படித்துப் பார்த்தேன். இஃது, இந்த நாட்டில் முன்பு நடந்த சரித்திரத்தைப் பொருளாகக்கொண்டு இயற்றப்பெற்றிருத்தலும் யாவரும் படித்துத் தத்தம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படி இனிய அகவல் நடையிற் கடினமின்றி அமைந்திருத்தலும் பாராட்டற்பாலன. தாம் அறிந்த விஷயங்களை மற்றவர்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் அன்பு வைத்து இந்த நூல் முகமாக வெளியிட்ட இவருடைய உபகார சிந்தை கொண்டாடத்தக்கது.

மகாமகோபாத்தியாயர்
வே. சாமிநாதையர்,
பண்டிதர்,
பிரஸிடென்ஸி காலேஜ்.

சென்னை,
1—12—06.

* * * * *

ம-ள-ள-ஸ்ரீ C. S. முத்துசாமி ஐயரவர்கள் இயற்றிய 'விசுவநாதம்' என்னும் நாடகத்தின் பெரும்பான்மையான பகுதிகளைப் பார்த்ததில், அந்நூல் பலருக்கும் திருப்திகரமான வகையில் அமைந்துள்ளதெனத் தெரிகிறது. பழைய சுதேச மன்னவர்களில் ஒருவரது பெருமையை எடுத்து நாடக ரூபமாக நிலைநாட்டி விளக்கிய நூலாசிரியரது தேசாபிமானம் அனைவரும் கொண்டாடத்தக்கது. மிக்க கடு நடையாகவும், மிக்க எளிய நடையாகவும் இராமல், இக்காலத்துக்கேற்றபடி நடுத்தரமான நடையில் இந்நூல் முழுவதும் ஒரேவிதமாக அமைந்திருப்பதை இந்நூல் படிப்பவரெவரும் பாராட்டாதிரார். இவ்வாறு விஷய கௌரவத்தோடு பாஷா கௌரவமுமுடைய இந்நூலின் அருமை பெருமைகளை யாவரும் அறிந்து, இந்நூலை வாங்கிப் படித்துப் பரவச்செய்து, இதனை இயற்றியவரது ஊக்கத்தை மிகுவித்து, இதுபோன்ற மற்றும் பல நூல்களை அவர் இயற்றுமாறு செய்து, ஆதரிப்பார்களாயின், அது தேச பாஷைகளின் அபிவிருத்திக்கு ஏதுவாமென்பது என் கருத்து.

வை. மு. சடகோபராமாநுஜாசாரியார்,
காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

கும்பகோணம்,
24—9—06.

நிலை மண்டில ஆசிரியப்பா

எழுத்துநிலை தரூஉம் விழுத்தகு கொன்றைத்
தொடைமதி யோடணி சடைமுடிக் கடவுள்
செவியறி வுறுத்துபு தெற்கண் விடுத்த
தன்னிக ரகத்தியன் பன்னிய வியலொடு
நின்றுநில வுறாஉந் தொன்றுபடு மருந்தமிழ்
வளர்தர வளர்த்த மதுரைத் தொல்பதி
கோலினைத் திருத்துபு கோமுறை புரிந்த
விசுவநா தப்பெயர் வேந்தனற் சரிதை
மணியினங் குயிற்றிய வணியிது வாமென
வைதருப் பத்தார் செய்தெளி விதுவெனத்
தமிழ்முது மக்கடம் மறிவுகவர்ந் திழுப்ப
வறமுத னாற்பொருள் செறிதர விளங்க
வரசற் கப்பா வழகிதென் றறிந்தே
யுரையிடை யிட்ட பாட்டென வியற்பா
வதனு லொருநூ லமைத்தற் குரியோன்
றற்பெயர் புனைந்து தந்தரு ளினனே
தொடுகட லகழும் படுமலை மதிலும்
வளைதர விசும்பின் வளநக ரெனப்படுந்
தஞ்சையின் மலைமிசைச் செஞ்சுட ரென்னத்
தன்னிசை பரப்பி மன்னிய பெரியோன்
றமிழகந் தழீஇத் தமிழகந் தனக்கே
யொருதலை மைத்தன மருவிய விசையோன்
றமிழ்க்கட லெல்லையைத் தன்மதிக் கலங்கொடு
தெரிதரப் போய செந்தமி ழுந்தண
னுமிசை முத்துச் சாமிநா வலனே.

ஆ. கா. பிச்சை இபுறாகீம் புலவர்,
தமிழ்ப்பண்டிதர்,
எஸ். பீ. ஜீ. காலேஜ்.

திருச்சி,
14—8—06.

மதுரை விவேகபானுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்
கவிராயரியற்றிய சாற்றுக் கவிகள்:

திருவால வாயென்னுந் திருநகரி லரசுமுறை
செய்தோ னாகிப்
பெருவாய்மை யாதிநலம் பெறுவிசுவ நாதனியல்
பிறங்குங் காதை
மருவாருந் தென்றமிழி னஃரசமு நவரசமா
மலியச் சாற்றிக்
குருவாரும் பொதியமுதந் தமிழகத்திற் றமிழகத்தாற்
குலவச் செய்து (1)

தலைமகன்பே ரானியைந்த தன்றியுமிந் நூலிசைநாற்
சலதி சூழ்ந்த
நிலமிசையெங் கணுமுழங்கு சீரானு மியையுமென
நெடுநூல் வல்லோர்
சொலவிசுவ நாதமெனப் பெயருமிட்டு வெளியிட்டான்
றாய்மை வாய்மை
குலமறிவு பொறைசுகுண மாதியெவற் றினுமுதன்மை
குலவு மாண்பன் (2)

ஆங்கிலநன் கறிந்துயர்ந்து தமிழகத்துத் தலைமையுறீஇ
யயனாட் டோர்க்கு
நாங்கிலவ ரல்லேமென் றறிவுறுக்க வருராச
நாம நூலோன்
பாங்கிலகு நட்பாள னிஃதென்னே வியப்பனைய
பண்பா னெற்கும்
ஓங்கிலவ னாகரநேர் செல்வரையு மூருணிநீ
ரொப்பச் செய்வோன் (3)

தளங்குலவு மலர்வாவி சூழ்தஞ்சைத் தமிழ்ச்சங்கந்
தழைப்ப வெய்தி
வளங்குலவு தரளமெனுந் தலைவனிவ னெனவெவரு
மதிக்கும் வண்ணம்
விளங்குமுத்து சாமியெனுந் திருநாமன் விருந்தருத்தி
மிசையும் வேட்கை
யுளங்குலவு பெருவாழ்வான் இவன்சிறப்பென் னொருநாவா
லுரைக்கற் பாற்றோ! (4)

இன்னபுகழ்ப் பிரதாபன் றருமினைய நாடகத்தி
னெவண்பார்த் தாலும்
அன்னவயி னெமைப்புரக்கும் வெண்கமல மயினடன
மாடு மாண்பு
முன்னுறுவ தாதலினு லகவலெனும் பெயரிதற்கே
மொழிதல் சாலும்
சொன்னலமும் பொருணலமு மணிநலமும் எந்நலமும்
துலங்கு மன்றே. (5)

மதுரை,
16—10—06.

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்

* * * * *

நாடிப் புகழ்விசுவ நாதமெனு நாடகத்தைக்
கூடிப் புலவருணக் கோத்தளித்தான்—கோடிநூல்
கற்றுத் தெளிந்த கவிசிங்க நான்மறைதேர்
முத்துச் சுவாமியையன் முன்.

நாவலர் கோட்டம்,
27—9—06.

ஆ. முத்துத்தம்பி பிள்ளை

* * * * *

சரித்திர ஆராய்ச்சியினுல் சந்தேகமின்றி ஏற்படும் சங்கதிகளை ஆதாரமாய்க்கொண்டு நாடகங்கள் கதைகள் அமைப்பது மிகவும் புகழத்தக்க முயற்சியென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடியதுதான். மாணவர்க்கு இச்சங்கதிகளைக் கற்பிக்கும் மார்க்கங்களில் இது ஒன்று. இவ்விதமான நாடகங்களிலும் கதைகளிலும் கவனிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு: சரித்திர ஆராய்ச்சியினுல் ஏற்படும் சங்கதிகளை அதிகமாய் மாற்றுமல், அவ்வாராய்ச்சிக்குட்படக்கூடாத பாகங்களில் கதையின் தொடர்ச்சியின்பொருட்டுச் சில சந்தர்ப்பங்களையும் விஷயங்களையும் கற்பனை செய்து கூட்டிக் கொள்ளலாம்.

தாங்கள் அமைத்திருக்கும் நாடகத்தை முழுமையும் வாசிக்கத் தற்காலம் அவகாசமில்லை என்றாலும், பார்த்த பாகங்கள் மனத்தைக் கவர்ந்து பூர்த்தியாய்ப் படிக்க ஆவலை உண்டாக்கத் தக்கனவாயிருக்கின்றன.

* * * *

உதக மண்டலம், 17—9—06 } தங்கள் விதேயன், வெங்கையா, M. A.

---

* * * *

'விசுவநாதம்' என்னும் தங்களுடைய இனிய நாடகத்தை வாசித்து மகிழ்ந்தேன். காலஞ்சென்ற ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளையவர்களியற்றிய மனோன்மணீயத்தின் போக்கைப் போன்ற நாடகங்கள் பல தமிழிலில்லையென்னும் பழி நீங்கத் தாங்களியற்றிய இவ்வரிய நாடகத்தின் வாக்கையும், பொருட்சுவையையும், கதையின் ஒற்றுமையையும் யாவரும் புகழாதிரார். நம் தேசத்துச் சரித்திரங்களில் பொதிந்து கிடக்கும் பெரியோர் சரித்திரங்கள் நாடக முதலிய எவ்வகை ரூபத்திலாயினும் வெளியேறின், அவைகளை வாசிக்கும் சிறுவர்களுக்கு அப்பெரியோர் நற்குண நற்செய்கைகள் படியுமென்பதற்கையமேயில்லை.

ஆயின், விசுவநாதம் நடிக்கத்தக்க நாடகம் அல்ல என்பாருமுளர். ஒருக்கால் அப்படி இல்லாதிருப்பினும், புராண இதிகாசங்களைப் போலப் பத்திய ரூபத்தில் படிப்போர் மனங் களிப்பிக்கும் குணம் இதற்கு இல்லாமற்போகவில்லையே! மேற்கூறிய துர்க்குணம் இதற்கு மாத்திரமல்ல, மனோன்மணீயத்துக்குமுள்ளதே. ஆதலால், மனோன்மணீயத்தை நன்றென்போர் இதனையும் ஏற்காது தள்ளார்.

என் விஷயத்தில், தங்கள் நாடகம் வெகு நேர்த்தியாயிருக்கிறது என்பது பூர்ணாபிப்ராயம். அதிலும், சொல் வன்மையும் வாக்கின் தாட்டியும் அருமையாயிருக்கின்றன. கடினமான சரித்திரத்தை நாடகமாக்கினது வியக்கத் தக்கது. மொத்தத்தில் தங்கள் நாடகம் எல்லா வகையிலும் சிறப்புடையது என்னும் விஷயம் ஒவ்வொரு பாகத்தாலும் விளங்கும்.

* * * *

திருவனந்தபுரம், 29—9—06 } து.அ கோபிநாதராவ், M. A

The play of Visvanatham, by the learned Pundit Mr. C. S. Muthusamy Iyer, is a very successful attempt at dramatising the historical incidents of the time of Visvanatha Naicker, the founder of the Madura Naik Dynasty. The English model is followed, though the prose introductions to the scenes form a novel feature in dramatic attempts of the kind. It portrays vividly the various relationships of the then ruling princes (both Hindu and Muhamedan) and sets a fascinating love story in the background of their history. Though the style is high Tamil and the play is thereby rendered unactable, yet there can be no doubt that the literary merit of the work is high and as such, it is a real addition to high class Tamil literature, nay, also to the portion of the history of Southern India which treats of the Naik kings. The work is full of noble poetical sentiments and commends itself to all lovers of Tamil Literature.

Tiruvand'am,
8—11—06.

T. LAKSHMANA PILLY, B.A.

Dear Sir,

I have looked through with great pleasure your work Visvanatham, a drama relating to the period of the greatness of Vijayanagar. Kindly allow me to say you have done the work admirably in some parts and on the whole it is a very creditable performance in modern Tamil. I was struck with the simplicity of language which has been attained while maintaining the classical grace of diction. *In these days when the University requires modern works in the vernaculars, your work ought to be a welcome addition and I hope the University will make use of the work, as they had done a similar work before, viz., 'Manonmaniyam' of the late Mr. P. Sundaram Pillay of Tiruvandram.* Thanking you for having given me the pleasure of reading an advance copy of your excellent work, and wishing you all success.

I remain,
Yours sincerely,
S. KRISHNASWAMI IYENGAR, M.A.,
Professor, Central College.

Chamarajendrapet,
Bangalore City,
29—11—06.

Dear Sir,

I am very glad that you are now re-issuing the book form your Tamil Drama of *Visvanatham*. I read it with considerable interest as it originally appeared in the pages of the *Tamilakam*. The interesting story which you have woven out of an episode in the history of the Vijayanagar Nayaks and the fine poetical style in which it is written make it very pleasant reading.

It possesses high literary merits which make it, in my opinion, *eminently suited for a Text Book in Tamil.* In point of literary form and finish your work will bear comparison with Sundaram Pillay's Manonmaniyam.

I am, yours sincerely,

K. RAMARATNAM AIYER, B.A.

தனியன்

'கவித்தநெடும் புகழ்விசுவ நாதன்சீர்ச் சரிதைதனைக்
கற்றோர் தங்கள்
செவித்தலத்திற் கினிமைதரச் செந்தமிழி னாடகமாச்
செய்க,' என்று
புவித்தலத்திற் கணிதிலக மானதடம் பொன்னிவளம்
பொலியும் பண்ணைக்
கவித்தலரா சன்புகலக் கவிழுத்து சாமிசெய்து
களிப்பித் தானே.

உரிமையுரை

இந்நாடகம்

இதனை இயற்றிய ஆசிரியனால்

தஞ்சைக்

கலியாணசுந்தரம் உயர்கலாசாலைத் தலைமை ஆசிரியர்

ம-n-n-ஸ்ரீ

K. கோபாலசாமி ஐயங்காரவர்களுக்கு

அவரிடத்தில் இவ்வாசிரியன் கொண்ட மதிப்பினையும்
நன்றியறிதலையும் காட்டச் சமர்ப்பிக்கப்பட்டது.

FOREWORD

Visvanatham, as the poet himself styles it, is an historical drama in five acts. It glorifies the deeds of **Visvanatha**, an ideal hero, and the first of the Nayak line of kings of Madura. He was the son of **Nagama Nayak** ('Camanayque' in the chronicle of Fernao Nuniz) who was the chief of the guards in the army of **Krishna Deva Raya**, The early breeding and education of Visvanatha who was a pet in the palace was therefore in the right royal style, and it is said that he was a friend of Achyuta Raya, the brother of that illustrious king of the Second Dynasty of Vijayanagar, Krishna Deva Raya. It is not my purpose here to sketch out a biography of this eminent personage in South Indian History ; that, in the main, has been so well done by the poet himself in his work. My chief aim now is to point out the historical basis of this drama. The life-history of Visvanatha is found to cover the first sixty-four years of the sixteenth century; in fact, he was born along with that century and died about A. D. 1564. His name is always associated with another great hero of Southern India, namely **Aryanatha Mudali** who was his friend, counsellor, and minister. The poet says that Aryanatha Mudali was 26 years old in the year 1512 of the Christian era. This is evidently an exaggeration, as we find that Aryanatha died about the close of the sixteenth century at the ripe age of nearly 98 years in his new-made home at Solavandan in Madura. It seems to me that perhaps Visvanatha and Aryanatha were of about the same age, if the latter was not a little younger than the former as presumably one is led to think he was. Both Visvanatha and Aryanatha distinguished themselves early in the service of Vijayanagar and both of them gradually rose up the ladder of civil and military service, the latter at first becoming a captain in the army of Nagama. Visvanatha had more of the softer qualities in him, and to him therefore even a royal alliance by marriage was reserved. It seems that about A. D. 1535 Visvanatha was made the cammander-in-chief of the forces for the signal services rendered by him to Achyuta, his friend

and master. It was by the same kingly well-wisher Achyuta that Visvanatha was later on commissioned *to go to the country* of the Pandyas, there to carry on the Government of that land in the interests of the mad king Guna Vira Varman, the last of the *nominal kings of that country.* On the death of the same insane Tamil king, Rama Raja of Vijayanagar seems to have acceded to the request of the people of Madura and to have virtually installed Visvanatha on the throne of the Tamil country.

The history of Vijayanagar commencing from the accession of the great Krishna Deva Raya down to a few years in the reign of Rama Raya has been laid under contribution to supply matter for this drama, and naturally therefore the poet ought to have had before him a panorama of diversifying incidents from which to select; and I fully believe that he has done his work pretty satisfactorily. He has not sacrified historical truth very much in the interest of producing a good poetic effect. The selection that he has made of the history of the Second Dynasty of Vijayanagar he has himself given us in his argument (கதாசங்கிரகம்), and therefore it is not necessary for me to repeat the same. The relation that existed between Krishna Deva Raya and Ismail Adil Shah of Bijapur, *their several relations with the Portuguese* at Goa, the condition of international trade, the quarrel about 'Raichur and the Doab,' the splendid rise of Hindu greatness *in* the reign of Krishna Deva or Achyuta, the confusion and anarchy that followed the death of Achyuta, the machinations of Ibrahim Adil to bring down the glory of the 'City of Victory', the accession of Rama Raya which was a sign of peace—(but alas! only for a short period)—all these are rapidly and playfully touched upon by the poet in his wonderful drama whose diction, I think, will equal, if not excel, the late lamented Professor Sundaram Pillai's **Manonmaniyam** for its smoothness. To really understand the historical basis of this drama I would recommend the reader to study Robert Sewell's 'A Forgotten Empire'—chapters 9 to 14, and especially the two documents appended to the book, namely the Narrative of Domingos Paes and the chronicle of Fernao Nuniz.

Ranging as it does over a period of exactly half-a-century *i.e.*, from A. D. 1509 to A. D. 1559, the drama certainly fails to satisfy us on one score, namely that of want of unity of time and place. The poet will perhaps plead that Shakespeare too was guilty in having bodily transported across the channel innumerable infantry and artillery in the space of a few minutes to array them before the walls of Agincourt. But a too rapid scenic change either in place or time sometimes does mar good effect and leaves the audience to question where they are. Happily, however, the interest of the story and the smooth diction transport us right through readily, and we are not left to gape in wonderment. Unity of action is always well kept up, and though descriptions of battles, sieges, courts, camps, marriages, processions, love-episodes, incidents of domestic life, ways of friendship and sweet recreation are all mixed up, they are mixed up in such a way that one is prompted to say in satisfaction, " Well, let us have all these variegated landscapes; we can view them pretty well, standing as we do on this prominent rock."

The threads of the plot that are interwoven to produce a pleasing effect may be analysed into five or rather six events. They are, I think, (i) the diplomatic relations of Vijayanagar and Bijapur during three successive generations; (ii) the love-episode of Visvanatha and Kanchanai, the hero and the heroine, their trials and their triumph ; (iii) the causes that led to the battle of Solamaligai and its results; (iv) Nagama's treachery, the battle of Solavandan, and the reinstatement of Chandrasekara Pandya ; (v) the fresh laurels obtained by Visvanatha in the siege and battle of Raichur; (vi) and lastly, the crowning glory of Visvanatha at Madura. Of these events No. (ii) might be set aside as a pure myth or the fancy of the poet. Krishna Deva is said to have had two daughters only and they were respectively married to Rama Raja and to Tirumal Raya *alias* Jeeva Rai. To events (iii) & (iv) ' the poet, I know, is indebted to the Madura and the Tanjore District Manuals, the works of Mr. Taylor, and the variorum history of South India written by Mr. S. P. Narasimhalu Naidu of Coimbatore. The siege and battle of Raichur is ascribed by most historians and witnesses to Krishna Deva Raya

and not to Achyuta as is here done by the poet. His authority is 'Achyuta Rayabhyudayam,' a manuscript find of Mr. T. S. Kuppuswami Sastriar, a patient labourer in the field. Therein the whole credit is given to Achyuta. But both the Persian historian Firishtah who for some time resided at the court of the Nizam Shahs of Ahmadnagar and Fernao Nuniz who had personal access to the court of Vijayanagar plainly state that the incident referred to occurred in the reign of Krishna Deva Raya in 1520, and Robert Sewell, after a careful sifting of evidences, arrives at the 19th day of May of that year as the date of the battle. In the face of such overwhelming evidence, we have to reserve judgment for the present. Perhaps the battle of the Krishna where Malu Khan was forced to retreat and Ismail Adil purchased peace refers to a different event in the reign of Achyuta. But after all according to Nuniz, Achyuta was not the right sort of a king to war with Adil Shah, and it is said by the same authority that the debated land 'Raichur and the Doab' was eventually lost to the Hindus in 1530. I am therefore led to think that the author Rajanatha Kavi extolled Achyuta to the skies and transferred the glory of Krishna to Achyuta, prompted as he was by self-interest and other considerations. But to come to the point, although the poet might have erred in this respect, the description of the siege and battle of Raichur is faithful and does not at all suffer in consequence. The diplomatic relations of the two courts of Vijayanagar and Bijapur, and the life-incidents of Visvanatha are generally well depicted, and on the whole the web of the plot is most artistically woven. The play is highly commendable for its beauty.

The characters of the play are likewise varied and present interesting study. The hero and the heroine are indeed ideals and you vainly search for even a single blemish. The majestic bearing and the catholic spirit of the hero quite in keeping with his breadth of views and love of justice; the soft feminine virtues of Kanchanai; the extreme loyalty of Murti and her desire to please her mistress; the changing moods of the sprightly Mathivilasini; the mathematic precision and the calm demeanour with which Aryanatha conducted the military opera-

tions at Raichur; the rather enfeebled Achyuta delighting in sensual pleasures; the treachery of Nagama, the wily Mangamma, the cunning minister prone to vice later on,—all these mingled up in nice proportions add grace to the poem. The critical positions in which Visvanatha is placed try his soul, and after every ordeal he comes out glorious. He would not wound anybody's feelings, but would always help the weak and render service where it ought to be rendered. Krishna Deva is represented in the play not as a mere figure-head but as a king whose words were highly respected. He is said to be resting upon the glory that he had already won. The simple logic of the Jaffnese when they discover Chokalingan deserting the cause of Virasekara is most realistically told, and Puntattai is at once pleased with the argument. The imprisoned lady mourning her fate on the moon-lit night in the upper storey and her rescue by means of a rope-ladder are calculated to rouse our feelings by action. But what is wonderful there is the simple way in which gratitude is expressed. I would fain speak of more characters, if space would allow me. A host of other characters remain to be pictured, poor Kanakavalli accepting a pittance to live upon, Malu Khan, Salabat Khan and the rest. I leave all these for the careful study of the reader. I would also point out the beauties, the choice expressions, and the nice sentiments, but space forbids my doing this.

In conclusion, I recommend this play very earnestly as a book fit for the reader's leisure-study, fully believing that he will be repaid the trouble of perusal. The poet richly deserves encouragement, and in these days when modern vernacular literature has to be developed, I believe that it is the duty of the educated public to welcome such poets who show adaptability to modern conditions.

With this foreword I bless *Visvanatham* and earnestly pray that God will be pleased to secure it the success it so well deserves.

TAMIL SANGAM,
TANJORE,
1st Dec, 1906.

T. RAJAM AIYANGAR, B.A., L.T.,

A Member.

முதற்பதிப்பின் முகவுரை

'விசுவநாதம்' என்னும் இந்த நூல் விசுவநாதனது சரித்திரத்தை நாடக ரூபமாய் எடுத்துக்கூறும் தன்மையில் அமைந்துள்ளது. இவன் நமது தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய மதுரையை அரசாட்சி புரிந்த நாயக்க ராஜ வமிசத்தில் முதல் அரசனும் அவர்களில் திலகம் போன்றவனுமான ஓர் இந்து அரசன். இவன் இளமை தொடங்கி நல்லொழுக்கம், சற்சகவாசம், பெருந்தன்மை, ஆழ்ந்த அறிவு, ஆண்மைத்தன்மை, ராஜபக்தி முதலிய நற்குணங்களை உடையவனாய் விளங்கினன். இத்தகைய நற்குணங்களையுடைய இவனது சரிதத்தைத் தற்கால பாஷாபிவிருத்திக்கு ஏற்றபடி நாடக ரூபமாய் எழுதினால், இதைப் படிக்கும் மாணாக்கர்களுக்கும் ஏனையோர்க்கும் அவ்வரிய குணங்களும் ஒழுக்கங்களும் படியுமென்பது கருதியும், என் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கியும் யான் இந்நூல் எழுதலானேன். இச்சரித்திரத்திலுள்ள சாராமிசங்களையும் கதையின் தொடர்ச்சியையும், என்னால் எழுதப்பட்டுள்ள கதாசங்கிரகமும், நண்பர் ம-ா-ா-ஸ்ரீ இராஜமையங்காரவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள முகவுரையுமே நன்கு விளக்குமாதலால், அவற்றைப்பற்றி இவ்விடத்தில் எடுத்துச் சொல்வது மிகையென விடுத்தனன்.

இந்நூலுக்கின்றியமையாத சரித்திர சம்பந்தமான பாகங்களைப் பல இடங்களில் தேடி ஆராய்ச்சி செய்து எனக்குக் கோவையாகச் சேர்த்துக் கொடுத்தும், எனது நன்மையைத் தமது நன்மையாகக் கருதியும், என்னுடன் என்றும் இணை பிரியாத் தோழமையுங் கொண்ட எனது உயிர்க்குயிராகிய நண்பர் ம-ா-ா-ஸ்ரீ T. இராஜமையங்கார் அவர்கள் (B.A., L.T.,) நாளும் செய்து வருகிற நன்றி என்றும் மறக்கற்பாலதன்று. தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டு வருகிற 'தமிழகம்' என்னும் பத்திரிகை வாயிலாக இந்நூலை யான் வெளியிடத்தொடங்கிய காலையில், அதில் வந்த சிற்சில பகுதிகளை மிக்க ஆவலுடன் பார்வையிட்டு ம-ா-ா-ஸ்ரீ கோபிநாதராயரவர்கள் (M.A.) யான்

எடுத்துக்கொண்ட காரியம் நற்காரியமென்றும், இஃது எவ்வகையானும் இனிது முடிவு பெறவேண்டுமென்றும் அன்பு பாராட்டிக் கடித மூலமாகத் தெரிவித்து, எனக்கு ஊக்கத்தை உண்டாக்கினர்.

இச்சரித்திரத்திற்கு ஒற்றுமையான சில பாகங்களை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தும், யான் எழுதி வந்த இச்சரித்திரத்தின் கோவையை உற்று நோக்கியும் எனக்கு உதவி புரிந்து வந்த வடமொழியில் வல்ல பண்டித சிரோமணியாகிய நண்பர் ம-ா-ா-ஸ்ரீ T. S. குப்புசாமி சாஸ்திரிகளுக்கும், மாற்றவேண்டிய பாகங்களை மாற்றியும், சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்தும் ஏற்றமான விஷயங்களை எடுத்துக் காட்டியும் இது விஷயத்தில் எனக்கு மிகவும் உதவியாயிருந்த நண்பர் ம-ா-ா-ஸ்ரீ K. இராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கும் நண்பர் ம-ா-ா-ஸ்ரீ O. N. அப்பாசாமி ஐயரவர்களுக்கும் யான் செய்யும் கைம்மாறு என்னுளது!

கலாசாலைகளிற் கற்கும் மாணாக்கர்களுக்கும் பயன்தரத்தக்கதாய் இந்நூலை அதிக கடினமின்றி எளிய நடையில் எழுதவேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டும், அடிக்கடி இதைப் பார்வையிட்டும், எனது க்ஷேமத்தை நாடி என்னைப் பாதுகாத்தும் வருகின்ற ம-ா-ா-ஸ்ரீ K. கோபாலசாமி ஐயங்கார் (B.A.) அவர்களுக்கு எந்நாளும் எனது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டவனாய் இருக்கிறேன். இந்நூலை அச்சிடுவதற்கு உதவி புரிந்த கனவான்களுக்கும் எனது நன்றியைச் செலுத்துகின்றேன்.

அச்சுப் பிழைகளும், சொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும் இந்நூலில் உள்ளனவாயின், அவைகளைத் திருத்திக் கொள்ளும்படி நண்பர் அனைவரையும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

தஞ்சை,
1906ஹு டிஸம்பர் மீ 1 உ } C. S. முத்துஸாமி ஐயர்

விசுவநாதம்

கதா சங்கிரகம்

விஜயநகர் அரசர் கிருஷ்ணதேவராயர், விஜயபுரிச் சுல்தான் இஸ்மேல் அடில்ஷா செய்துவந்த துன்பங்களைச் சகியாதவராகிப் பகைமேற்கொண்டிருந்தார். வடுகல் துறைமுகத்தும் ரேய்ச்சூர் முற்றுகையிலும் முதுக்கல் போர்க்களத்தும் சுல்தான் தனது விரோதத்தைக் காட்டினதுமன்றி, பொதுவாய் இருந்த போர்த்து கீயரோடு உறவாடி, அவர் நடு நிலைமையையும் கெடுத்துவிட்டான். அரசர் இக்கவலையினால் மிகவும் வருந்திக்கொண்டிருந்தார்.

இப்படி இருக்கையில், சந்திரசேகர பாண்டியன், வீரசேகரச் சோழனால் தன்னாட்டினின்றும் துரத்தப்பட்டு, சேனையையும் செல்வத்தையும் இழந்து, விஜயநகரம் புகுந்து, கிருஷ்ணதேவரைச் சரணம் அடைந்தான். கிருஷ்ணதேவர் அபயமளித்துத் தம் தளகர்த்தன் நாகமனைப் பாண்டியனோடு சென்று சோழனை வென்று மதுரையைப் பாண்டியனுக்குக் கொடுத்து வரும்படி ஆஞ்ஞாபித்தார். அவ்வாறே நாகமன் ஒரு பெருஞ்சேனையைச் சேர்த்துக்கொண்டு, பாண்டியனோடு சோழ நாட்டுக்கு வந்து, சோழ மாளிகைப்புறத்து வீரசேகரனை வென்று கொன்று, அவன் நாட்டையும் கிருஷ்ணதேவர் வசமாக்கி, அந்நாட்டிற்கு ராஜப்பிரதிநிதியாகக் கிருஷ்ணதேவர் மைத்துனன் செவ்வப்ப நாயக்கனைத் தஞ்சையில் இருத்தி, தன் சேனையோடும் பாண்டியனோடும் மதுரைக்குச் சென்று, அவனுக்கு முடி சூட்டி, அவன்கீழ் மந்திரியாய்ச் சில காலம் இருந்தான்.

விஜயநகரத்தில் நாகமன் புதல்வன் விசுவநாதன், அரசர் பின்னவனும் இளவரசனுமான அச்சுதனோடு இணை பிரியாத் துணைவனாய் வாழ்ந்து வந்தான். அப்போது அரசர் புதல்வி காஞ்சனையம்மன், விசுவநாதனிடத்தே மிகுந்த காதல் கொண்டு, அவனையே மணம் புரிவதென்று இசைந்திருந்தாள். இப்படியிருக்க,

விஜயபுரி இளவரசனான மாலு என்பவன், இவள் குணதிசயங் களைக் கேள்வியுற்று, இவளைத் திருடிக்கொண்டு போய்த் தனது காமக்கிழத்தியாக வைத்துக்கொள்ள நினைத்தான். அவன் தன் வார்த்தைக்குட்பட்ட சில பாதகரைக்கொண்டு தன் இஷ்டப் படியே காஞ்சனையைச் சிறைகொண்டு, தனது அரண்மனையிலே வைத்தான். இதையுணர்ந்த விசுவநாதன், அரசன் தூதனெனச் சென்று, சுல்தான் அடில்ஷாவுடன் பேசி, வடுகல் துறைமுகத்து மகம்மதியர் ஸ்தானபதியான ரஸூல்கானுக்குத் தண்டனை விதிப் பித்ததுமன்றி, அன்றிரவே நிலா முற்றத்திற் கிடந்து புலம்பிய காஞ்சனையின் நிலைமையைக் கண்டு வருந்தி, அவளை விடுவிக்க நூலேணியொன்று அமைத்து, அதன் வழியே அவளைக் கீழிறக்கி, அவளுடன் பொழுது விடிவதன்முன் அந்நகரத்தை விட்டு விஜய நகரம் வந்து சேர்ந்தான்.

இஃது இங்ஙனமாக, பாண்டி நாட்டிலே நாகமன் தரும நெறி தவறிப் பொருளாசையால் பாண்டியனைச் சிறைசெய்து சிம்மாசனம் ஏறினான். இச்செய்தியைக் கேட்டுக் கிருஷ்ணதேவர் உள்ளங் கலங்கி, நாகமனைத் தண்டிக்கவேண்டித் தருமவழி தவறாத விசுவநாதனையே ஒரு பெருஞ்சேனையுடன் அனுப்பினார். விசுவ நாதன் மதுரைக்குச் சென்று, தன் தாய் கூறிய அதர்ம வழியை விலக்கித் தந்தையுடன் போர்புரிந்து, அவனைத் தளையிட்டு, சந்திர சேகரனை விடுவித்து, அவனைச் சிம்மாசனம் ஏற்றி, அரியநாதனை மந்திரியாக்கித் தன் தந்தையுடன் விஜயநகரம் வந்தான்.

அங்கு நாகமன் கிருஷ்ணதேவரைப் பணிந்து, தன் இராஜத் துரோகத்தை மன்னிக்கும்படி கேட்க, அரசர் அவ்வாறே மன்னித் ததுமன்றி, அவனைத் தம் பந்துவாக உறவாடி, அவன் மகன் விசுவ நாதனுக்குத் தம் புத்திரி காஞ்சனையை மணம் புரிவித்தார்.

சின்னாளடைவில் கிருஷ்ணதேவர் விண்ணுலகடைய, அச் சுதன் பட்டம் பெற்றுத் திக்கு விஜயஞ் செய்யச் சென்றான். அவன் தனக்குக் கீழ்ப்படியாது இருந்த குறுநில மன்னர்களைப் பணிவித்துத் தன்னகர் நோக்கி வரும்போது, விஜயபுரியிலிருந் தும் ஒரு தூதன் வந்து, துங்கபத்திரைக்கு வடபால் 10 மைல் அகலமுள்ள நாடெல்லாம் சுல்தான் ஆளுகைக்குட்பட்டதென்றும், அதை அரசன் மறுப்பானாகில் போர் உண்டாகுமென்றும் கூறி

னன். அரசன் அது தன்னுடையதென்று வாதம் புரியச் சண்டை நேர்ந்தது. அச்சண்டையில் சுல்தான் சேனை முறிபட்டோட, ஒரு சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. அவ்வுடன் படிக்கையின்படி துக்கபத்திரையின் வடபால் உள்ள காவத நாடு விஜயநகரத்தைச் சேர்ந்தது.

சிறிது காலம் சென்ற பிறகு அரியநாதனிடத்திலிருந்து ஒரு தூதன் வந்து, சந்திரசேகர பாண்டியன் இறந்தான் என்றும், அவன் மகன் குணவீர வர்மன் பித்தேறினன் என்றும், குடிகளை ரக்ஷிக்க ஓர் அரசன் வேண்டுமென்றும், மதுரைவாசிகள் விசுவநாதனையே தங்கள் அரசனாகத் தரவேண்டுமென்கிறார்கள் என்றும் கூறினன். அப்போது அரசன் மிகுந்த சந்தோஷமடைந்து, விசுவநாதனைக் காஞ்சனையுடன் மதுரைக்கு அரசனாக அனுப்பினன்.

விசுவநாதன் அரியநாதனுடன் மதுரையில் அரசு புரிந்துகொண்டிருக்கையில், விஜயநகரத்தில் அச்சுதன் பரமனடி நீழற்சார, பெருங்குழப்பமும் கலகமும் மீதிட்டு, நகரம் அணி குலைந்தது. பிறகு குழப்பங்கள் ஒருவாறு அடங்க, இராமராஜன் பட்டத்திற்கு வந்தான். அவன் காலத்தில் மதுரையில் குண வீர வர்மன் இறந்துவிட, மதுரை வாசிகள் விசுவநாதனையே முடிசூட்டும்படி விண்ணப்பஞ் செய்துகொள்ள, அரசன் இராமராஜன், காளிகாதேவியையும் அரச சின்னத்தையுந் தந்து, விசுவநாதனுக்கு முடி சூட்டி வைத்தான்.

விசுவநாதன் ஜனங்கள் இன்பமடையும் வண்ணம் செங்கோல் செலுத்தி அரியநாதனைத் தன் மந்திரியாக அமைத்துக் கொண்டு, காஞ்சனை களிகூரக் கி-பி. 1559ஆு முதல் கி-பி. 1563ஆு வரைக்கும், அந்தணரும் பெரியோரும் வாழ்த்த, மாந்தர்கள், 'இவனே அரசன்!' என்று கூற, நன்னிலை கோடாது அரசு புரிந்தான்.

[இந்நாடகம் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப்போன்று ஐந்து அங்கங்களையும், ஒவ்வோர் அங்கத்திலும் அதன் உட்பிரிவுகளாகிய பல களங்களையுங் கொண்டது. ஒவ்வொரு களத்திலும் அமைந்த விஷயத்தைச் சுருக்கி வசனமாய் முன்னர்த் தொகுப்பின் நலமாமென்று கருதிப் பின் வரும் கள விஷய சூசிகை தரப்பட்டிருக்கின்றது.]

கள விஷய சூசிகை

அங்கம்—I

களம்—1

துங்கபத்திரை நதியின் தென்கரையிலுள்ளது புராதனவிஜய நகரம். அந்நகரரசர் கிருஷ்ணதேவராயர். அவர் ஆஞ்ஞை தெக்ஷணமெல்லாம் பரவியது. ஆயினும், நதியின் வடபாலெல்லாம் மகம்மதியர் ஆளுகைக்குட்பட்டது. மேற்றிசையில் கடலோரமாகப் போர்த்துகீயர் என்ற ஐரோப்பிய வர்த்தகர்கள் குடியேறி, ஒரு சிற்றரசமைத்து வாழ்கின்றார்கள். இங்ஙனமாக, விஜபுரியைச் சுல்தான் இஸ்மேல் அடில்ஷா ஆண்டு வந்தான். இவன் செய்யும் இடுக்கண்களுக்காற்றாது அரசர் கிருஷ்ண தேவர், சபையில் மிகுந்த கவலை கொண்டனராகி இருந்தனர். அப்போது சபையில் நடந்த மந்திராலோசனை இக்களத்திலமைந்துளது. இது நிற்க. சோழன் வீரசேகரன் வஞ்சமாய்ப் பாண்டி நாட்டைக் கவர்ந்து, சந்திரசேகர பாண்டியனை முறியடித்தோட்ட, அவன் கிருஷ்ணதேவரிடத்தே சரண் புகுந்தான். கிருஷ்ணதேவர் அபயமளித்துத் தம் தளகர்த்தன் நாகமனை நோக்கித் 'தென்னாடு சென்று சோழனைச் சிறை செய்து பாண்டியற்குப் பதியளித்து வா,' என இயம்பினர்.

களம்—2

அரசர்க்குச் செல்வப்புதல்வி காஞ்சனையம்மன். இம்மங்கைக்குத் தோழியர், மூர்த்தியம்மன், மதிவிலாசினி முதலானவர்கள். இக்காஞ்சனை, நாகமன் புதல்வனும் நம் கதா-நாயகனுமான

விசுவநாதனிடத்தே ஆராக் காதல் கொண்டாள். இளமையில் அவனுடன் விளையாடியும், பல நூல்கள் பயின்றும், உரையாடியும் வந்தமையின், காதல் மிக்குயர்ந்தது. பருவமுற்ற காலையில் நாதனையன்றி ஒருவனையும் ஆடவனென்று கருதாள்; தான் தொழுந் தெய்வத்துக்குப் பல பணிகளாற்றி வீணையை மீட்டிப் பாடி, 'நாதனைத் தா,' என்று வேண்டுவள்; உருவெளித் தோற்றங் கண்டு மயங்குவள்; தன் அருமைத்-தோழி மூர்த்தியம்மனிடத்தே சொல்லி வருந்துவள்.

களம்—3

அரசர் ஆஞ்ஞையைத் தாங்கிய தளகர்த்தனான நாகமன், தனது அரிய படைத்தலைவன் அரியநாதனை அழைத்து, 'பாண்டிநாடு செல்லப் படையீட்டினையோ?' என்று வினவ, அவனும், 'சேர்த்தனன். நாமும் செல்லலாம்,' என்றனன். அப்போது நாகமன் தன் வீட்டிலே வந்து தன்னைப் பயணஞ் செய்தனுப்பக் கூடியவர்கள் முன்னிலையில் தன் குமாரன் விசுவநாதனை இளவரசன் அச்சுதப்பனிடத்தே சேர்ப்பித்து, அவனுக்குப் பல நன்மொழிகள் கூறினன். விசுவநாதன் தாயாகிய மங்கம்மாள், தன் புத்திரன் பிரிவாற்றாது கலங்கி வருந்தினள். அப்போது விசுவநாதன் தாயைத் தேற்றித் தந்தையுடன் செல்வதே தருமமெனக் கூறினன். பின்னர்ப் பாண்டியனும் சேனையும் உடன்வர, நாகமன் போர்க்கோலங்கொண்டு போயினன்.

களம்—4

இக்களத்தில் காஞ்சனையின் காதல் மிக்குயர்ந்து வளர்தல் கூறப்படுகின்றது: ஒருநாள் மாலைப்பொழுதில் அச்சுதன், விசுவநாதன் ஆகிய இருவருடனும் காஞ்சனை உத்தியான வனத்தில் உரையாடிக்கொண்டு நிற்றலும், அப்பொழுது விசுவநாதனுடைய மன்மத வடிவையும், கல்வித்திறத்தையும், வாக்கின் சாதுரியத்தையும், சற்குணத்தொகுதியையும், எண்ணங்களின் மேம்பாட்டையும், எளியவர்க்கிரங்குந் தன்மையையும், தெய்வ பக்தியையும், அவர்கள் சம்பாஷணை மூலமாய்க் காஞ்சனையம்மன் அறிந்து வருந்தலும்,

தானும் சம்பாஷணையிற் புகுந்து சோலையை வருணிப்பதுபோல இங்கிதமாகத் தன் கருத்து வெளிப்படச் சில வார்த்தையுரைத்தலும், அவ்வார்த்தையைக் கேட்ட விசுவநாதனும் தனது கருத்துக் குறிப்பாகத் தோற்றவும் தான் மேற்கொண்ட பக்தி மார்க்கம் தனது வார்த்தையால் விளங்கவும் மறு மொழி கூறலும் நன்கு புலப்படும். அச்சுதன் நினைவெல்லாம் தாழ்ந்த சிங்காரச் சுவையிலேயே பரந்து நிற்க, விசுவநாதன் எண்ணங்களெல்லாம் மீதுயர்ந்து செழித்தல் புலப்படும்.

அங்கம்—II Act

களம்—1 Scene

வீரசேகரச்சோழன் தன் படைகளை அணி வகுத்துச் சோழ மாளிகைப்புறத்தே தங்கினன். சேனை இரு கூறாக வகுக்கப்பட்டு ஒரு கூற்றுக்குத் தானும், மற்றொன்றிற்குக் கோலாகலனும் படைத்தலைவராய் அமைந்தனர். அரசன் படையில் குபேரன் யானைப்படைத் தலைவன். கோலாகலன் படையில் வில்வலன் விற்படைத் தலைவன். இவ்விதமணிவகுத்து இச்சேனை நாகமன் சேனையை எதிர்பார்த்து நிற்ப, அரியநாதன் தூதாய் வந்து, "பாண்டியனுக்குக் கன்னிநாட்டைத் தந்து சமாதானஞ் செய்து கொள்ள இஷ்டமா?" என்று வீரசேகரனைக் கேட்டான். அப்பொழுது வீரசேகரன், தன் துணைவர் பலத்தைக் கருதிப் புன்னகை செய்து, 'கன்னி நாட்டைத் தர முடியாது,' என்று மறுத்தான். அரியநாதன், போர் ஒன்றே நேருமென்று திரும்பி வந்தனன்.

களம்—2

நாகமன் படையும் இரு கூறாகப் பிரிக்கப்பட்டது. அவ்விரு படைகட்கும் முறையே நாகமனும், அரியநாதனும் தலைவராவர். யுத்த களத்தில் வீரசேகரன் படை நாகமன் படையை எதிர்த்து நிற்க, அரியநாதன் கோலாகலனை எதிர்த்தான். அரியநாதன் தன் ஆயிரங்காலாட்களடங்கிய படையையும், நாலாயிரங் குதிரைகளடங்கிய படையையுங்

கொண்டு அரிய போரிட்டு, ஓடிப்போன பகைவர் இருநூற்றுவரொழிய மற்றை யாவரையும் கொன்றனன். கோலாகலனுயிரும் கவரப்பட்டது. தன் பக்கத்து ஐந்நூறு வீரர்கள் மாண்டதைக் கண்டு மிகவும் மனம் வருந்திக் காயப்பட்ட எண்ணூறு வீரர்களையும் தக்க விடுதிகளுக்கனுப்பிச் சேமப்படைவீட்டிலே தங்கியிருந்த தளகர்த்தன், சதாசிவராயனுக்குக் கடிதம் அனுப்பினன். சதாசிவராயன், எண்ணூறு வீரர்களைச் சேர்த்துக் கொண்டு, அரியநாதனைச் சேர்ந்தான்.

[இக்களத்தில் அரியநாதன் வரலாறு செம்மையாய்ச் சதாசிவ ராயனால் வீரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.]

களம்—3

போர்க்களத்தில் மற்றொருசார் நாகமன் படை, வீரசேகரச் சோழன்படை முன்னின்று போர் செய்யத் தொடங்கிற்று. நாகமன் பக்கம் ஜெயமோ, சோழன் பக்கம் ஜெயமோ என்று சொல்வதரிதாகும்படி உச்சிக்காலம் வரையும் சண்டை நடந்தது. அரியநாதன், கோலாகலன் சேனையைச் சின்னபின்னஞ் செய்த பிறகு, சதாசிவன் தன்னுடன் கொண்டுவந்த எண்ணூறு போர் வீரர்களுடன் விரைந்து போர்க்களத்துக்கு வந்து வீரசேகரச் சோழனைப் பின்னே வளைந்துகொண்டான். வீரசேகரச் சோழனுக்கு முன்னே நாகமனும், பின்னே அரியநாதனுமிருந்து போர் செய்த காலையில் சொக்கலிங்கன் என்னும் ஈழப்படைத் தலைவன், சோழன் படையினின்றும் விலகி, அரியநாதனைச் சேர்ந்தான். இவன் அவ்வாறு செய்தது இராஜத் துரோகமன்று. இச்சொக்கலிங்கன் முன்னமே சோழனால் துரத்தப்பட்ட சந்திரசேகர பாண்டியனுடைய வலக்கையன்ன துணைவன். இவன், தன்னரசன் துரத்தப்பட்டது முதல் சோழனிடத்தே மிகுந்த அருவருப்புக் கொண்டிருந்தான்; இப்போது சமயம் வாய்த்ததும் சோழனை விட்டு விலகினன். அது நிற்க. யுத்த களத்தில் மாலைப் பொழுதில் பெரும்போர் விளைந்தது; சோழன் கொல்லப்பட்டான். அவன் சேனையும் புறங்காட்டி ஓடிற்று. அரியநாதனும், நாகமனும் ஜெயபேரியடித்துக் கலந்தனர்.

[இவ்விஷயம் இக்களத்தில், யாழ்ப்பாண வீரர்களும் சிங்கள வீரனும் பேசும் சம்பாஷணையிலமைந்துளது.]

களங்கள்—4, 5

வெற்றி கொண்டபின் நாகமனும், அரியநாதனும், சந்திர சேகர பாண்டியனும், படைத்தலைவர்களும் இனிது வீற்றிருந்து உரையாடிக்கொண்டிருக்க, சோழன் மனைவியாகிய கனகவல்லி துக்கமடைந்தவளாய்த் தனது அவலத் தன்மையைப் புலம்பிக் காட்டித் தன் கணவன் உடலைத் தரும்படி வேண்டினள். நாகமன் மிகுந்த கிருபையுடன் அவளுக்கு ஆரியப்படையூரையும், ஆயிரம் வேலிகளையும், அரிவையரிற் சிலரையும் ஜீவனத்திற்குத் தந்து, இன்னுரை கூறியனுப்பினன்.

களம்—6

துங்கபத்திரையின் பாங்கர் ஒரு திவ்யமான பூஞ்சோலையுண்டு. அப்பூஞ்சோலையில் காஞ்சனை தன் தோழியர் ஆயத்தோடும் செவிலியர் கூட்டத்தோடும் சென்று, நீராடி, மலர் கொய்து, பூச்சூடி, அமுதுண்டு, பாங்கியருடன் பிணங்கியும் பிறகு அவருடனிணங்கியும் மன்மத கோட்டம் வளைந்து கும்மி கொட்டி விளையாடினள்.

களம்—7

விளையாடிய இளைப்புத்தீர, அவரவர் தத்தம் இஷ்டப்படி உலாவி வருவதென்று தீர்மானித்தனர். அப்படியே காஞ்சனை துங்கபத்திரையின் கரையோரமாய் மேற்றிசை நோக்கி யாரும் வாராத ஒரு பக்கம் உலாவிச் சென்றனள். அப்பொழுது பீஜபூர்ச் சுல்தான் இஸ்மேல் அடில்ஷாவின் மகனை மாலு என்பவன் சூழ்ச்சியால், காஞ்சனை அபகரிக்கப்பட்டு, யாவர் திருஷ்டியிலும் படாமற் கொண்டுபோகப்பட்டாள். இராவணன் சீதையைச் சிறை கொண்டதுபோல மாலுவுங் காஞ்சனையைக் கொண்டு சென்று, விஜயபுரி நகரத்தில் ஒரு மாளிகையில் வைத்தான். இது இங்ஙனமாக, பூஞ்சோலையில் மாதர்களும் செவிலியர்களும் காஞ்சனையைக் காணாது வருந்தி, நாநா பக்கங்களிலுந் திரிந்து தேடி அல்லலுற்று நிற்கையில், இளவரசன் அச்சுதப்பனும் நம் கதாநாயகனாகிய விசுவநாதனும் சோலைக்குள் வந்தனர். மாதர்

களுக்குண்டாகிய குழப்பத்தின் காரணத்தை அறிந்துகொண்டு காஞ்சனையைத் தேடிவர விசுவநாதன் துணிந்தான்.

களம்—8

சோலையின் வழியே தேடிச்சென்ற விசுவநாதன், அவ்விடங்களிலுள்ள அடிச்சுவடுகளையும் வண்டி சென்ற வழியையும் அச்சுதப்பனுக்குக் காட்டிக் 'காஞ்சனை சிறைப்பட்டனள் போலும்!' என்று கூறி நிற்க, அங்கே காஞ்சனையின் மோதிரம் காணப்பட்டது. மோதிரத்தை எடுத்துப் பிரலாபித்து, காரைச் செடியின்மீது கிடந்த கட்டுண்ட தாமரைப்பூவை எடுத்து, அந்த இங்கிதத்தால் காஞ்சனை பகைவரால் சிறை செய்யப்பட்டதை அறிந்து, தான் அவளைச் சிறை மீட்பதாகச் சபதம் கூறினன். அச்சுதன் அதுவே சரியென்று கூற, இருவரும் நகர் நோக்கிச் சென்றனர்.

அங்கம்—III

களம்—1

விசுவநாதன் காஞ்சனை சிறைப்பட்டாளென்று அரசருக்குத் தெரிவித்து, அவளை மீட்டு வருவேனென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள, அரசர், "அப்படியாகில், விஜயபுரிக்கு நீயே என் தூதனகச் சென்று, சுல்தான் இஸ்மேல் அடில்ஷாவைக் கண்டு, வடுகல் துறைமுகத்தில் அவனுடைய ஸ்தானபதியான ரசல்கான் நமது கப்பல்களைக் கொளுத்தி வர்த்தகத்திற்கு இடையூறு செய்தானென்று தெரிவித்து, அவ்வாறு அவன் செய்ததற்குச் சுல்தானின் ஆஞ்ஞையுண்டோவென்றும், அவ்வாறு அரசன் உத்தரவு செய்திராவிட்டால் ஸ்தானபதியைத் தண்டிக்கும்படி கேட்டும் வா," என்றார். விசுவநாதன் அப்படியே புறப்பட்டு வந்தான். இஃது இவ்வாறிருக்க, விஜயபுரிக்கோட்டையில் ஒரு மாளிகையில் காஞ்சனை சிறையிருந்து வருந்தினள். அவள் ஒரு நாள் மாலைப் பொழுதில் சந்திரன் தனது ஒளியை வீச, மாளிகையின் நிலா முற்றத்தின்மீது சோர்ந்து கிடந்து பிரலாபித்தாள். சுல்தான் மானு அங்கே வந்து தனது காதலைக் கூறி வேண்டினன். காஞ்சனை ஒரு சூழ்ச்சியைத் தன் மனத்தில் நினைத்து, ஒரு மாத காலம் தவணை கூறி விடுத்தாள்.

களம்—2

சுல்தான் இஸ்மேல் அடில்ஷாவைக் கண்டு விசுவநாதன் தனது தூதுரைப்ப, சுல்தான் மிகவும் வருந்தி, மந்திரி கும்மல் கான் வழியாக ரசல்கானுக்குத் தண்டனை விதித்து, ஒரு கடிதம் போக்கினன். விசுவநாதன் அவன் நிலைமைக்குத் தக்கபடி உப சரிக்கப்பட்டுச் சலாபத்கான் வீட்டில் அன்றிரவு தங்கினன்.

களம்—3

அந்நிலா முற்றத்துக் காஞ்சனை தனியே நின்று மறுபடியும் வருந்தச் சகியாதவளாய் அன்றிரவே அம்மாளிகையைச் சூழ்ந்த அகழியிலே விழுந்து தன்னுயிரை மாய்ப்பதாகப் புலம்பிக் கொண்டிருக்க, அச்சமயத்து விசுவநாதன் அங்கே புகுந்தான். அவளுடன் உரையாடி அவள் காஞ்சனையென்றேயறிந்து ஜீவரா யனை விளித்து, நூலேணியை வாங்கிச் சுருளவிழ்த்து, நிலா முற் றத்து நின்ற காஞ்சனை பிடித்துக்கொள்ள ஒரு நுனியை விட் டெறிந்தான். காஞ்சனையும் தைரியத்தோடு அம்முனையைப் பிடித்து நிலா முற்றத்து விளங்கிய துவசத்தம்பத்தினடியிற் கட்டி னுள். ஜீவராய் மற்றொரு முனையை ஒரு மரத்திற்கட்ட, விசுவ நாதன் விரைவில் ஏணி ஏறிச் சென்று, நிலா முற்றத்துக் குதித் தான். காஞ்சனை களிகூர்ந்து, அகழியை இலக்ஷியம் செய்யாது, ஏணியின் வழியே கீழிறங்கினுள். விசுவநாதன் பின் தொடர்ந்து வந்து காஞ்சனையை நிலத்திற்கண்டு கடவுளை வந்தித்து, நூலே ணியை அறுத்தெறிந்து, மேலே செய்ய வேண்டிய காரியங்களை நினைத்தான். விசுவநாதன் தன் உடைகளைக் களைந்து, காஞ்சனை பூணும்படி செய்தனன். காஞ்சனை விசுவநாதனுகவும் விசுவநாதன் ஜீவராய் உடைகளைத் தரித்து அவனைப்போலவும் முறையே மாறு வேடம் பூண்டு, ஜீவராயைத் தனியே விடுத்துப் பிறகு அவனை ஏற்றுக்கொள்வதற்கு வேறு சூழ்ச்சி செய்வதாகச் சொல்லிச் சலாபத்கான் வீட்டுக்குச் சென்றனர்.

களம்—4

சலாபத்கான் வீட்டில் காஞ்சனை அவன் மனைவியும் தனது தோழியுமான நூர்ஜஹானேடு உரையாடிக்கொண்டிருக்க, சலா பத்கான் தனது சேவகன் உடைகளை எடுத்துக்கொண்டு வெளியே சென்று, ஜீவராயனுக்கு மாறு வேடம் புனைவித்து, வீட்டுக்

கழைத்து வந்தனன்; பிறகு இம்மூவரையும் இவர் நாடு நோக்கிப் பகலெழுவதன்முன் அனுப்பிவிட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, அனுப்பிவிட்டான்.

அங்கம்—IV

களம்—1

விசுவநாதன் காஞ்சனையைச் சிறைமீட்டு விஜயநகரத்துக்கு வந்து, அரசனைக்கண்டு, நடந்தது விளம்ப, அரசன் காஞ்சனையை அவள் மாடத்திற்கனுப்பி, மந்திரி முதலானவர்களோடு சுல்தான் அடில்ஷாவின் சூழ்ச்சிகளைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தான். அப்பொழுது பாண்டிவாசியொருவன்வந்து, பாண்டி நாட்டிற் சந்திரசேகரனைச் சிறை செய்து நாகமன் சிம்மாசனம் ஏறிக் குடிகளை வருத்துந் தன்மையைப் பலவாறு எடுத்துக் கூறினான். அரசர் மிகுந்த கோபமடைந்து, நாகமனைத் தண்டிக்கும் வழியை நினைத்தார். அப்போது மந்திரிகள் பல விதமான ஆலோசனைகள் செய்து, கடைசியாக விசுவநாதனையே பாண்டி நாட்டுக்குச் சேனையுடன் அனுப்புவதாகத் தீர்மானித்தார்கள்.

களம்—2

விசுவநாதனும் அவ்வாறே சென்று, சோழவந்தான் பக்கத்துத் தங்கினன். நாகமன், தன் குமாரன் வரவைக்கேட்டு அவன் தாய் மங்கம்மாளைத் தூதனுப்பினான். மங்கம்மாள், விசுவநாதனை அவன் கொண்ட கருத்தினின்றும் மாற்றத் தன்னால் ஆன அளவும் முயன்று பார்த்தாள். விசுவநாதன் இராஜபக்தியும் தருமசிந்தனையுமுள்ளவனுதலால், இணங்காமல், தாய்க்கு இதோபதேசம் கூறி விலக்கினன். தன் கருத்து இயலாதென்று கண்டு தாயும் மதுரை நோக்கிச் சென்றனள்.

களம்—3

சோழவந்தான் பக்கத்தில் தந்தையும் மகனும் தானையுடன் வளைந்து போர் புரிந்தனர். சண்டையில் மதுரைச்சேனை தளர்ச்சியடைய, நாகமன் சிறைப்பட்டனன்.

[இப்போரின் வரலாறும், விசுவநாதன் வெற்றியும் ஒரு மதுரைப்புலவர் பாடுகிற தானை, வஞ்சி, வாகை மாலைகளால் நன்கு விளங்கும்.]

களம்—4

அரியநாதன் கூறிய பல நன்மொழிகளையும் ஏற்றுக்கொள்ளாத நாகமன் வீரங்குன்றவும், விசுவநாதன் சந்திரசேகர பாண்டியனைச் சிறைமீட்டு, அவனைச் சிம்மாசனமேற்றி, அரியநாதனை மந்திரியாக அமைத்துத் தன் பெற்றோருடன் விஜயநகர் நோக்கிச் சென்றனன்.

களம்—5

விஜயநகரத்தில் காஞ்சனையம்மன் தன் தோழியர்களோடு கவலையற்று விளையாடுபவள், சிற்சில சமயங்களில் காதலனை நினைந்து பெருமூச்செறிவாள்; ஒரு நாள் தன் தோழியோடு கழலாடிக்கொண்டிருக்கும்பொழுது விசுவநாதன் பெயரைத் தன் தோழி சொல்லக்கேட்டு, மிகுந்த வருத்தமடைந்து சோர்ந்தாள். அப்போது மூர்த்தியம்மனோடு அங்கேவந்த கிருஷ்ணதேவர், காஞ்சனையின் காதலை உணர்ந்து, அவளை விசுவநாதனுக்கே மணம்புரிவிக்கத் தீர்மானித்துக்கொண்டார்.

களம்—6

விசுவநாதன், கிருஷ்ணதேவர் சபையில் தன் தந்தையை நிறுத்திச் சந்திரசேகரனைச் சிம்மாசனம் ஏற்றிய நற்செய்தியைக் கூற, நாகமன் தான் செய்த பிழையை ஒப்புக்கொண்டவனாய், மன்னிப்புக் கேட்டான். கிருஷ்ணதேவர் அவ்வாறே மன்னித்து, நாகமனைத் தழுவிச் சம்பந்தியென்று உறவாடித் தம் மகள் காஞ்சனையை மருமகளாக அங்கீகரிக்கும்படி வேண்டினர்.

களம்—7

பூங்காவனத்தில், காஞ்சனையும் விசுவநாதனும் சந்தித்து உரையாடிக்கொண்டிருப்ப, அரசரும் நாகமனும் அவ்விடம் போந்து, அவர்களைக்கண்டு ஆசீர்வதித்தனர். குருபக்க, இவர்களது ஒற்றுமையைக்கண்டு மனத்தில் தியானிக்க, அப்பொழுது தேவகானம் முழங்கி, மலர் மழை பெய்தது. மூர்த்தியம்மன் தனது முத்து மாலையை ஒரு பூங்கொடிக்கு அணிந்து, ஆனந்தக் கூத்தாடினள்.

களம்—8

விசுவநாதனுக்கும் காஞ்சனைக்கும் விவாகம் நடந்தது. அந்தக் கலியாணத்தைக் கண்டு களிக்கப் பல தேய மன்னர்களும் சிற்றரசர்களும் வந்து நிறைந்தார்கள். அரசர் கிருஷ்ணதேவர் மிகுந்த சந்தோஷத்தோடு யாவரையும் உபசரித்துத் தக்க மரியாதைகள் செய்தனர் மதுரைப் புலவர் இவைகளையெல்லாங் கண்டு பேரானந்தமடைந்தனர்.

அங்கம்—V

களம்—1

கிருஷ்ணதேவர் விண்ணுலகாளச் சென்றதும், அச்சுதராயன் பட்டம் பெற்றான். தென்னாட்டுக் குறுநில மன்னர் பலர் திறை கொடாது தருக்குடன் இருப்ப, அவர் செருக்கையடக்கவேண்டியும் சோழன் கஞ்சி நம்பியைச் சிறையிட்டுத் திருவிதாங்கூர்த் திருவடியைப் பணியவைத்துப் பாண்டியனை உயர்த்தவேண்டியும் பெரும்படையீட்டி அச்சுதன் தென்னாடெங்கும் திக்கு விஜயஞ் செய்தான். அப்போது சுல்தான் இஸ்மேல் அடில்ஷா காவத நாட்டைப்பற்றிய பழஞ்சண்டையைக் கிளறப் போர் விளைந்தது. இரு திறத்தினரும் படையீட்டி ரேய்ச்சூர் நோக்கிச் சென்றனர்.

களம்—2

ரேய்ச்சூர் முற்றுகை நடந்துகொண்டிருக்கையில், ஒரு சார் படைத்தலைவனான விசுவநாதன், மாலுவின் பெருஞ்சேனை கிருஷ்ணா நதியைக் கடந்து தென்கரையில் வந்துற்றதென்று கேள்வியுற்று, அப்படையுடன் போர் செய்யக் கருதினன். அப்போது அங்கே வந்த கச்சிப்புலவரால் அரியநாதன் கோட்டையைப் பிளந்து உள்ளே சென்று வெற்றிக்கொடியை நாட்டிய நற்செய்தியைக் கேட்டு, மனமகிழ்ந்து, அந்தக் கச்சிப்புலவரையே அரியநாதனிடத்துத் தூதனுப்பி, தான மாலுவின் சேனையுடன் போர் புரிய முன் சென்றதைத் தெரிவித்துப் பின் வரும் அச்சுதனை விரைவில் வரும்படி செய்கவென்று அறிவித்தனன்; பிறகு, தானினைத்த படியே தன் சேனையுடன் போர்க்களம் நோக்கிச் சென்றனன்.

களம்—3

விசுவநாதன் தனது பெருஞ்சேனையோடு கிருஷ்ணா நதியின் தென்பால் மாலுவை எதிர்த்தான். போரில் மாலுவின் சேனை உடைந்தோட, அவனும் புறங்காட்டி ஓடி, நதியின் வடபாற் புக்கனன். இதைக்கேட்ட சுல்தான் இஸ்மேல் அடில்ஷா மிகவும் வருந்திப் 'போர் செய்யுங்காலம் இஃது அன்று,' என நினைத்துச் சமாதானஞ் செய்துகொள்ள விரும்பி வந்தான். அச்சுதன் தனது காவத நாடு தன் வசப்பட்டால் சமாதானம் ஆகுமென்று கூற, அன்று வெற்றி கொண்ட விசுவநாதன் உடன்படிக்கையைப் பூர்த்தி செய்யச் சென்றான்.

[இக்களத்தில் விசுவநாதன் போர்த்திறம் மதுரைப்புலவரால் அச்சுதனுக்குக் கூறப்படுகின்றது.]

களம்—4

சமாதான உடன்படிக்கையைச் செய்யச்சென்ற விசுவநாதன் இஸ்மேல் அடில்ஷா முதலானவர்களோடு இரவெல்லாம் உரையாடி, உடன்படிக்கையின் நிபந்தனைகளைத் தீர்மானித்து, ஒரு பத்திரம் எழுதி முடித்தான். மறுநாட் காலையில் இஸ்மேல் அடில்ஷா கிருஷ்ணா நதியைத் தாண்டித் தென்கரை வந்து, அச்சுதனைக்கண்டு வணங்கி நட்புக்கூறச் சமாதானம் நிகழ்ந்தது. இருவரும் ஒரு நாள் அவ்விடம் நட்புடன் தங்கிப் பிறகு தத்தம் நகர் நோக்கிச சென்றனர்.

களம்—5

இஸ்மேல் அடில்ஷாவுடன் உடன்படிக்கை செய்துகொண்டு அரசன் அச்சுதராயன் விஜயநகரஞ் சென்று, அரசு புரிந்தனன். ஒரு நாள் பாண்டி நாட்டிலிருந்து சில தூதுவர் வந்து, அரசன் சந்திரசேகரன் இறந்தான் என்றும், அவன் குமாரன் குண வீர வர்மன் அரசாளும் வன்மையிலன் என்றும் கூறி, விசுவநாதனை அனுப்பும்படி வேண்டிக்கொண்டனர். அப்படியே அரசன் விசுவநாதனை மதுரைக்கு அனுப்பினான். விசுவநாதன் காஞ்சனையோடும் தன் மகன் குமார கிருஷ்ணப்பனோடும் அவ்விடஞ் சென்று, குணவீர வர்மன் பெயராலரசுபுரிந்து, அரியநாதனுடன்

கலந்து ஆலோசனை செய்து, அந்நாட்டிற்குப் பல நன்மைகளை இழைத்து வர, வடபால் விஜயநகரத்து அச்சுதராயன் காலஞ் சென்றனன். அவன் குமாரன் வேங்கடாத்திரியின் காலத்தில் மந்திரி சாலுவதிம்மன் சூழ்ச்சிகளால் ராஜ்யத்திற் பல கலகங்க ளுண்டாக, பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹீம் அடில் படையெடுத்து வந்து நகரை வருத்த, நன்னிலை கெட்ட மந்திரி அரசன் வேங்கடாத்திரியையுங் கொன்று, தானுந் தற்கொலை புரிந்துகொண் டனன். அரச குடும்பத்துப் பிரபுக்கள் சதாசிவராயனையும் இராமராஜனையும் தமக்குத் தலைவராகக்கொண்டு இப்ராஹீம் அடி லுக்கு ஐம்பது லக்ஷம் வராகன் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டார்கள். ராஜ்ய பாரத்தை வகித்த சதாசிவராயன், சில நாளில் விலகிவிட, ராமராஜனே பட்டத்திற்கு வந்தனன். இத்தனை குழப்பங்கள் விஜயநகரத்திலுண்டாகிச் சீர்குலைந்து வருநாளில், விசுவநாதன் மதுரையிலேயே இருக்கும்படி நேர்ந்தது. பாண்டி நாட்டிற் பல்வளம் பெருகி மாந்தர் இன்புறு நாளில், வெகு நாளாய்ச் சித்தங் கலங்கினவனாய் இருந்துமில்லாதவன் போன்ற குண வீர வர்மன், சிவபதஞ் சென்றனன். அப்போது நகரமாந் தர் தமக்கு விசுவநாதனையே அரசனாக முடிசூட்டவேண்டுமென்று இராமராஜனுக்கு விண்ணப்பம் செய்துகொள்ள, அவனும் அவ் விதமே முடிசூட்டுகவென ஜீவராயனை அனுப்பினன். ஜீவராயன் சில பிராமணோத்தமர்களோடு கங்கா ஜலத்தையும் காளிகா தேவி யையும் அரச சின்னங்களையும் எடுத்துக்கொண்டு, மதுரை மாநகரம் வந்து, நல்லோரையில் விசுவநாதனுக்கு முடி சூட்டினன். நகரங் களிகூர்ந்தது. அரசனும் தெய்வபக்தியுடன் கி.பி. 1559௵ முதல் 1563௵ வரையில் ராஜ்ய பரிபாலனஞ் செய்தனன்.

நாடக பாத்திரங்கள்

கிருஷ்ண தேவராயர் - விஜய நகர் அரசர்.
அச்சுதப்பன் - விஜய நகர் இளவரசன்.
சின்ன வேங்கடாத்திரி - அச்சுதன் குமரன்.
குரு பக்க - அரசன் குரு.
சாலுவதிம்மன் - கிருஷ்ணதேவர் மந்திரி.
தென்னாலிராமன் - விதூஷகன்.
செவ்வப்ப நாயக்கன் - கிருஷ்ண தேவர் மைத்துனன், தஞ்சை அரசன்.
நாகமன் - கிருஷ்ணதேவர் தளகர்த்தன்; பாண்டி நாட்டைக் கவர்ந்தவன்.
விசுவநாதன் - கதாநாயகன்; நாகமன் புத்திரன்; காஞ்சனை காதலன்.

அரியநாதன்
இராமராஜன்
சதாசிவராய்
ஜீவராய்
கிருஷ்ணராய்
வரதராய்
ஜம்புராய்
எடத்தராய்
} படைத் தலைவர்கள்.

சகளராஜகுமாரன் - அச்சுதன் படைத் தலைவன்.
குமார கிருஷ்ணப்பன் - விசுவநாதன் குமரன்.
சந்திரசேகரன் - பாண்டியன்.
குணவீரவர்மன் - பாண்டியன் மகன்.
வீரசேகரன் - சோழன்.
கோலாகலன் - சோழன் தளகர்த்தன்.
குபேரன் - சோழன் யானைப் படைத்தலைவன்.

குணவர்மன்
வில்வலன்
இராஜசேகரன்
} சோழன்படைத் தலைவர்கள்

சொக்கலிங்கன் - ஈழப்படைத் தலைவன்.
சுல்தான் இஸ்மேல் அடில்ஷா - விஜயபுரி அரசன்.

கும்மல்கான்
அஷாடாகான்
} சுல்தான் மந்திரிகள்.

சலாபத்கான் - சுல்தான் சேனாபதி.

உம்மதுஷா
அமீர்பீரிது
} சுல்தான் படைத் தலைவர்கள்.

சுல்தான் மாலு - விஜயபுரி இளவரசன்.
மங்கம்மாள் - நாகமன் மனைவி.
காஞ்சனை - கிருஷ்ணதேவர் புத்திரி; விசுவநாதன் காதலி.
இலட்சுமியம்மன் - இராமராஜன் மனைவி; காஞ்சனை உடன் பிறந்தாள்.
சின்னம்மன் - காஞ்சனையின் சிறிய தாய்.

மதிவிலாசினி
மூர்த்தியம்மன்
கஸ்தூரி ரங்கம்மன்
சுந்தரியம்மன்
} காஞ்சனையின் தோழிகள்.

செவிலி - காஞ்சனையின் செவிலி.
மம்தாஸ் - ஒரு காவற்பெண்.
நூர்ஜஹான் - சலாபத்கான் மனைவி.
கனகவல்லி - சோழன் மனைவி.
பூந்தத்தை - ஓர் ஈழப்பெண்.
மதுரைப் புலவர் - போர்க்களம் பாடும் புலவர்.
கச்சிப்புலவர் - விசுவநாதன் புடையிருந்த புலவர்.
படைத் தலைவர்கள், கடைகாவலர்கள், சேவகர்கள், காலாட்கள், ஒற்றர்கள், யாழ்ப்பாணவீரர்கள், சிங்கள வீரர்கள், மாதர்கள், தூதர்கள், சாதுக்கள், நகர வாசிகள், புலவர்கள்.
இடம் - விஜயநகரம், விஜயபுரி, சோணாடு, பாண்டி நாடு.

விசுவநாதம்

காப்பு

நேரிசை வெண்பா

சீல குணமுடையன் செங்கோலன் திண்டோளன்
ஞாலம் புகழ்விசுவ நாதன்சீர்—பாலனைய
பைந்தமிழின் நாடகமாப் பாடத் துணையாகும்
தந்திமுகத் தெந்தை சரண்.

முதல் அங்கம்

முதற்களம்

இடம் : விஜயநகரம், இராஜ சபை

காலம் : காலை

பாத்திரங்கள் : கிருஷ்ணதேவராயர், சாளுவ திம்மன், நாகமன், இராமன், செவ்வப்ப நாயக்கன், குருபக்க, கடைகாப்பாளன் முதலியவர்கள்

நேரிசை ஆசிரியப்பா

குரு: வாழ்க வாழ்க மன்னனும் சபையும்!
ஆழ்ந்த கவலையோ டரசன்வீற் றிருத்தற்
கேன்ற காரணம் யாதோ! அறியேம்!

கிருஷ்: ஆன்ற கேள்வி ஐயரே சரணம்!
அடியன் கவலை அறைதரக் கேண்மின்:
குடியெலாம் ஓம்பிக் குரைகடல் உடுத்த
வையகம் எல்லாம் மதிக்குடைக் கீழ்வந்
துய்யப் புரந்த துமதருள் அன்றோ!

இந்நாட் டொருசார் ஏழை இடையன்
பன்னு ளுந்தான் பாங்கர் உள்ள
செறிபொழில் அலர்ந்த சிற்றூற் றிற்கே
மறிகளை ஓட்டி வான்கரை விடுத்துத்
தென்றலங் குழவி தேமலர் படிந்து
மன்றலந் திவலை வாரிச் சிதற R.C
மெய்ப்புள குற்று விழைந்துசா தாரி
கைப்புற் குழலிற் கனிந்து பாடிக்
கவலை அற்றுக் களிப்புடன் இருந்தான்.
அவனைப் போற்சுகம் அடைபவ ரெவரே!
மாற்றலர் தம்மை மடித்து மன்னுயிர்
R.C போற்றினன் உடையிற் பொதிந்து வைத்த
தீப்போல் ஓங்கும் தீராப் பகைவன்,
காப்புறும் விசய புரிகா வலவன்,
சுல்தா னிசுமேல் சூழ்வினை பலவால்!
கல்லேய் மதிலும் கணிப்பில் பொறிகளும்
பாதலம் தொட்டுப் படிந்த கிடங்கும்
ஆதர வாக அமைந்தகாட் டரணும்
சேம மாகச் சிறந்தே இருப்பினும்
யாமப் பகைவனை அடக்குமா றெதுவென்
றெண்ணியே யிருந்தனன், எழில்மிகு பெரியீர்!

நாகம: வெற்றி வேலோய்! வீங்கிருட் பிழம்பை
எற்றிப் பிளக்கும் இரவி ஒப்பத்
துன்னலர்த் துடைத்துத் துவசம் ஏற்றி
எந்நக ரையும்நின் இணையடிப் படுத்தி
வாகை பூண்டு வான்புகழ் வீரத்
தோகையை மணந்த தோன்றலே! உன்வலிக்
கின்னவன் இலக்கோ! இலகுநாண் பூட்டும்
வின்னலம் அறியான்; வெய்ய பகழி
எய்யவும் அறியான்; இழிதருந் தன்மையன்;
செய்யும் சூழ்ச்சியிற் செருத்திடல் ஆகுமோ
அன்றியும், இரவி அமைச்சர ஓங்கி

வென்றியம் பதாகை மீதுற வீக்கி
எந்திரம் பலவுடன் இலங்கும் இஞ்சி
மந்தரம் போல வயங்கும் வடபால்.
வேங்கை இரித்து வேழ மருப்பெறிந்
தோங்கலில் உள்ள உயர்பொருள் வாரித்
திரையிரு மருங்கும் செலுத்தும் துங்கபத்
திரையெனும் நதியே திகழ்தர விளங்கும்.
அன்னதின் ஆழம் ஆர்கலி ஒத்தது;
பின்னதின் அகலம் பெரும்புறக் கடலே;
செவ்வியிற் பலரும் சேர்துறை அற்றது;
கவ்விப் பற்றுங் கராத்தது; மருங்கிற்
செங்குத் தானகற் செறிவுள ததனுல்
எங்குத் தானைவந் திழிந்தே றுவது?
மன்னுமந் நதியின் வடகுண திசையில்
துன்னுபே ரணைக்கண் துன்னலர் துன்னு
வண்ணம் இஞ்சி வான்தோய்ந் தளாவி
எண்ணரும் பொறியோ டிலங்கிப் படையொடு
கலைமான் ஊரும் கன்னிகாப் புடைத்தாய்
மலைநிகர் என்று வழங்கும் மாட்சியுற்
ருனைகுண் டெனும்பெயர் அமைந்துள அரணென்
றானகு வேற்கரத் தொருபதி னுயிரர்
கறையடி நிகர்தரும் காளை வீரர்கள்
உறைதரப் பெற்ற துணர்ந்துன் திருவுளம்
கலங்கல் என்னே? காசினி புரக்கும்
விலங்கல் வலியுடை வேந்தர் வேந்தே!

திம்ம: தானை காவல! சாற்றிய துண்மையே.
ஏனைய வலிநமக் கிருப்பினும் எதிரி
தன்னுடை நிலையும் தந்திரப் பெருக்கமும்
அன்னவற் குறுதுணை அரசர் ஆற்றலும்
சிந்தனை முற்றும் செய்தபின் அன்றே
நந்தம் வலியெலாம் நயக்கற் பாலது!
அன்றியும் மாற்றலர் அடங்கின ரேனும்

வென்றியே கருதிமேல் விளைவை உன்னுவார்.
ஆதலால் நம்மிறை அனுதினம் அவன்செய்
ஏதம் களைவான் எண்ணிய செய்கை
சீரிதே! [கடைகாவலன் பிரவேசிக்கிறான்.]

கடை: செயசெய! செங்கோல் வேந்தே!
மாரிபோல் பெருகி வழிகண் ணீரினன்,
திருவிழந் தவன்போல் தெளிவிலா முகத்தன்,
உருவம் மாறி உயர்வான் படிந்த
மஞ்சில் மறைந்த மதிபோல் மேனி
எஞ்சினன், பகழி ஏறிய புண்ணின்
றுதிரம் ஆறுபோல் ஒழுகும் மெய்யன்,
எதிர்ப்படு வாரும் இரங்கத் தக்கோன்,
அதிர்தரு குரலான் 'ஐயகோ!' என்றகம்
குழைந்தவன், இருகரம் கூப்பிய தலையன்—

கிருஷ்: விழைந்தவன் எவனோ? விளம்புதி, திம்ம!

கடை: மன்னவ! வைகை வளநா டுடையான்,
பன்னருங் கிளையும் பதியும் இழந்தோன்,
தண்மதிக் குலத்தான், சந்திர சேகரன்,
விண்மதில் ஓங்கும் வியனகர்க் கடையில்
நின்றனன் நின்னருள் நினைந்த நெஞ்சனாய்,
மன்றலந் தாரினாய்!

கிருஷ்: [சபையோர்களை நோக்கி]
வானிதிச் செல்வமும்,
தெண்டிரை வளாகச் சிறப்பும், சிற்றிடைப்
பெண்டிர்தம் இன்பமும், பேராற் றிடையில்
காண்டகு குமிழியே! காத லோடு
பூண்டுற வாடிப் பொன்றுப் புகழை
எய்தின ரன்றோ இருந்தவ ரென்றும்!
[அரியநாதனை நோக்கி]
வெயிலவன் படுதலும் விரிதலும், குலாலன்
திகிரியும் போலத் திரிதரும் வாழ்க்கை

உருத்தலால் வாடிநம் முழைவந் தோனைச்
சென்று கொணர்க.

[அரியநாதன் கடைகாவலனுடன் வெளியேபோக, நாகமனோக்கி]

சேனைத் தலைவ!

வென்றியே நம்பால் விளம்பினை. வழுதி
மன்னவன் விதியை வகுத்து நோக்கில்
என்னுடை ஆக்கமிங் கேதாய் விடுமோ!
கீர்த்தியோ டிந்நாள் கேண்மை மிக்க
போர்த்து கீயர் புணர்ப்பினுல் தந்த
எய்யெனச் செல்லும் இருபதி னுயிரம்
கொய்யுளைப் பாய்மாக் கொண்டநம் செயல்போல்,
பகைவனும் அன்னவர் பண்பை நாடிநம்
தொகையினும் இரட்டித் துரங்க மாப்படை
ஈட்டித் தருக்குடன் இருக்கிறுன்.
கேட்டவென் கவலை கிளக்க லாவதே?

[அரியநாதன் சந்திரசேகரனுடன் வருகிறுன்.]

கலிநிலைத்துறை

சந்திர: சரணம் விந்தைவாழ் மொய்ம்புறு தாரவ! சரணம்;
சரணம் மன்னுயிர்க் கின்னருள் தந்தவ! சரணம்;
சரணம் ஒன்னலர் முடிதொடு கழல்வ! சரணம்;
சரணம் தண்குடை மன்னவர் மன்னவ! சரணம்.

கிருஷ்: [அரசன் அரியாசனத்தெழுந்து]

நிலைமண்டில ஆசிரியப்பா

ஒழிக ஒழிக உன்னுடை அவலம்!
செழியனே! வருக! செவ்விதின் அமர்க!
யாதுநின் குறைதான்? யாவருன் பகைவர்?
ஓதுக; உன்பகை ஒழித்தர சளிப்போம்.

சந்திர: [விண்கொளப் பரந்து வியன்புகழ் ஓங்கத்
தண்குடைக் கீழித் தாரணி தாங்கும்

காவலர் ஏறே! கஞ்சத் தடஞ்சூழ்
பூவலர் சோலைப் பொன்னிநா டுடையான்
வீரசே கரனும் வேந்தன் தருக்கிப்
பாரவெஞ் சிலைவிடு பகழிக் கிலக்கென
யாதொரு தீங்கும் இழைத்திடாத் தமியனை,
வாது புரியா வஞ்சமி லேனை,
மிடிபிணி நீக்கி வேலைசூழ் நாட்டின்
குடிகளை ஓம்பிக் குளம்பல நிரப்பி
ஆலயம் புதுக்கி அன்னசத் திரமும்
சாலையும் சதுக்கமும் சமைத்துச் சாந்தமாய்
மாந்தரும் விரும்ப மாண்புறு வேனை,
காந்திய மனத்தின் கதித்தெழு சேனை
கொதித்தெழு மாறு கூட்டிடா தேனை,
மதித்தவ னாகி வளைந்தனன் புரியை.
செய்திறன் இன்றிச் சிந்தை கலங்கியே,
உய்திறன் அறியா தொருபடை ஈட்டி,
முரசொலி கறங்க மூரித் தானையோ
டரசனை எதிர்த்துடன் அமர்புரி காலையில்,
அவன்படை வீரரால் அவிந்தனர் பலரும்;
இவண்போந் திட்டேன் என்பதி இழந்து;
தரணிகா வலனே! தஞ்சம்நின் சரணம்.

கிருஷ்: [மிகுந்த ஆச்சரியத்தையடைந்து]
இரவலன் போலிவண் எய்தி வருந்தும்
தன்மை, அந்தோ! சாற்றுவ தரிது!
'நன்மையே புரிந்து நல்வழி நின்றேன்,
மன்பதை விரும்பும் மாட்சிமை கொண்டோன்,'
என்ப திவன்செயல். ஏனையன் வஞ்சன்;
பொல்லாச் சூழ்ச்சியால் புக்கிவன் தானை
எல்லாம் அழிந்திட, இவன்தனை ஓட்டிப்
பதிநிதி கவர்ந்ததைப் பாரீர், பாரீர்!

திம்ம: துதிப்படாம் போர்த்த துன்னலர் ஏறே!
உன்னுடை ஆணை உதய கிரிசென்

றன்னதற் கப்பால் ஆர்கலி ஓங்கும்.
அவனுறு குடிகளுன் ஆளுகை அமர்ந்து,
புவனம் நின்போல் புரப்பார் இலையெனக்
கோடையின் மாரியால் குளிர்ந்திடு பயிர்போல்,
ஓடையில் குதிகொண் டோடுமீன் ஒப்பக்
கார்வரக் கண்டு களித்திறு மாந்து
வார்சிறை விரிக்கும் மஞ்ஞை நிகர்ப்ப
இன்புற் றிருந்தனர் ஏனை மன்னர்
துன்பம் தொலைத்துத் துறக்கத் தவர்போல்.
கொற்றவ! நின்குடை குமரி எல்லை
உற்றிடு கன்னியும் ஓங்கிய பொன்னியும்
கலந்து வாழ்தரக் கடவுள் நினைத்தே
குலந்திகழ் இந்தக் குரிசிலைத் தூதாய்
விடுத்தனர் போலும்! வேலைசூழ் உலகம்
அடுத்துநின் ஆணை அமர்ந்து நன்மை
துய்த்திடும் காலம் தோற்றிய தைய!—
பொய்த்த வஞ்சப் புணர்ப்புடைச் சென்னியைப்
போரிடை வீட்டவில் பூட்டியே, வேப்பந்
தாருடை யாற்கே தார்முடி சூட்டித்
தஞ்சைமா நகரைத் தாங்கொளத் தருமால்!

நாகம்: விஞ்சையின் மதிவலான் விரித்த விநயம்
நன்கு! நன்கு! ஞாலம் உடையாய்!
தென்குமரிக்கரை சேர்வது திண்ணம்.

இராமன்: வந்தனம்! வந்தனம்! வாகினித் தலைவனே!
சிந்தனை முடித்தவென் தெய்வம் வாழ்கவே!
குமரிநீ ராடினீர்! குவலயங் குலவுதென்
குமரிநீ ராடலுங் கூடலுங் கூடுமே!

[சபையில் உள்ளவர் எல்லோரும் சிரிக்கின்றனர்.]

நாகம்: மேனாள் வடதிசை மேவித் துருக்கர்
நாநா திசையிலும் நலிந்தவர் ஓடப்

போர்ப்பெருங் கோலம் பூண்ட நம்வலி
தூர்த்தன் சென்னியின் தோள்வலி தொலைக்கக்
குன்றனு மாகுமோ கொற்றவ!

செவ்வப்ப: நால்வகை
ஒன்றிய தானைகள் உடனுறச் சென்று
தாக்கின், வெற்றியைத் தான்பெற லாகுமோ!—
ஊக்கிய தோள்வலி உகுத்திட நேருமோ!—
என்பது கருதியீங் கிருந்தவர் அல்லேம்.
துன்பொடு நம்பால் தோன்றிய வேந்தற்
குறுதுணை யாகிநம் உயர்படை ஈட்டி
முரசொலி கறங்க மொய்ம்பொடு செல்லுதல்
தந்திர மோவெனச் சிந்தைசெய் தேமால்.

கிருஷ்: [நாகமனை நோக்கி]
வனைகழல் தானை வளைதர, வார்திரைக்
கனைகடல் சூழும் கன்னிநா டேகி,
வெற்றி கொண்டிவண் மீளவல் லார்கள்,
மற்றையர் எவரே மாற்றலர் சூழ்ச்சிக்
குள்ளுடை யாமல் உறுத்து நின்று
கள்ளா ருயிர்க்கோர் நமனெனப் பார்கள்?
ஆதலின், வீர!நம் ஆணைமேற் கொண்டு
போதலே புகழ்;நம் புரவிப் படையுடன்
சென்று சென்னியைச் சிறைகொடு, நம்பெயர்
நின்றிடத் துவசம் நிலைபெறச் செய்து,
அந்நிலம் நமதர சாக்கிப் பாண்டி
மன்னவன் தனக்கு மணிமுடி கவித்து,
வருவான் செல்க.

நாகம: வார்முர சொலிப்பக்
கரிவாம் புரவிதேர் காலாட் படையுடன்
வழுதிபின் வரவே வைகைநா டுறுவன்;
தொழுதனன் கனைகழல் துணையடி! விடையே.

கிருஷ்: [சந்திரசேகரனை நோக்கி]
நான மாடி நறுஞ்சாந் தணிந்து

போனகம் அருந்திப் பொலந்தவி சிருப்பாய்
கார்க்கடல் தானை கலப்ப நாகமன்
போர்ப்பெருங் கோலம் பூண்டு நம்பால்
வந்து நல்லுரை வழங்குங் காலையில்,
சிந்தை மகிழ்வுடன் செல்லுக சீரிதே.

இரண்டாங்களம்

இடம்:	கன்னியா மடம்
காலம்:	எற்பாடு evening Twilight(?)
பாத்திரங்கள்:	காஞ்சனையம்மன், மதிவிலாசினி, மூர்த்தியம்மன்

[காஞ்சனையம்மன் வீணையை மீட்டிப் பாடுகிருள்.]

கொச்சகம்

தாதுலரா நறுந்தாமம் சாத்திமணி விளக்கெடுப்பக்
கோதையர்பல் லாண்டிசைப்பக் கொடியாட்டத் திருக்கோ [யிற்
கேதமிலாத் திருப்பணிகள் எழிலாக இயற்றிமனம்
காதலுற அடிபணிந்தும் கமலையருள் செய்கிலையே!
தண்காட்டு வயல்நாடு தனையிறையும் அறவிடுத்து
விண்காட்டு வியன்மதில்சூழ் விசயநகர்ச் செல்வியெனப்
பண்காட்டி யாழிசைத்துப் பாடினனிற் சீர்வியருட்
கண்காட்டி அஞ்சலெனக் கமலையருள் செய்கிலையே!
வேதமுமவ் வேதத்தின் வியன்முடியும் மெய்த்தவர்தம்
போதமுங்கண் டுணர்வரிய புண்ணியனும் கண்ணனையே
நாதனெனக் கொண்டமரும் நாயகியே! நாதனருட்
காதலுறப் பெற்றிடவும் கமலையருள் செய்கிலையே!

[வீணையை ஒருசார் வைத்துப் பெருமூச்செறிந்து பஞ்சணையிற் சாய்ந்து]

நேரிசை ஆசிரியப்பா

[ஆயினும், நின்னையான் அலுத்துக் கொள்வதென்!
தாயினும் நல்லைநீ, தண்ணருள் செய்வதில்.
ஊனுர் உடலெடுத் துலகுழல் மாந்தர்
மேனுள் செய்த வினைத்தொடர் பாலிப்
பிறவியின் பயனைப் பெறுவர் என்பரால்.
அறியேன் அடியேன் ஆற்றிய தொல்வினை.
தண்மதி போலத் தழைத்திடு முகமும்,
பண்புறு படிகம்நேர் பரந்த நெற்றியும்,
கலந்தவர்க் கருளும் கமலக் கண்களும்,
விலங்கலை வென்ற விந்தைவாழ் புயமும்,
தருநிகர் தருங்கொடைத் தாள்தொடு தடக்கையும்,
உருவெளி யாக,இங் கொருவனைக் காட்டிக்
கனங்குழை ஒருத்திமேல் கருப்புச் சிலைவளைத்
தனங்கவேள் எய்த ஆரூப் புண்ணில்
தென்றல் நுழையத் தெருமரல் உற்றேன்.
இன்றெனை அஞ்சல் எனக்கரம் கவித்தென்
மனத்துள் புக்க மன்னவன் வந்தியான்
நினைத்த வண்ணம் நேர்படா னேல்அயன்
அவமே! அவமே! அமைத்தனன் அந்தோ!
தவமே இதுவோ? தரிக்க வல்லனே?
இனையன் அன்றிமற் றேவரா யினுமென்
கனவில் ஒருகால் காணப் படினும்,
நண்பாக் கொள்ளேன் நானிலத் தவரைப்
பெண்பா லார்போல் பேசி வெறுப்பன்.]

[மதிவிலாசினியும், மூர்த்தியம்மனும் உரையாடி உள்ளே பிரவேசிக்க]

மதிவி: ஏடி!என்? இதுவரை யாதுதான் செய்தனை?
போடிபோ! இந்தப் புதுமலர் நோக்காய்;
தான்மர கதம்போல் காண்பது காணய்;
பானிற இதழ்ப்புறப் பகுதியைப் பாராய்;

வன்ன அகவிதழ் வனப்புமின் னார்நுதல்
துன்னுகுங் குமம்போல் துலங்குவ பாராய்;
கண்ணெலாம் உயரக் கட்டி வைத்ததோர்
எண்ணரு மூசிநேர் இலங்கிய பொகுட்டையும்;
ஈங்கொரு சேய்தன் எழில்நா நீட்டிய
பாங்கென ஓரிதழ்ப் படிவையும் பாராய்;
வெறிகமழ் மணமும் விராஅய்க் கலந்த
செறிபொடி நலனும் திகழ்தர நோக்காய்.
இங்கொரு மூவேம் ஏற்றுத் திருத்திய
பொங்கரென் பகுதியிற் பொலிவுற விளைந்த
இந்நிலத் தாமரைக் கிணையெனச் சிறிதும்
உன்னுடை மலரை உரைத்திட ஒண்ணுமோ?
சேடியுன் செய்கை தெற்றெனத் தெரிந்தது!ஓர்
ஆடவற் குள்ளம் அழிந்தனை யாகஉன்
புலத்தைக் காத்திலை; புலத்தையுங் காத்திலை.
நிலத்தவர் இயற்கை நிகழ்த்திடக் கேண்மே
தன்வினை வயலார் தம்பால் தோன்றிடும்
என்னும் உரைபோல் ஏதடி நவின்றாய்?
மெத்த மெத்த விளம்பினை பாயிரம்;
அத்தனை வார்த்தைக் காளலேன் அம்ம!
கவலை என்றதோர் கானகம் புக்குழல்
இவளோ நின்தொழிற் கிணையெனப் படுவாள்
காளையின் வலியேன் காகம் அறியும்!நீ
ஏனம் பேசுவ தித்தனை யோதான்?

மதிவி: அருமைக் காஞ்சனை அம்மனைப் பாங்கிய
மருவிய நமக்கும் வருங்குறை உளதோ?
உள்ளக் கருத்தெலாம் ஒளியா துரையாய்.

மூர்த்தி: கள்ளத் தனமும் கபடமும் அறியேன்.
பித்தரைப் போலுளம் பேதித் தவளாய்ச்
சித்தமும் செயலும் சிந்தியே, நாளும்
எய்த்து மேனி எழில்மிக வாடிப்
பொய்த்துயில் கொண்டு புலம்பா நின்றாள்

மாது காஞ்சனை. மனத்துய ருக்கோர்
ஏது எண்ணி இருந்திடு வேற்கிதன்
மேலுள குறையும் விளம்ப வேண்டுமோ!
ஏலவார் குழலாய்! இதனைச் சிந்தியா
துன்புகழ் ஓதி உவந்தனை, உள்ளம்
அன்புறு தோழி அவலம் அறியாய்,
பேதை!

மதிவி: உலகம், 'பேதைமை என்பது
மாதர்க் கணி'என வழங்கிய சொற்கோர்
சான்று யினனவள் தன்மைதே ராதினித்
தான்தனி வருந்தும் தையலைக் காண்பான்
வல்லை எழுக, மதிநுத லாய்!அவள்
இல்லம் நண்ணி இயற்கையை நாடுதும்.

[இருவரும் உள்ளே பிரவேசிக்கின்றனர். காஞ்சனை உருவெளித் தோற்றங் கண்டு வருந்தி]

காஞ்ச: [நாயக! அடியாள் நலிவெலாம் உணர்ந்தும்
வாய்திறந் தோருரை வழங்கு கின்றிலை!
காண்பது நனவோ! கனவோ கண்டது!இங்
காண்டகை உருவம் அமைந்து நின்றதோ!
மாயமோ! அறியேன். மந்த காசமும்
நேயமும் செவ்வியும் நிறைந்த முகமும்,
தந்தியின் கரம்போல் தழைத்த கையும்,
விந்த கிரிபோல் விளங்கிய புயமும்,
புலப்படா நின்றது பொய்யோ! மெய்யோ!
வெலப்படாள் இவளென வேனிலான் தன்னுருக்
கரந்தென் ஆருயிர்க் காதலன் மான
உருவம் பூண்டிவண் ஒளிந்துவந் தனனே!

மூர்த்தி:

நில்லு! நில்லடி! நெஞ்சம் அழிந்திவள்
பல்லுரை கூறிப் பரிவுறு கின்றனள்!

மதிவி: அணையிடம் துன்னி அமர்ந்தனள் தனியே;
துணையெனப் போந்தவர் தோன்று கின்றிலர்;
ஏழை ! எவருடன் இத்தனை வார்த்தை ?

காஞ்ச: [பொருக்கெனவெழுந்து
தோழியர் ! வருக.

மூர்த்தி: தோகை ! என்னிது ?
துணைவிழி கலங்கித் தொடிவளை நழுவி,
அணைமலர் கரிந்துன் அங்கம் பசந்து,
வருந்துவ தென்னை ! மாதர் திலகமே !
[மதிவிலாசினி காஞ்சனையுடலைப் பரிசித்து]

மதிவி: அருந்துணை அம்ம ! அடிக்கின் றதுசுரம் !
வெந்தழல் ஒப்ப வெதும்பு கின்றது !
பைந்தொடி ஆகம் படபடக் கின்றதே !

காஞ்ச: பக்கத் திருமின்.

மூர்த்தி: பாவை அனையாய் !
துக்கசா கரத்தே சுழன்று வாடினம்.
ஊதையில் பட்ட ஒருமரக் கலம்போல்,
ஏதப் படப்பார்த் திருப்பதும் இயல்போ ?
உடற்குறு பிணியால் ஒல்கினை யோ?உளம்
படப்பல கவலை பற்றிய துண்டோ ?
உற்ற வாறெலாம் ஒளியா துரையாய்.
மற்றவை முடித்துன் மனக்குறை தீர்ப்பன்.

காஞ்ச: [மதிவிலாசினியை நோக்கி]
செய்யவள் பாத சேவைக் கான
துய்ய நறுமலர்த் தொடைய லாதிகள்
கொண்டிவண் வருக, கோதையே! முனிவரும்
அண்டரும் பரவும் ஆலயம் செல்வாம்.
[மதிவிலாசினி வெளியே செல்ல]
புனத்துள் குதித்திவண் போந்திம் மாடத்
தினத்தில் தப்பி இருந்ததிம் மானென,

மலர்க்கணை ஐந்தும் வழங்கி,மா மோக
வலையெடுத் திங்கு மன்மத வேடன்,
குயிற்குழாம் கூவக் குரைகடல் ஒலிப்பப்
பயப்பய வந்து படுத்த வருந்துமென்
மனப்பிணி மாற்ற மருந்துமுண் டாங்கொலோ!
கனக்குழை மேற்பொரு கயல்நெடுங் கண்ணாய்!
ஏதினி என்ன இலக்கியங் கண்டனன்.
ஆதர வாக அமைதர இலக்கணம்
கொண்டபின் அன்றோ கூறுவன் காரிகை?

நீ: வண்டரு நறுமலர் வார்குழல் மாதே!
இலக்கியங் கண்டதற் கேற்பச் சிலேடை
சொலப்புகுந் தனை;உன் சொற்பொருள் அறிகிலன்.
பாங்கியர் மாட்டும் பகரொணாச் செய்தி
ஈங்குனக் குளதென எண்ணு கின்றிலன்.
வேட்கை யாவும் வெளிப்படை யாக,மென்
தோட்கினை இல்லாத் தோகையே! சொல்வாய்.

காஞ்ச: பதவியல் முற்றும் படித்தனன் என்றலும்,
அதனுறுப் பிலக்கணம் அறையென விழைந்து
கேட்டனை ஆயினும், கேள்வனை ஒருத்தி
கூட்டுக என்பார் குவலயத் துளரோ?
அரைகழல் பூண்ட ஆடவர் திலகன்,
விரைகமழ் தாரான், விச்சுவ நாதன்,
வந்தெனை இந்நாள் மருவிடான் என்னின்,
சிந்தனை உறுதுயர் செப்பவும் வேண்டுமோ?

மூர்த்தி: மெலியேல்! மெலியேல்! மெல்லியல்! அந்த
மலைநிகர் திண்தோள் மன்னவன் தன்பால்
சென்றவற் கொணர்ந்து சேர்த்துவன்;
மன்றல் கண்டு மகிழ்ந்துநீ வாழ்கவே!

மூன்றாங்களம்

இடம்: நாகமன் வீட்டில் ஒரு சித்திர அறை

காலம்: காலை

பாத்திரங்கள்: நாகமன், மங்கம்மாள், விசுவநாதன், அரியநாதன், அச்சுதப்பன் முதலியவர்கள்

நேரிசை ஆசிரியப்பா

நாகம: [இளவரசை நோக்கி

[அச்சுத! அரசன் ஆணையை அறிவாய்.
கச்சைக் கடாம்பொழி களிறுதேர் காலாள்
புரவிப் படையும் புணர்ந்து பின்வரப்
பரவை சூழும் பாண்டி நா[illegible]ற்றுப்
பகைவனை வெல்லப் [illegible]
நகுமணி ஒளிர்தர நான்ற மாலையாய்!
நின்வயின் அன்புறும் நேயனும் நாதன்
தன்னை உன்பால் தந்தனன். பிரியா
தென்று மிரண்டுடற் கேன்றவோர் உயிர்போல்
துன்றி வாழ்தல் தோழமைத் தாமால்.

அச்சு: ஐய! இவன்துணை யாருளர் எனக்கு?
சையம் ஒருகால் சலிக்கினும் சலியேம்.
இன்பத் துன்பம் இரண்டிற் குடந்தையாய்,
அன்பெனும் தளையால் ஆர்க்கப் பட்டதாய்,
வன்பகை தொடர்ந்து வருத்திடில் தன்பொருள்
என்புயிர் யாவையும் ஈந்திடத் தக்கதாய்த்
துலங்குதல் அன்றோ தோழமை என்ப?
விலங்கிநீர் ஏகுதல் விழைந்திங் கிருவரும்
பூத்த மலர்போல் பொலிதர விளங்கி
ஆத்தும யோக ஆனந்த வாரி
திளைத்துப் பருகித் தெவிட்டா திருந்து
களித்திடற் கேது காட்டி நின்றதே!

மங்க: [கண்ணீர் ததும்ப

காவலன் பின்னவன் கழறிய வாசகம்
மேவிய உவகை விளைத்த தாயினும்,
குஞ்சைத் தனியே கூட்டில் இருத்தி
அஞ்சிறைப் பறவை அகல்வது போல,
தாயிலாப் பிள்ளைபோல் தனித்துறை தரஎன்
சேயைப் பிரிந்தியான் சென்றிடக் கொடிய
விதிப்பயன் இதுவாய் விளைந்தது கொல்லோ!
பதியுடன் சென்றுனைப் பாரா திருக்கவும்
இசையுமோ என்னுளம்? என்குலக் கொழுந்தே!
பசியறிந் துனக்குப் பாலமு தூட்டுவார்
எவருளர்? எனைப்போல் எவரைத் தாயென
உவகையோ டழைப்பாய்? ஒப்பிலா மணியே!

விசுவ: அன்னையே! உலகெலாம் அளிக்கின் றவர்தமக்
கென்னைக் காத்தல் இரும்பொறை யாமோ?
அறைகழல் தந்தையின் அருளும்நின் அன்பும்
இறைமகன் துணையும் ஏற்றிடு வேற்குத்
தனிமை எவனுறும்? தளரேல். உனது
மனனுறு கவலையை மாற்றித் தந்தை
உடனுறச் சென்று,அவற் குறுபணி இயற்றிப்
புடையமர்ந் திருத்தல் புகழையே தருமால்.
அன்றியும், ஒருரை: அடையலார் தம்மை
வென்றிடற் கையன் விரைந்திடு காலையில்,
நீதுயர் உழத்தல்நன் னிமித்தம் அன்றால்.

நாகம: [நாதனே! உலகம் நயப்ப நவின்றனை.
தூய்மையே உள்ளம் துணிதிற னன்று.
வாய்மையே மைந்த! மற்றுஞ் சிற்சில
நன்மொழி உள அவை நாடிக் கோடியால்:
உண்ணினை வயலார்க் குரைக்கொணாது; ஆராய்ந்
தெண்ணிடா தொருதொழில் இயற்றவொண் ணாது;
எவரொடும் பழகுதல் இனிது; தாழ்மையாய்

அவருடன் பயிலல் அழகுடைத் தன்று;
குணங்கண் டொருவரைக் கூடுக; கூடின்,
இணங்கி அன்பெனும் எஃகால் பிணிப்பாய்;
ஒருநாள் பழகுமுன் உவந்தவர் தம்மைப்
பெருநட் பாளர்போல் பேணிப் புகழ்ந்தவர்க்
கெண்ணிதிச் செலவுசெய் துயர்விருந் திட்டுன்
கண்ணியம் கெடவீண் காலம் கழியேல்;
வலியப் போர்க்கெழேல்; வந்துனை அடைந்தார்
நலத்தை நோக்கி நயந்திட் டாயெனில்,
ஒன்னலர் வெருவ ஓட்டி உன்புகழ்
தன்னையே நானிலம் சாற்றிட நிற்பாய்;
எவருரை களையும் ஏற்றுக் கொள்கநீ;
உவகையோ டொருவற் குரைத்திட நினையேல்;
நின்வயின் பிழையெவர் நிகழ்த்தினும், அதனை
நன்மொழி யாக நயந்து கொள்க;
ஒருவரைப் பற்றி உனதபிப் பிராயம்
தருவது நினையேல்; தகுதிக் கேற்ப
ஆடையா பரணம் அணிந்து கொள்க;
ஆடம் பரங்கள் அகற்றுக; ஏனெனில்,—
உடைநடை தன்னால், ஒருவன் குணத்தை
அடைவுடன் காண்பர் அறிவுடை யார்கள்.
வண்பொருள் கொடுத்தல் வாங்கல் உன்னேல்.
நண்பினை அகற்றும். நலிந்து கேட்பையேல்,
கடனை வாங்குதல் கணக்கறு செலவுக்
கிடனும்; இல்லிற் கிடரிழைத் திடுவதாம்;
ஆதலால், இவையெலாம் அறிந்துநீ மேலாம்
போதம் மேவிப் புகழுடன் நிற்பையேல்,
பொய்யன் என்றுனைப் புகன்றிடார் உலகில்.
ஐயனே! என்மொழி அனைத்துங் கொள்கவே.
[அரியநாதனை

மன்னவன் ஆணையும் மதிக்குலத் துதித்த
தென்னவன் குறையும் சேர முடிப்பான்

நின்றனன், வென்றி நினைந்த நெஞ்சுடன்.
குன்றுறழ் தோளினாய்! குரைகடல் தானையை
ஈட்டினை யாயின், இன்னே வழுதி
நாட்டினை நோக்கி நடத்துக. நாமும்
எழுந்தனம்! எழுந்தனம்!

அரிய: [இணையடியைத் தொழுது]

ஏற்றி ஏற்றித்
தழும்புறு வரிசிலைத் தடக்கை வீர!
இடிகுரல் முரசொலி எழஎழுந் திட்டதிப்
படியினை வளைந்தஏழ் பரவை யாமெனத்
திக்கெலாம் ஒருவயின் திரண்ட தாமெனப்
புக்கதுன் தானை, பொருவில் வீர!நின்
திருவுளப் படியே சேர்க
விரிகதிர் முத்தம் விளைதமிழ் நாடே.

நான்காங்களம்

இடம்: உத்தியான வனம்

காலம்: எற்பாடு

பாத்திரங்கள்: அச்சுதப்பன், விசுவநாதன், காஞ்சனை அம்மன், சேவகன், மூர்த்தியம்மன்

[காஞ்சனை ஒருசார் பூக்கொய்து உரையாட]

நேரிசை ஆசிரியப்பா

அச்சு: அகோ!பார் அன்ப! அழகொடு பொலிந்து
தொகாது பெருகும் துய்ய மணங்கமழ்
மருதைத் தழுவி, வண்மலர் தோற்றி,
அருங்கொடி முல்லை அணைந்தது பாராய்!
அண்டமாம் புருடன் அங்கம் போர்த்துக்
கொண்ட படாம்போல் குலவுதல் காணாய்!

விசுவ: மாட்சிமை யாக மகிழ்ந்துநீ கண்ட
காட்சி உண்மையே! கழறுவன், கேண்மோ:
மெலியார் வலியரை விரும்பிச் சேர்தலும்,
வலியார் அவரை மருவி வாழ்தலும்
உலகியல் என்பதை உற்று நோக்குக. (7)

அச்சு: அலகிலாக் கேள்வி அறிவுடை யாய்! அதன்
பொருவறு மலரின் புதுமையென் சொல்கேன்!—
விரிதரு ககனம் விளங்குதா ரகையினம்
சொரிதரும் சோதியோ! சோமன் கிரணத்
துண்டத் தொகுதியோ! துலங்குவ காணாய்!
அம்மலர்க் கணையால் அனங்கவேள் எய்து
மம்மர் விளைத்து மாதரை அலைப்பனால்!

விசுவ: ஏனைய மலர்தனக் கிணையிலை என்றே
தானகை செய்து தயங்குதல் காணாய்!
கொடியிடை நுடங்கக் கொழுகொம் பேறிப்
படர்தர நின்ற பான்மையை நோக்கின்,
கடிமணம் ஆர்ந்துதம் கணவரைப் புல்லும்
கடிமலர்க் கருங்குழல் கன்னியர் போலுமால்!

அச்சு: மீதணிற் பிள்ளை மேவிக் கோதவோர்
மாதுளங் கனியவண் வயங்குதல், கூத்தர்
காலுயர் காம்புறக் கைத்தலம் தொங்கவிட்
டாலுதல் ஒப்ப அசைவது பாராய்! (8)

விசுவ: தீதற ஒருதொழில் சிந்தனை உறுவார்
ஆதர மாக அடங்கு மாறுபோல்,
காமா திகளெலாம் கலப்பவும் அவற்றைப்
போமா றுறுத்தைம் புலனையும் ஒடுக்கித்
தழைக்குடில் மேவித் தலைகீ ழாக
இழைக்கும் மாதவ இருடிகட் கிணையெனப்
பொருந்திய தவத்தைப் பூண்டிருக் கின்றது; என்
அருந்துணை வா! இதன் அகம்புறம் நோக்காய்!
நிறைமொழி மாந்தர் நீள்கலை பயின்று,
பொறையுடன் அடங்கிப் புகழ்பெறும் தன்மைபோல்,

ஈண்டுநீ கண்ட இணையிலாக் கனியுள்
காண்டகு செந்நிறக் கற்களை நிகர்ப்ப
நீர்த்துளி நிரம்பி நிலவிட மேல்தோல்
போர்த்து நின்ற பொலிவையும் பாராய்!

காஞ்ச: [தனியே நின்று]

அச்சுதன் உரைக்கெலாம், ஆங்கவன் உள்ளமும்
மெச்ச மெச்ச விளம்புகின் றுன்விடை.
என்னே! இவன்கலை இருந்தவா! இவன்குணம்
பொன்னே எனிலது புகலவும் பொருவுமோ!
தோய்ந்த பொருள்நயம் சொல்நயம் பலவும்
வாய்ந்த நலமிகு வார்த்தையின் ஆழமும்,
மெள்ளப் பலவுரை விரும்புவார் உள்ளம்
கொள்ளு மாறு கொடுக்கும் ஆற்றலும்,
என்னே! இவற்கிணை இருங்கடல் வளர்கத்
துன்னி ஒருவரை உரைத்திட ஒண்ணுமோ!

அச்சு: நிலவிரி செழுந்தபன் நிறமுறும் பூப்போல்
அலர்தலை உற்ற அலரியை நோக்குக!

விசுவ: கல்லா ஒருவன் கற்றவர் நாப்பண்
எல்லாம் அறிந்தவன் எனவெழுந் திருந்து,
விரைந்து பலபட விளம்பும் பயனிலா
உரைகளில், அவனுடை உணர்வில் தோற்று
துதித்திடும் அற்புத உரைகளைப் போலக்
குதித்தெழு பூவின் கோலம்நீ காண்டியால்!

அச்சு: தங்கிய மகிழுயர் தருக்களின் தோற்றம்,
மங்கைநல் லார்கள் மணஅறைப் பந்தரில்
கரதலம் பொருந்துமண் கலசம் பலவுடன்
வரமுறு பாலிகை வாங்கிநிற் றலையுறும்.
ஒளிர்தரு நின்றதை உவந்து காண்கநீ!

விசுவ: உளப்பிணிப் பெல்லாம் ஒடுங்குமா றுயர்ந்த
சிவப்புகழ் வாய்ந்தொளி சிறந்த யோகியர்
தவப்பெரு நறுமணம் தழைத்த சரீரம்
தேசுடன் கலந்து திகழ்வது மானுமால்!

அர்ச்சு : காசினம் கவினும் கனக மாலையாய் !
வாவியில் பூத்திதழ் வாடிய தாமரை
மேவிய நறுந்தேன் மிகுந்து நண்பகல்
நீரில் படிதலால் நீல்நிற வானத்
தூர்தரு செக்கரை ஒக்கும், ஒக்குமால் !

விசுவ : தோழ!நீ நீரில் துலங்கிய தேனையே
ஆழச் சிந்தனை ஆய்ந்து நின்றனை.
மாலை வந்திட மலரும் குவிந்தது.
காலையில் அலர்ந்து கவினுறச் சிறந்த
பங்கயம் வாடிய பான்மையைக் கருதி
இங்கித மாக இயம்பிலை; கேண்மோ:
தாமே உவந்து தம்முடல் ஆவி
ஏமம் ஆதி இசைபெற அளித்து,அங்
கிரவலர் இன்பம் பெற்றதைக் கண்டு,
பரவச மாகிப் பங்கயக் கண்கள்
ஆனந்த வாரி அருவி பெருக,
வானம் தமதென வாழ்வுறு வள்ளலார்
மானவே, தம்பால் மகிழ்ந்து வந்து
கானம் முழக்கும் களிவண் டருந்த
மதுவினைத் தந்து வாய்ந்த உடற்பயன்
இதுவெனக் கொண்டு,இங் கிரங்கி இரவலர்
வருஞ்செயற் குரிய மாதவம் இலையென
வருந்திச் சோர்ந்து வணங்கி நின்றன!

அர்ச்சு : பளிங்கிடை வச்சிரம் படப்படி குயிற்றித்
தளங்கொளச் சமைத்த தடமலர் குவளை,
காசினைப் பறிக்கக் காமுகர்ப் படுத்தும்
வேசை மாதர் வேல்விழி களைப்போல்,
அவிநயம் காட்டி அழைக்கின்ற தைய!

விசுவ : புவியெலாம் காக்கும் புரவலன் மதலாய்!
கற்பகச் சோலை காட்சி மிக்குறப்
பற்பல வளங்கள் பயிற்றுவான் வேண்டியே,
ஆசினி புரப்போன் ஆயிரம் கண்களால்

காசினி உற்றநின் காவளம் கண்டனன் :
அன்னவன் கண்கள் அனைத்தும் நிழலாய்த்
துன்னியித் தடத்தில் துலங்கின போலாம்!

காஞ்ச :

அருங்கலை விநோதன்; அறிவெனும் அளக்கர்
இருங்கரை கண்டோன்; என்னுயிர்க் காதலன்;
மன்னெடும் இசைத்த மாண்புறு மொழிகளின்
தன்மையை நாடின் தகவுடை யோர்களும்
சிரத்தினில் சூடும் சிரோமணி போல்வான்;
ஆர்கலி போல ஆழ்ந்த அறிவினன்;
பார்மலை போலப் பரந்தஎண் ணத்தினன்.
இவனுடன் ஒருமொழி எழில்பெற இசைத்தே,
அவனிலை பைய அறிவான் அமயம்
இதுவே! ஓ!ஓ! எழிற்பன் னசாலை
உவதிரும் குயிலின் வார்த்தைக் குருகி,
அதனுள் அமைத்த அழகார் பளிங்கின்
இதமுறு பீடத் திருந்த மயிலும்
களிநடம் அற்றுக் கலங்கி உள்ளம்
தெளிவில தாகித் திகைத்த செயலையே
கற்பனை கலப்பநம் கருத்தையும் அவ்வழி
அற்புத மாக அறைந்து,அவன் உள்ளம்
அறிந்திடல் நலமாம்!

[விசுவநாதனை நோக்கி]

ஐயன்மீர்! கேண்மின்:
செறிந்த கொடிகள் சிறப்பொடு படர்ந்த
சாலையை நோக்குமின்! தனிக்குயில் ஒன்று
மேலிருந் திசைநயம் விளம்பு கின்றது.
உள்ளொளி பரப்பும் உயர்பளிங் கிருந்து,
தெள்ளு தேனிசை தெவிட்டா துண்டு,
களித்திடு கின்றதிக் கலாப மயிலும்!

அச்சு : ஒளிப்பருங் காதல் உற்றவோர் அரிவை
மனக்கினி யவனென மதித்திடில் அவனைத்

தனக்கொரு துணையெனத் தான்பெறக் கருதி
அன்னவன் குணங்கள் அனைத்தையும் நினைந்து
தன்னந் தனியளாய்த் தயங்குவள் போலக்
குயிலிசை கேட்டுக் குனிநடம் ஒழித்து
மயிலிது நின்றது, வம்மின்! காண்மின்!

விசுவ : (மங்கை மொழியிவண் மதிக்கத் தக்கது!
நங்கை!என் உரையும் நயக்கற் பாலது!—
நின்னுரை மிக்க நேர்மை கொண்டது!
முன்னவர் பெரியார்; முத்தியை நாடி,
ஈசனைச் சேர, எரியில் மெழுகுபோல்
பாசப் பவக்கடல் பத்தியால் நீந்திட
உள்ளம் உருகி, "ஒளிமணிப் பாவாய்!
எள்ளினுள் எண்ணெய்போல் எங்கும் பரந்தாய்
கரும்பின் சுவையே! கருத்தினுள் கருத்தே!
விரும்புவார் உள்ளம் விளங்குமெய் விளக்கே!
கன்றினைப் பிரியுமோ காராம் பசுதான்?"
என்றுதான் கதறி, எவணினைச் சேர்வது
என்னத் தலைவி இரங்கல் துறையாத்
தன்னுடைச் சீவன் தன்னையே தலைவியாப்
பரமனைப் புருடனைப் பாடிக் கூடினர்
கரதலங் கூப்பியென் கண்கொளத் தக்கவர்,—
என்பரா அணிந்தோன் இணையடிக் கென்றும்
அன்பருக் காழி அருமறை முனிவனும்,
தேவினுக் கினிய திருத்தாண் டகஞ்செய்
நாவினுக் கரசனும், நள்ளிருட் பொழுதரன்
சந்தெனக் கொண்ட தம்பிரான் ஆரூர்ச்
சுந்தர மூர்த்தியும், சொல்லின் அமுதையே
காணிக்கை என்று கரைந்து பாடிய
மாணிக்க வாசக னும்,புகழ் வாய்ந்த
காலிபின் சென்ற கண்ணனை மறித்த
ஆலி நாடனும், 'அத்தைத் தின்றுதான்
அங்கே கிடக்கும்'என் றருளிச் செய்ய,

சங்கை ஒழிந்து சரண்புகு புலவன்
எம்மாழ் வாரென இசைத்த வாய்மொழி
நம்மாழ் வாரும், நானிலம் ஏத்தவே!—
நீயும் அத்தகை நினைந்தனை, நங்காய்!
தோயும் அன்பினால் தோகையுட் படுத்திப்
பாங்குடன் குயிலும் பாடு கின்றது.
ஆங்கது போல, அகிலமும் புரப்போன்
இடையறா அன்பொடும் இரங்கும் அன்பரை
அடைந்திடல் உன்னியே அவாவுறு கின்றனன்,
பைந்தொடி!

[அச்சுதனை நோக்கி]

அச்சுத! பாரினில், மாந்தர்
விந்தையை நலனை வெஃகிய பொருளை
விரும்பியே கலந்து விவாகம் செய்வர்.
தருவமர் குயிலும் தனித்த மயிலும்
ஒன்றி இரண்டுடற் குயிரொன் றாகியே
நின்ற நிலையை நேர்ந்து நோக்குறில்,
ஆடவன் மனமும் அரிவை உள்ளமும்
நாடி ஒன்றுதல் நன்மணம் ஆமால்!

[ஒரு சேவகனும், மூர்த்தியம்மனும் உள்ளே பிரவேசிக்க]

சேவக: ஐயன்மீர்! உங்கள் அச்சுவம் இரண்டும்
செய்ய கல்லணை சேரப் பூண்டு,
காற்றை முகந்து, காற்குளம் பெற்றி,
ஆற்றொணா வேகத் தமைந்து நின்றன.

அச்சு: நாத! செல்லுதும்; நங்கையர் திலகமே!
போதும் நாங்கள்.

[சேவகன் பின்னே வர, அச்சுதனும் விசுவநாதனும் விரைந்து செல்ல]

காஞ்சி: [பன்ன சாலையை நோக்கிச் சென்று]
புகன்ற குயிலும்

ஏகிடத் தனியே இரங்குமென் மயிலே!
சோகமா யினையோ, தொடிவளை போல?

[பளிங்கு மேடையிற் சாய்ந்து]

திருந்திய பளிங்கும் சீதளம் தருமென்
றிருந்தனன்; அதுவும் எரிபோல் சுடுதே!

[முல்லை மலர் மேலே உதிர]

நலங்கொளக் கொடியாய் நானுனை வளர்த்தேன்.
பொலங்கொள் மலரே! பொறியா யினையே!

[அன்றிலின் குரலைக்கேட்டு]

அன்றிலே! உன்றன் அருங்குரல் கேட்ப
இன்றெனை தாவி இரங்கு கின்றதே!

[இளந்தென்றல் மகரந்தம் பூசி
நீர்த்திவலை வாரியிறைப்ப]

தென்றலே! கொடியாய்! திவலையோ டெழுந்த
மன்றலம் பொடியும் வாளாக் கொணர்ந்தனை!
ஏனித் தனைவிரு தெடுத்தனை? ஏழை
தானித் துணையும் தரிக்க வல்லளோ?

[அந்தி வானை நோக்கி]

வடவைபோல் பரந்து வளர்ந்த செக்கரே!
சுடுதொழிற் கஞ்சினன். சுடரோன் தொடுகடல்
பட்டனன். இனியிப் பாவையைச்
சுட்டனை என்பது சொல்லவும் வேண்டுமே?

[பூரண சந்திரன் உதிக்க]

அறுசீர் விருத்தம்

எஞ்சும் பொருளைப் பெறத்திரைகள்
எழப்பாற் கடலைக் கடைந்திடும்நாள்
துஞ்சல் நீக்கும் அமுதுடனே
தோன்றி வளர்ந்தா யாறைலும்,
நஞ்சின் வாடை பட்டதொரு
நயத்தால் இந்தக் கயத்துள்ள
கஞ்ச மலரோ டென்னையும்நீ
கடிவான் எண்ணி வந்தனையே!

தண்மைக் கிரணம் பொழிந்துலகம்
தழைப்பக் குளிர்ச்சி தனைநல்கும்
ஒண்மைக் குரியான் என்றுன்னை
உரைத்தார் பெரியார்; அதுநிற்க.
பெண்மைக் கென்றே எரிகதிராய்ப்
பிறங்கல் இந்தப் பேருலகோர்
உண்மைக் காதல் உறுத்துவனென்
றுரைத்த மொழியை விளக்கிடவோ ?

கலி விருத்தம்

மார வேள்குடை மன்னிய நாளவன்
தீர முற்றும் தெரிந்தனை கண்ணுதல்
போரில் அங்கம் பொடிந்தது கண்டநீ
நேரில் நிற்க நினைந்தனை நேர்மையே !

பொங்கி நின்று புகைந்தெரி ஊட்டினை
நங்கை யர்க்கிடர் நல்கினை ஆதலின்
அங்கம் நாளும் அழிந்துறல் ஆயினை
எங்கள் பாவம் இருந்தது திங்களே !

பொன்னொ டும்பிறந் தேபுகழ் பூண்டனை
என்னில் ஏழையர் ஏங்குறச் செய்வதே
உன்னி நின்ற துனக்கழ காகுமோ ?
என்னை நோக்கி எழுந்திடு திங்களே !

நேரிசை ஆசிரியப்பா

மூர்த்தி : ஏதடி அம்ம ! எதிரிவண் இருந்த
பேதையை மறந்தனை, பேதுறு கின்றனை.
பொழுது சென்றது. பொன்மனைக்
கெழுக, எழுக, ஏந்திழை ! எழுகவே !

இரண்டாம் அங்கம்

முதற்களம்

இடம்: சோழமாளிகை, சோழன் படை வீடு

காலம்: மாலை

பாத்திரங்கள்: வீரசேகரன், கோலாகலன், வில்வலன், குபேரன், வீரன், அரியநாதன்

நேரிசை ஆசிரியப்பா

வீரசே: பற்றலர் ஏவநம் பாங்கர் வந்த
ஒற்றரைப் பிடித்ததா உரைத்தனை. அவரால்
பகைவர் சூழ்ச்சியும் படைத்துள வலியும்
தொகைபெறும் சேனைத் தொகுதியின் ஆழமும்
அறிந்தனை கொல்லோ! ஆர்கலி போலச்
செறிந்த நம்படைத் திரளணி வகுத்துப்
பகுதிகள் தோறும் படைத்தலை வீரர்
தகுதியில் செலுத்தத் தந்தனை கொல்லோ!

ர: விரைகமழ் பைந்தார் வீர சேகர!
திரையெனப் படருறும் திறனுடைப் புரவியின்
அளவுநான் கிரட்டி ஆயிரம் கரியின்
வளப்படை இரண்டுநூ றென்ன வந்தது.
வேலொடு வாள்வில் மின்னிட நின்ற
காலாள் இருபதி னாயிரக் கணக்கொடு
வந்த படையிரு வகுப்பா வகுத்துத்
தந்தம் படைக்குத் தகுந்தள கர்த்தர்
நாகமன் அரிய நாதனு நின்றனர்
ஆக, அவருள வறிந்துநம் தானைப்
பிளிறொலி கொண்ட பிறங்கல் மானும்
களிறொன் றிரண்டு கலந்த நூறும்,
தரங்கம் நிகர்ப்பத் தாவிச் செல்லும்
துரங்கப் படையின் தொகுதியெண் ணாயிரம்,

கனைகழல் கச்சணி கைப்படைக் காலாள்
இன்மிரு பத்தோ டிரண்டுசூ ழாயிரம்,
ஆகநம் படையிரண் டணியா நிறுத்தினன்.
வாகை நெடும்புகழ் மன்னவ ! நீயும்
நானும் அன்னவை நாயக மாக
ஏனை வீரரோ டெழுவதா எண்ணினன்.

வீரசே: அன்னதே செய்கை, அம்ம ! அழகிதே !
கன்ன மதம்பொழி கரிப்படை யாவும்
என்வயின் தருக; இருந்தனன் குபேரன்
வன்படை கொண்டு வருதினிக் கடலை
மந்தரம் போல மதித்திட நிற்பான்.
தந்திரம் நடத்தும் தடக்கைச் சிலையணி
வில்வலன் தன்னை விழைந்து கொள்கநீ.

குபேர: மல்வலித் திண்தோள் மன்னவன் என்வயின்
பொருந்திய நண்பெனைப் பொருட்படச்செய்தது; இங்
கருத்தியும் உளதெனக் கானைப் படைமேல் !
களிற்றிடை யானும் கலந்திடில், அவைகள்
பிளிறொலி யோடு பெரும்போர் செயுமால் !
மேனாள் பாரத மெய்ப்போ ரிடையில்,
ஆனைப் படைக்கோர் அதிபதி யான
பகதத் தனைப்போல் படைத்துள வலியெலாம்
மகிதலத் துள்ளார் மதித்திடக் காட்டி,
மன்னவன் உரைத்த வாய்மொழி தவறு
தின்னே காத்தற் கிருந்தனன் எண்ணியே.

[ஒரு போர் வீரன் பிரவேசித்து]

வீரன்: பார்த்திப ! நமது புரசறை வாயிலில்
வார்த்தை கொண்டு வந்தனன் ஒருவன்.

வீரசே: தருக ! [அரியநாதன் உள்ளே பிரவேசிக்க]

அரிய: தந்திரம் தழைத்த காவல !
அருகு வந்தது—"இங் கவிர்மதிக் குலத்தான்
அரசு தந்தவன் அடிவணங் குதியோ ?

விரைசெய் தாரணி வெற்றிவேல் நாகமன்
கணைவழி ஆவி கலங்க நிற்றியோ?
பணைவளம் சூழப் படைத்தநின் னாட்டைக்
காத்திட நினைதியேல், கன்னிநா டொரீஇத்
தீத்தொழில் விட்டுன் தேயம்ஆ ளுதியோ?
இந்நா டிரண்டையும் இழந்து சாதியோ?"
என்று அறிந்து வரவென் இயம்பினன்;—
வந்தனன்; இதுவென் வரவுக் கேது.நின்
சிந்தனை யாவும் செப்புக் நினைந்தே.

வீரசே: [நிந்தனை தோன்றச் சிரித்து]

பற்பல உரைபோல் பகரக் கற்றிலன்;
விற்படு கணையால் விளம்புவன் நாளை;
வைகை நாடிதை வழங்க மாட்டேன்;
உய்கை நாடி உயிர்பிழைத் தோடுமின்!

[அரியநாதன் வெளியே செல்ல]

கேட்டிரோ தூதன் கிளந்த மொழியெலாம்!
நாட்டினை விட்டு நயந்து போவதாம்!
அல்லது தொல்லை அரும்பதி தன்னையும்
மெல்ல இழந்து விழுந்து சாவதாம்!
குபேரன் வில்வலன் குன்றி நிற்பதாம்!
'விபோ!'என் றவனடி வீழ்ந்து பணிவதாம்!—

குபேர: பக்க தேவர் பகர்ந்த சூழ்ச்சியோ?
கொக்கின் தலையில் கொதிப்ப வெண்ணெயை
வைத்துப் பிடிக்கும் வார்த்தை போலாம்!
கைத்த மொழியெலாம் கருதலென் பயனே?
நாளைப் பொழுதே நமக்கு வெய்யபோர்!
காளையர் யாரும் காமின்! காவல!
இன்றிர வினிதா இருந்து துயில்க!
குன்றினின் றிரவி குதித்தெழு காலை,
வென்றி மடந்தை விழைந்து
நின்றிட, வீரம் நிலைத்திட எழுவாம்!

இரண்டாங்களம்

இடம்: நாகமன் சேமப் படை வீடு

காலம்: நண்பகல்

பாத்திரங்கள்: ஓர் ஒற்றன், நான்கு காலாட்கள், சதாசிவ ராய்

நேரிசை ஆசிரியப்பா

ஒற்ற: காலாள் ! இன்று காலையில் நடந்து
கோலிய போரில் கொற்றம் கொண்டதா
விளம்பினை ; யாவும் விரித்துக் கூறுக !—
களத்தில் மாண்ட கருதலர் செயலும்,
கோலா கலனுயிர் கொண்ட வாறும்,
நாலா வகைப்படை நலிந்த விதமும்,
மேவலர்ச் செகுத்த வீரன்
தாவறும் அரிய நாதன் தகவுமே !

1 கா: சண்டையென்றால் சண்டையா! அரியநாதர் சண்டை அல்லவா சண்டை! காலாட்கள் இருபது வரிசை. ஐந்நூறு பேர் வாள் பிடித்தவர். ஐந்நூறு பேர் விற்பிடித்தவர். குதிரை வீரர் நாலாயிரவர். அங்கங்கே கொடித்தலை வீரர்கள் நின்றார்கள். ஆனை குண்டு சேப்பண்ணு, வேங்கடகிரி வரத ராயர், ஜம்பு ராயர், சித்தூர் விக்கிரம ராயர், துப்பாக்கிக் கிருஷ்ணப்ப நாயுடுகாரு !

2-ஆம் கா: அடடே! இதெல்லாமென்னடா? இவர் கேட்டதற்குப் பதிலா ?

1-ஆம் கா: ஒரே போடு பார்த்துக்கொள் ! ஜாக்கிரதை !

2-ஆம் கா: மீசை துடிக்கிறது, வீரப்பனுக்கு மீசை துடிக்கிறது !

1-ஆம் கா: உனக்குக் காலம் கிட்டிவிட்டது ; சொல்லுகிறேன்; கேட்கமாட்டேன் என்கிறாய் ! [வாளையுருவிக் கொண்டு] இந்தா ! ஒரே குத்து !

ஒற்ற: அடே! சண்டை போடாமற் சொல்லுங்கள்.

1-ஆம் கா: சண்டையா! ஒரே பிண்டமாய்ப் பிடித்துக் காற்றிலே ஊதிப்போடுவேன்! நேற்று வந்த பயல்!

2-ஆம் கா: [தனியே நின்று] இவர் காற்றிலே ஊதுவார்!

ஒற்ற: அடே! மறுபடியும் சண்டை வேண்டா. நடந்த வரலாற்றைச் சொல்லுங்கள்.

1-ஆம் கா: ஐயா, முடியாது! இந்தப் பயல்! புத்தியில்லாத முண்டம்! என் முதுகிலே ஒளிந்த பயல்! பீரங்கிக் குண்டைப் பார்த்துக் கொட்டாவி விட்ட பயல்! இந்தப் பயலுள்ள மட்டும் நான் இங்கே வரவில்லை! ✓

[வெளியே செல்ல]

2-ஆம் கா: மோசந்தான்! பீரங்கிச் சத்தத்தைக் கேட்டுக் கிணற்றிற்குள்ளே ஒளிந்த பயலையா இவன்! எனக்குக் கடுக்காய் கொடுக்கிறான்; போகட்டும், போகட்டும்! நான் சொல்கிறேனையா வரலாறு; கேளுங்கள்! நமக்கெல்லாம் பீரங்கிக் குண்டு விடும் வித்தையைப் போர்த்துகீயர்கள் சொல்லிக் கொடுத்தார்களல்லவா? அந்த வித்தை எங்களுக்கு உதவியாயிற்று. படை இரண்டும் கை கலந்தன. கண்ணெடுத்துப் பார்க்க முடியவில்லை. கூப்பிடு தொலைக்கப்பாலே, ஆனை நடுவில் நுழைந்தாலும் தெரியாது; புல்லு வளர்ந்து கிடந்தது. அங்கே படுத்துப் பதுங்கிக் கிடந்தார்கள். சண்டை உண்டாயிற்று. பார்க்கிறவர்கள் கண்கள் பஞ்சடைந்தன. ஆகாசம் மூடப்பட்டது. வீரர்களும் வீரர்களும் தாக்கினார்கள்;—வாளொடு வாள், வில்லொடு வில், அம்போடம்பு, காலொடு கால்,—என்ன சண்டை! சொல்லியா சாத்தியம்! கொஞ்சநேரம் ஒன்றுந் தெரியவில்லை. விழித்துப் பார்க்கிறேன். தூளி தூளியாய்ப் புறப்படுகிறது! ஆகாசம் செவந்து போயிற்று! ஒரு பெரீஇய ஏரியிலே, அலை ஒன்றோடொன்று மோதுகிறது போல, முந்துகிறது; பிந்து

கிறது; நடுங்குகிறது; துவசம் விழுகிறது; துவசம் கிளம்புகிறது; எக்காளம் ஒலிக்கிறது; எக்காளம் சாகிறது; ஓஓஓஓ என்று இரைகிறது; ஆஅஅஅ என்று அழுகிறது; கொஞ்ச நேரம் பார்த்தேன்; கோலாகலன் சேனை பின்னிட்டது. புல்லுப் புதர்களிலிருந்து குண்டு கிளம்பிவிட்டது. ஒன்று, இரண்டு, ஆயிரம், பதினாயிரம், கோடி—கணக்கில்லை! ஓடுகிறார்கள்! விழுகிறார்கள்! கிளம்புகிறார்கள்! பதுங்குகிறார்கள்! தியங்குகிறார்கள்! என்ன பண்ணி என்ன! உதை படுகிறார்கள்! ஓடுகிறவர்கள் மேலே குதிரை ஏறுகிறது! குண்டு பாய்கிறது! இரத்தம் ஊற்றுகிறது!

3-ஆம் கா: நம்முடைய பக்கத்திலே கேட்பானேன்! தப்படிக்கிறது; கொம்பூதுகிறது; கொடி பிடிக்கிறது; ஒரு பக்கம் ஐம்பு ராயர் நகார் பிளக்கிறார்! ஆனைகுண்டு சேப்பண்ணா பம், பம், பம், பம், பம்மென்று சங்கூதுகிறார்!

4-ஆம் கா: போடா! சும்மா சும்மா அளக்காதே! நம்முடைய பக்கத்திலே எத்தனை பேர்களிறந்தார்கள்! எத்தனை பேர்கள் காயப்பட்டார்கள்! அதையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறாயா? குப்பல் குப்பலாகக் கை போன முண்டம், கால் போன முண்டம்,-ஆ! ஆ! மெய் கூசுகின்றது! காக்கை, கழுகு, பருந்து வட்டமிடுகின்றன! 'தண்ணீர், தண்ணீர்!' என்கிறான். தண்ணீர் கொண்டுவர ஒருவன் இரும்புத் தலைச்சீராவை எடுத்துக் கொண்டு ஓடினான். பக்கத்தில் உள்ள ஒரு கால்வாயில் தண்ணீர் எடுக்கக் குனிந்தான். இரத்தம் கட்டி கட்டியா விழுகிறது! தள்ளித் தள்ளிப் பார்த்தான்; எடுக்க எடுக்க இரத்தம்! ஐயோ! பாவம்! எங்கே போவான் தண்ணீருக்கு! குமுதன் இரத்தத்தையே வாரிக் குடித்தான்!

ஒற்ற: நல்லது! சுமார் எத்தனை பேர் இறந்துபோயிருப்பர்? எத்தனை பேர் காயம் பட்டிருப்பர் ?

2-ஆம் கா: யாருக்குத் தெரியும்! சுமார் ஐந்நூறு, அறுநூறு பேர் செத்துப்போயிருக்கலாம். எழுநூறு, எண்ணூறு பேருக்குக் குறைந்தா காயம்பட்டிருப்பார்கள் ?

3-ஆம் கா: அவர்கள் சேதியென்ன ?

2-ஆம் கா: என்ன! ஓடிப்போனவர் இருநூறு பேர் இருக்கலாம். மற்றவர் எல்லாம் போனவர்தாம்!

3-ஆம் கா: இதெல்லாங் கிடக்கட்டும், கேளுங்கள்! அரியநாதர் சண்டையே சண்டை! நல்ல அரபிக் குதிரை! அந்தச்செகப்புப்புள்ளி வெள்ளைக் குதிரை எசமானர் சொற்படியே கேட்கும். அரியநாதர் கையில் ஒரே பட்டாக்கத்தி! கோலாகலன் மேலே பாய்ந்தார். குதிரையும் குதிரையுந் தாக்கின. கோலாகலன் வாளாலே நேரே தலையைக்கட்டி ஒரு போடு போட்டான். என்ன! நாதரா பின் வாங்குவார்! அப்படியே ஒரு வளைச்சல் வளைந்தார்; கத்தியை நீட்டினர்; கோலாகலன் வாள் தூளாய்ப்போயிற்று! அவர் முனைந்து ஒரு வெட்டு வெட்டினர்; அவ்வளவுதான்! கோலாகலன் கக்கரிக்காய்தான்! சங்கத்தை ஊதினர்; முண்டத்தை உருட்டினர்; தலையைக் கொண்டே போய்விட்டார்! அப்புறம் என்ன! சண்டையேது! சேனை ஏது! எல்லாம் போய்விட்டன.

4-ஆம் கா: ஐயா, இந்த அரியநாதர் யார்? எந்த ஊரிற் பிறந்தார்? வளர்ந்தார்? எமனாக அல்லவா வந்திருக்கிறார்! இவர் கதையைக் கொஞ்சம் சொல்லுங்கள்.

சதாசி: [ஒட்டுக்கேட்டு உள்ளே பிரவேசித்து]

அடே, அரியநாதன் வரலாறு தெரியாதவருண்டோ ? கேளுங்கள், சொல்லுகிறேன்:

நேரிசை ஆசிரியப்பா

தொண்டைநா டென்னும் தோகை முகமெனப்
பண்டைநாள் அமைந்த பதியெனும் காஞ்சி
தன்னிலே, பரந்து தழைத்த **மெய்ப்பூ**
டென்னும் கிராமத் திசைபெற வந்தோன்;
வேளாண் குடிக்கோர் விளக்கே போல்வான்;
தாளாண் மைக்கோர் தலைவன்; நான்கொடு
முப்பது சென்ற மூன்றாண் டுணர்ந்தோன்;
பைப்பணி தலைமேல் படிந்துநின் றாடச்
சிறுவனங் கொருபால் திகழ்தரக் கண்டு
மறுவறு மறையவர் 'மந்திரி யாவன்!' என்
றுரைத்தனர்; கணித உண்மைநூல் கடந்தோன்;
திரைக்கதி போலத் திகழும் கொய்யுளைப்
பரிமா ஓட்டலிற் பாண்டவர் நகுலன்;
செருவலன்; போர்த்துகல் சேனா பதியாம்
ஒப்பிலாக் **கிரிஸ்டோ வோதிவி கூரிதோ**
தப்பிலாக் குண்டு தைத்திடும் குழலாம்
பீரங் கிப்படைப் பிரயோ கஞ்சொல
நேர்மையில் கற்ற நிபுணன்; வில்வாட்
பயிற்சியில் வல்லவன்; பல்படை விநோதன்;
எயில்வளைத் திடுதலில் ஏற்றம் உடையோன்;
இன்னவன் வயதா யிரத்தைந் நூற்றுப்
பன்னி ரண்டெனப் பகர்தரும் ஆண்டில்
இருபத் தாறென் றியம்புவர்; நாகமன்
செருவித் தாரச் சேனைத் தலைவனாய்,
அவனுக் குதவியாய் அமைந்த வீரன்
இவனே என்ன ஏத்திட நின்றோன்!
அற்றைநாள் தொடக்க மான **ரேய்ச்சூர்**
முற்றுகை, ஐந்து மூன்று நூறுடன்
கொண்ட பதின்மூன் றாண்டில், கோல
கொண்டாச் சுல்தான் **கூலி குட்புஷா**
சொல்லரும் போரிற் சூழ்ந்தவன்!

சுல்தா **ளல்லா வுடீனி மாதுஷா**
சண்டைவென் றவன்;சிவ சமுத்திரத் தோடு
பண்டுசீ ரங்கப் பட்டணம் முற்றுகை
கிடத்தினன் ; உதய கிரிப்போர் வல்லான் ;
திடமுள கிருட்டின தேவ ராயனும்
மன்னவ னொடு,முதல் மந்திரி சோதரர்
தன்னுடைப் புத்திரர் தகுநா டெந்தில
கோப மந்திரி, குடையிள வரசர்,
மாபுகழ் கொண்டத்ர மாசி பண்டிதர்,
தம்மிறைக் குறுதி தனைப்புகல் சாலுவ
திம்மன் ஆதியர் சேரத் திருவுளந்
தன்னில் மதிக்கத் தக்க புகழோன் !
மன்னன் இராச மகேந்திரஞ் சென்றவண்
உரிய ராயரோ டுடன்ப டிக்கையைப்
புரியத் தூது போனவன் ; ரேய்ச்சூர்
எழுதரம் முற்றுகை இவனால் வெற்றியே
பழுதற நாமும் படைத்தது! **இசுமேல்**
அலிக்கிவன் பெயரை அறைந்திடின் மெய்ம்மயிர்
சிலிர்த்துளம் தளர்ந்து சிங்கசொற் பனமாம்!
அவன்தள கர்த்த னும்சலா **பத்கான்**
இவற்குச் சலாஞ்செய் திருக்கிறான் ! இவனையே
புண்ணிய **மகம்மது** போற்கொண் டாடுவர்!
கண்ணியம் எல்லாம் கருதிஉம் **மாதுஷா**
அமீர்பீ ரீதோ டனைவரும் இந்நாள்
எமையாள் பலனென் றிருப்பர் உலகோர் !
என்னே பலபட இயம்புவ துளது !
நன்னடத் தையையே நயந்தவன் ; உள்ளம்
கரைந்துநின் றெளியரைக் காப்பதில் உலகம்
புரந்தருள் செய்யும் புகழ்த்திரு மாலே !
கண்டகர் ஆவி கவர்வதில் கைலைஇல்
கொண்ட சிவனெனக் கூறத் தகுமால்!
தருமத் தாபனஞ் செய்வதில் சரோருகப்

பிரமனென் றிவனைப் பேசவும் படுமே!
ஆதலின் இவன்செயல் அனைத்தும் ஓர்ந்து
மேதினி உள்ளார் விரும்பிப் பிற்றைநாள்
இவற்கிங் காலயம் எழில்பெறக் குயிற்றி,
உவப்புடன் இவன்புகழ் ஓதியும் நிற்பரால்!
அன்றியும், புகழ்சால் அரிய நாதன்
வென்றியும் குணமும் விநயமும் நாளும்
பார்ப்பத் தனது பக்கத் திரானேல்,
போர்ப்புலி நாகமன் பொழுதுபோ காதுகாண்!
இத்தகை அரிய நாதனுக் கிந்தக்
கத்துவா ரிதிபோல் கலந்து நின்ற
காலாட் படையைக் கலக்கிக் களத்தில்
கோலா கலனுயிர் கொண்டவன் சேனையை
ஆசறக் கொன்றனன் என்ன அனைவரும்
பேசிய மாற்றம் பெருமை ஆகுமோ!
நல்லது! நிற்க. நாடுமின்! ஆங்கண்
தொல்லை வாயுவும் தோற்கு மாறு
நாடி ஒருவன் நம்பால்
ஓடி வருகிறான்; ஒதுங்குமின் சிறிதே!

[ஓர் ஒற்றன் பிரவேசித்துச் சதா சிவ ராயனிடத்தில் ஒரு கடிதத் தைக் கொடுக்க, அவன் அதைப் படித்து]

வீரர்களே, கேட்பீர்களாக! படைத்தலைவர் கடிதத் தைப் படிக்கின்றேன்:

" ....
போரில் வெற்றி கிடைத்தது. கோலாகலனுயிர் கவரப் பட்டது. இது நிற்க. நம் வீரரில் இறந்தவர் தொகை ஐந்நூறு. இவர் நிலையைக் காண என் மனம் இரங்கு கின்றது. இறந்தவரை அடக்கம் செய்வதும், காயம் பட்டவர்களை டோலிகளில் ஏற்றிப் பாசறைக்கனுப்பு வதும் தொழிலாகக் கொண்டு நின்றனன். மற்றொரு

சார், நாகமனுக்கும் வீரசேகரனுக்கும் நடக்கும் போரில் இருதிறத்தாரும் ஒத்திருத்தலை ஒற்றர் கூறக் கேட்கின்றனன். விரைவில் அவனுக்கு உதவி புரிய விரும்பினன். ஆதலின், பாசறையை நோக்கிப் போந்த பாடுற்ற நம் வீரர்கட்குத் தகுந்த விடுதிகள் அமைத்து மருத்துவன் பால் விடுத்து, எண்ணூறு வீரர்களை அணி வகுத்த படையுடன் நம்பால் விரைந்து வருக—

இங்ஙனம்,

அரியநாதன்."

நேரிசை ஆசிரியப்பா

வீரர்காள் ! ஈங்கு வீணே நிற்க
நேரமோ இல்லை ! நீவிர் கேண்மின்:
நொடியில்நும் கோலம் நோக்குமா றுறுவன் ;
கடிதின் ஏகிக் கைப்படை கலப்ப
நாமும் அரிய நாதனைச்
சேம மாகச் சேருதும் விரைந்தே !

மூன்றாங்களம்

இடம்:	சோழமாளிகைப் புறத்தொரு வெற்றிடம்
காலம்:	எற்பாடு
பாத்திரங்கள்:	மூன்று யாழ்ப்பாண வீரர், ஒரு சிங்கள வீரன், பூந்தத்தை

1-ஆம் யாழ்: உண்ட வீட்டிற்கு இரண்டகம் உன்னுவார் உளரோ ! யாமும் சோழன் தானையில் வீரரெனச் சமைந்தேம். இங்ஙனே நம் தானை காவலர் அரிய நாதன் மாட்டணுகினர். அன்னவர் பிழைத்தார். யாமும் ஏழாட்டைச் செலுத்தி இப்பாண்டி நாட்டிற் சேவகம் புரிந்தாம். இவ்வணம் இத்தண்டத்தலைவர் தவறிழைப்பாரெனக் கருதிலேம். கேண்மின் : **வீரர்** காள் ! நம்படைத்தலைவர் அரியநாதனை அணுகவும்,

வீரசேகரனுடன் கைகலப்ப நமதுளம் எழுந்ததோ! யாம் போர் புரிந்தாலொப்ப நடித்தனமே அன்றி வேறில்லை.

2-ஆம் யாழ்: வற்கடம் ஆண்டு பன்னிரண்டு கழிந்த பின்னர், சாமையும் சோளமும் செழித்துற, வைகை நன்னதி நீர் மல்க, சாமளை கோயிலருச்சனை கொள்ள, சதுக்கங்கள் பலபட இழைத்த அப்பாண்டித்தலைவன் நகரம் துறந்தோட, தோள் வலி குன்றிய யாம் புரிவதென்னே! என்னே! புலனிழந்து நிற்கின்றனம்.

3-ஆம் யாழ்: சொக்கலிங்கன்தான் அரியநாதன்பாற்புக்கு அழியாக் கவ்வைக்கிடனாயினன். அது நிற்க. மத்தளத்தை இரு புறமும் அறைதல் போல, இச்சோழப் பெருமானை அப்பக்கம் நாகமனும் இப்பக்கம் அரியநாதனும் தாக்கும் போரில், அந்தோ! பாவம்! இவன் என் செய்வன்! தானை புறங்காட்டி அப்புறம் இப்புறம் இரிந்தோட, யாமும் பின்னிட்டோடி வந்தனம்.

சிங்க: அங்கு! அதோ! அம்மை!

[பூந்தத்தை உள்ளே பிரவேசித்து]

பூந்த: எங்ஙனம் வந்தீர்? போர்க்களம் விட்டீர்! நுங்கடமையங்கன்றோ? போர் புரிந்தாயிற்றோ? ஏன் வந்தீர்?

1-ஆம் யாழ்: போர் முடிந்ததாக வந்தேம்.

பூந்த: என்னே! நம்மிறைக்கு வெற்றியோ? நும்வீரம் நாட்டினிரோ?

2-ஆம் யாழ்: எம் படைத்தலைவன் பழிப்படைய நேரலரோடு கலப்ப, யாமும் அன்னமிட்டாரோடு பகைத்தல் அழகல்ல எனத் தானையை விட்டுப் பிரிந்திவண் போந்தனம். இனி யாம் அவண் சேர்கிலம். யாவரும் இந்நாட்டை விட்டு நம்முடைய நாடு சேருதும் எனக்கருதினம்.

பூந்த: என்னை!

1-ஆம் யாழ்: பூந்தத்தைக்குப் போர் வண்ணம் கூறுய்.

2-ஆம் யாழ்: நங்காய்! போர் வண்ணங் கூறுவன், கேளாய்: கதிரவன் உச்சம் சென்று சேர்ந்தான். யாம் சொக்கலிங்கன் படைக் கூற்றினின்று வெய்ய போர் விளைத்தனம். நாகமன் சேனையை உற்ற பல வீரர்களுக்குக் கூற்ருய் நின்றனம். இரு படைக்கடலும் ஒன்றி, வெற்றியிங்ஙன் தோல்வியிங்ஙன் என்று கண்டறிதல் வாளாக்கிடப்ப, எற்பாடுற்றது. அங்ஙனே ஒரு பெரும் படை எம் பின்னல் விளங்குற்றது. அப்படை அரியநாதன் படையாம். அப்படைஞர் காற்றினும் கடுகிப் போந்தார்; எம்மேல் எஃகெறிந்தார். யாம் நாகமன் படையை வீட்டல் விலகி ஒருசார் திரிந்து சிலவர் இரிந்தோட, சிலவர் பரிந்து வீழ, சிலவர் கலங்கிச் சோர, உறுத்துப் போர் புரிந்தனம். சில பொழுது எங்ஙனே போர் புரிந்தாம்! இங்ஙனே? அங்ஙனே? வீரசேகரச் சோழன்பாலோ? அரியநாதன்பாலோ? யாமறியேம்! சொக்கலிங்கன் என் செய்தான்! மற்றொரு கால் நம் படை போர் சலித்தது போல வாளா அசைந்து நின்றது. பின்னர், அந்தோ! அரியநாதனையே சேர்ந்தது! அங்ஙனம் விளைந்த போர், அம்ம! பெருங் கொடுமை! சோழன் என் செய்வான்! பாவம்! குபேரன் யானைப்படைதான் சற்று வலிந்து போர் உக்கிரங்கொண்டு பகைவர் குண்டுக்காற்றுவதாய் அங்குமிங்கும் பிளிறொலி காட்டி வீரரையுருட்டியும், பரிமாவைத் துளைக்கரத்தால் மாட்டியும், துவசம் வீட்டியும், தேரைச்சாய்த்தும், குபேரன் சொற்படி நின்ருடிப் பலருமெச்சப் போர் நடாத்தியது. காலைப் பொழுதெல்லாம் வெற்றியே கண்டார்க்கு மாலைப் பொழுதெல்லாம் வெற்றியற்றதே! இன்னம் சொல்வதென்னை! அரிவை! இவ்வுரத்திற்பட்ட காயமெல்லாம் புகழை உகுத்தன! இன்னொரு படைத்தலைவன் எம் படைத்தலைவனுக, யாமுஞ் சேவகம் செய்தனமே! எமது வாணுள் வீணுளல்லவோ? உண்மையுரைக்குப்

50740

புகுந்திடில், வீரசேகரனுக்குக் கூற்றுவன் கூற்றுவ னல்லன்; இந்நின்ற சொக்கலிங்கனே கூற்றுவன்; அந்நின்ற அரியநாதன் கூற்றுவன்; மற்றும் யாமல் லாத வீரரெல்லோரும் கூற்றுவர்; அன்னவன் சோற் றை உண்டு நேற்றை அன்புடனிருப்போமென்ருர் எல்லோருங் கூற்றுவர்; பிற்றை நாள் வஞ்சங்கொடு இன்னே கொடுமை இழைத்தாரெல்லோரும் பொல் லாத கூற்றுவரம்மே! சோழன் இரு புறத்துச் சேனை களோடு போர் புரிதலாற்ருது தடுமாறிப் பெருங்கால் அடித்து மோதப் பெரும்பௌவத்தே கூம்பொடிந்த நாவாய் போல அசைந்து சற்றே தூங்கினன். இவன் துவசமற்று வீழ்தல் திண்ணமெனத் தோற்றிற்று. பிறகு சேனை புறங்காட்ட, தானைத்தலைவர் வீழ, யானைப்படை அல்லோலப்பட்டோட, கொய்யுளைப் பரிமா பொட்டென்று வீழ்ந்திறப்ப, காலாள் கவந்த மாய் நின்ருட, வீரசேகரன் தலையும் உடலினின்று பிரிக்கப்பட்டு நாகமன் கொண்டாடப் போயதே! அரியநாதனும் தான்கொண்ட படையைப் பல்லியம் கடல்போல ஆரவாரிப்ப, வீரர் துள்ளொலி விண்ண கம் சார, வெற்றித்திரு கொடிமீதாடச் செலுத்திச் சென்று நாகமனுடன் கலந்தனன். நாகமனும் அரியநாதனைத் தன் அகலந் தழுவினன். யாமும் தோல்வியெனும் பேயை மணந்து, பழிப்புக்காளாய் வந்தனம். இவ்வண்ணமே போர் வண்ணமும் எம் வண்ணமும் காணுய்! நங்காய்!

பூந்த: அந்தோ! சோழன் வினை இஃதாயிற்ரே! நீர் வளம் பொருந்தி நெடிது நாள் வளர்ந்த சோழ மண்டலமும், செந்தமிழ்த்தாய்க்குச் சிற்றிலாயும், தடாதகைப்பிராட்டியின் தொல்குல மன்னர் ஆணை யிற்படிந்ததாயும், நம்மவர்க்குப் புகலிடமாயுமிருந்த கன்னி நாடும், இன்னே விஜய நகரத்தார்க்கடிமைப் பட்டனவோ! ஐயகோ! ஈசன் செயலிஃதாய் முடிந்

தோ! யாமும் கன்னி நாடு ஒரீஇ ஈழம் விழைதல் ஆயிற்றே !

சிங்க: போதும்! போதும்! வருத்தமேன் ?

பூந்த: மெய்யே! வருந்தல் வீணே ! இவ்வெறுவெளியில் நிற்பார்க்குத் தீங்கு விளையும். யாமும் இல்லம் நண்ணுதும்; வம்மின்! அகம் புக்கு ஈழம் செல்வான் உன்னுவம்! மாலை நணுகிற்று. வெயிலவன் குடகடற்புக்கு மறைந்தனன். வம்மின் ! வம்மின் !

நான்காங்களம்

இடம்: நாகமன் பாசறை

காலம்: மாலை

பாத்திரங்கள்: நாகமன், சந்திரசேகர பாண்டியன், சொக்கலிங்கன், ஒற்றன் முதலியவர்

நேரிசை ஆசிரியப்பா

நாகம: தோண்மையே துணையாத் துன்னலர்த் துடைத் [துயர்
ஆண்மையே பூண்ட அரிய நாத !
சென்னியும் யானும் சேரக் களத்தில்
துன்னிய வெம்போர் தொடங்கிய காலை,
வெற்றியும் தோல்வியும் விளம்பல் அரிதாய்க்
கற்றவெம் போர்வலி காட்டி நின்றனம்,
ஆயதோர் அமயத் தரும்படை யோடுநீ
காய்சினக் கோலா கலனுடன் பொருத
வண்ணமும் அன்னவன் வான்படை இரிந்துதன்
எண்ணமும் செயலும் இழந்து நிற்பக்
கண்டவன் தலையைக் கடிந்த வண்ணமும்
மண்டலமாக வளவனை வளைந்து
கொண்ட வாறும் கூறுக.

அரிய: வேலோய் !
தண்டுடன் சென்று தரியலர் படையைச்
சாடினன்; நமது தானை வீரரும்

கூடிக் கலந்து குண்டுகள் செலுத்திப்
புரிந்த போரெழு புகைப்படாம் போர்ப்பக்
கரிந்தவர் சாம்பிக் கலங்குங் காலையில்,
நம்முடை அனிகம் நாட்டிய வீரம்
எம்ம னோரால் இயம்பற் பாலதோ!
இடையிற் செலுத்திய இவுளி யாலவர்
படைக்கடல் அலைந்து பட்ட தன்மைதான்
சொல்லவும் பெறுமோ! சோரியும் நிணமும்
எல்லைகள் தோறும் இழிந்து படிந்திட,
வெருவியே சிலவர் விரைந்தோ டினர்; பலர்
செருக்களத் தேயுடல் சிந்திநின் றனரே.
அன்னதோர் காலை அடியனுட் புகுந்து
துன்னி வெம்போர் தொடங்கிப் பகைவன்
தலையைத் தள்ளித் தானை புறந்தர
மலைந்துபுண் பட்ட மறவரை நிறுத்திச்
சேமப் படையில் சிலவரைச் சேர்த்துப்
பாமக் கடல்போல் பரந்து நின்ற
சோழன் தானையைச் சூழ்ந்தனன் சூழ்ச்சியால்.—
ஈழத் தானைக் கிறைவன் இவன்காண்;
வளவன் சேகரன் வஞ்சனை அறிந்தோன்;
களத்தில் என்பால் கலந்தனன்; வழுதி
பிரிவாற் றாது பேதுறு மனத்தன்;
உரிய செய்கையன்; உள்ளந் தூயோன்;
இவனைப் போற்றுதல் இரும்புக ழாமே!

[சொக்கலிங்கன் எழுந்து பணிய]

நாகம: எவனைப் போற்றுதல் இரும்புக ழாமோ,
அவனைப் போற்றுதல் அடியன் கடமை.
உவந்தனன் அமர்க! உயர்படைத் தலைவ!—
தவந்தனம் யாவும் தன்மனம் அடங்கித்
துன்பம் ஆதி தொடர்ந்த வேனும்
இன்பமா கக்கொண் டிருத்த லாகும்!—
மன்னவன் வழுதி வளநா டெழுந்து

துன்னுங் காலை, தொடர்ந்து சென்றவற்
குறுதுணை யாகிமற் றுன்பதம் பெறுக.

சந்திர: குறுநிலம் புரக்கும் கொற்றவர் மகுட
கோடியால் தேய்வுறும் குரைகழல் வீர!
நீடிய புகழையே நிருபற் களிக்க
நின்ற தன்மையன்; நேசமிக் குடையோன்;
குன்றாப் போர்வலி கொண்டவன்; பண்டியான்
செவ்விதிற் செங்கோல் செலுத்தும் நாளையில்,
தெவ்வர் இரியச் சேவகம் செய்தனன்!
இனையன் அன்றிமற் றேனையர் யாருமென்
மனக்கினி யாரிலை; மதித்தனை அதுவே.

நாகம: காலை தொடங்கியான் கண்டவெம் போரில்
தோலா நின்றுபோர் தொடுத்தனன் சோழன்;
பரிதி உச்சம் படுபகல், அன்னவன்
விரிகதிர் ஒப்ப வெங்கணை செலுத்திப்
பொருத போரிடைப் புகுந்து, யானும்
விருந்து காட்டி விளங்கிய காலை
ஏற்பா டுற்றிட எதிரிபா டுற்றான்;
மற்பா டுற்றதோள் வலந்துடித் திட்டதால்;
இதற்குக் காரியம் எண்ணி இருந்தனன்!
அதற்குள் வரவே ஆயதின் றறிந்தனன்!

[ஒரொற்றன் பிரவேசித்து]

ஒற்ற: தேய்மதி போலத் தெளிவிலா முகத்தாள்,
ஆய்மலர் உகுத்த அருங்கொடி அன்னாள்,
தாவிய புகையால் தைவர நின்றதோர்
ஓவியப் பாவையென் றுரைக்கத் தக்காள்,
விழிவழிப் பெய்து விலகுநீர் வெள்ளம்
ஒழுகமுன் றானைகொண் டொற்றி நின்றனள்;
விரிந்திடு குழலள், வெய்துயிர்ப் புடையள்,
பரிந்த உரையுடன் படுகளம் நின்றனள்;
மெல்லியள்! பாதம் வெதும்பிடப் பரலிடைப்
புல்லிட நின்றது! புவனம் ஏங்குறும்!

நாகம: சோகம் உற்றதாச் சொன்ன
தோகையைக் காணத் தோழர் எழுகவே.

ஐந்தாங்களம்

இடம்: போர்க்களத்தின் ஒரு சார்
காலம்: மாலை
பாத்திரங்கள்: கனக வல்லி, நாகமன், அரியநாதன்,
செவ்வப்ப நாய்க்கன், சொக்கலிங்கன் முத
லானவர்கள்

[கனக வல்லி, தலை சிதறுண்டு கிடந்த
கணவன் உடலை நோக்கி]

கொச்சகம்

கனக :

காவலனே ! என்னருமைக் காதலனே ! கார்க்கடல்சூழ்
பூவலயம் ஆண்ட புரந்தரனே ! பொன்றினையோ !
பாவியிழைத் திடுவிரதப் பலனிதுவாய் விளைந்ததுவோ !
ஆவிதியே ! என்தலையில் அன்றமைத்த வாறிதுவோ !

தாட்டீக மாகத் தரியலர்முன் நின்றசெயல்
கேட்டேன் இருந்தேன் கேடிலையென் றேபாண்டி
நாட்டாசை யாலே நடந்தவென தாருயிரைக்
காட்டீரோ ! என்னுசைக் காதலனைக் காட்டீரோ !

மன்னு ! மனக்கினிய மணவாளா ! மனுகுலனே !
என்னுவி ஏங்கி இடர்க்கடலில் பட்டுழலப்
பொன்னுடு செங்கோல் புரிவானீ போயினையோ !
ஒன்னார் படைக்குனையான் உண்ணக் கொடுத்தேனே !

அறுசீர் விருத்தம்

வடவைபோ லிரண்டு பாலும் வந்துனை வளைந்த சேனைக்
கடலிடை நின்ற வென்றி காண்கிலேன்! களத்தில் வீரர்
இடையிலுன் உடலைக்காண எத்தவம் செய்தேன் அந்தோ!
விடவரா நுங்கும் அந்த வெண்மதி ஒத்தேன் ஐயா !

வேறு

பையரவின் பருமுடியும் பருப்பதமும்
கறையடியும் பரிக்கும் இந்த
வையமதிக் குடைநிழலில் வளரஅறம்
நிற்பத்திறை மன்னர் உய்ப்பத்
தையலர்தம் கற்புயரத் தனியரசு
புரிந்தபெருந் தகையே! செல்வம்
பொய்யெனவே துறந்தனையோ மறந்தனையும்
புண்ணியனே! புலம்ப வைத்தே!

[நாகமன், அரியநாதன், செவ்வப்ப நாயக்கன், சொக்கலிங்கன் முதலானவர்கள் உள்ளே பிரவேசிக்க]

கொன்றையணி பரமனுறை கூடல்பெற
நினைத்ததுநற் கொள்கை அன்றென்
றொன்றலவே பலஅறங்கள் உரைத்தேனை
இகழ்ந்தனைபோர்க் கொருப்பட் டாயே
அன்றுதான் உணர்ந்திலையே யாக்கைதலை
வேருக அமைந்து நின்ற
இன்றுதான் அறிந்தனையோ என்னுரையும்
இன்னுரையா இருந்த வாறே!

நேரிசை ஆசிரியப்பா

நாகம: தோகை அடைந்த துயரம் பெரிது!

செவ்வப்ப: நாகம! கொடிது நங்கையின் அவலம்!

அரிய: எத்துணை மனவலி எய்திய மாந்தரும்
இத்துணைத் துயருக் கிரங்குவ தியல்பே!

கனக: [இறைஞ்சி நின்று]

பேதை பாவியாப் பெண்பிறந் தேனிம்
மேதினி யாட்கோர் வெய்ய பொறையாய்ச்
சுற்றமும் இழந்தேன்; சோகமும் உற்றேன்;
நற்றவன் இழந்து நான்அல மந்தேன்;

நாடும் இழந்தேன்; நாண்துறந் திங்குத்
தேடியே வந்தேன்; திக்குவே றில்லை;
ஆவி போற்றவும் அறியேன்; ஒருவழி
வாவிநீர் வற்றிட வாடிய மீன்போல்
ஆயதென் செயலும்; ஆக்கமும் இழந்தேன்;
தூய்யக மானீர்! தமியனைக் காத்தற்
கெவரினி உள்ளார் இயம்பற் பாலார்?

நாகம: புவனி வேந்தன் பொன்றிடக் கண்டது
விதிவச மாகும்; வீணும் அவலம்!
பதிபடு துயரம் படருறேல், அம்ம!
ஆரியப் படையூர் அரணை தந்தனம்;
வேரியங் கமலம் விளங்கு வேலிகள்
ஆயிரம் தந்தனம்; ஆர்க்கும் நூபுரச்
சேயிழை யாரில் சிலரையும் தந்தனம்;
அந்நகர் உனதே; அமர்ந்து வாழ்க!

கனக: இந்நலம் தந்தீர்; ஏழை உய்ந்தனன்;
நாயகன் உடலும் நல்குவீர் ஐய!
பாய்திரை உலகம் பழித்திடா வண்ணம்
எங்கோன் உடலை ஈமம் சேர்த்துவன்.

நாகம: நங்காய்! தந்தனன்; நயந்து கொள்க.

கனக: விடைதரக் கொண்டேன்; விரும்பிய எல்லாம்
அடையப் பெற்றேன் ஐய!நீர் வாழி!

[ஒரு சேவகன் வீரசேகரனுடலை
எடுத்துக்கொண்டு பின் வர,
கனக வல்லி வெளியே செல்ல]

நாகம: பொன்னி நாட்டின் பொலிவே நீர்வளம்!
அன்னதற் கிணையென அமைந்தநா டுண்டோ?
ஆதலின் அஃதே அவனியின் திலகமாம்!
மாதவப் பயனால் மற்றதைப் பெற்றோம்
என்று செருக்கை எய்தா திருந்து,
நன்றுப் புரத்தல் நமது கடனே!

மன்னவன் ஆணை வரவை நோக்குதும் !
இந்நா டாளுதற் கேற்றம் உடையோன்,
சீரிய சிந்தையன் செவ்வப்ப நாயக்கன்,
கூரிய மதியன், கோனெனத் தகுமால் !
நாயக! என்னுரை நயந்து கொண்டுநீ
தூயநா டோம்பத் தொடங்குக; யானும்
அரிய நாதனே டணிமதில் பாண்டி
பரிவுடன் சென்று, பல்லியம் துவைப்பச்
சந்திர சேகரன் தார்முடி சூடச்
சிந்தை உவந்து செந்தமிழ் நாட்டைத்
தென்னவன் செங்கோல் செலுத்த,
மன்னவன் உரைப்படி வழங்கவெண் ணினனே!

ஆறுங்களம்

இடம்: நகர்ப்புறத்தொரு பூஞ்சோலை
காலம்: காலை
பாத்திரங்கள்: தாதியர், சேவிலியர், தோழியராயம், காஞ்சனையம்மன், மூர்த்தியம்மன், சின்னம்மன், இலட்சுமி அம்மன், மதிவிலாசினி, கஸ்தூரிரங்கம்மன், சுந்தரியம்மன்.

நேரிசை ஆசிரியப்பா

காஞ்ச: நறுந்தேன் பெய்தேன், நங்கை!இவ் வள்ளம்,
முறுவல் கொண்ட முகத்துடன் வாங்கிப்
பருகியென் தோழி ! பவளவாய் திறந்தே
ஒருமொழி எனதுளம் உவப்பக் கூறுவாய்!

மதிவி: [காஞ்சனை நீட்டிய வள்ளத்தைத் தனது கையால் விலக்கி]

வள்ளமும் வேண்டேன் ! வார்த்தையும் வேண்டேன் !
உள்ளம் வெறுக்க உரைத்ததே போதும் !
மலர்களைக் கொய்து மருவிய காலையில்

அலர்பட உரைத்தாய் ; அன்னது கிடக்க ;
நீர்விளை யாடல் நிகழ்ந்த போதும்
ஒருரை பகர்ந்தாய், உள்ளங் கலங்க !
தீயினுற் சுட்டபுண் ணுள்ளா றுமாருதே
நாவினுற் சுட்ட வடுவென் றுணர்ந்திலை.
போடிபோ ! உன்றன் பொதுவுறு நிலைமை
கோடிய செய்கை கொடிது ! கொடியனுய் !

காஞ்ச: [மதிவிலாசினி விம்மிவிம்மிக் கண்ணீர் சொரிந்து நிற்ப அவளைத் தழுவிக் கண்ணீரைத் துடைத்து]

என்னடி பிழைபட இசைத்தேன் ? ஏழை !
துன்னிய கண்ணீர் துளிப்ப நின்றனை !—
நதியுறு புனலை நலிய எற்றினை !
மதியிலி யானும் மகிழ்விளை யாட்டில்
பேசிய உரைகளைப் பிழையெனக் கொள்ளேல்.—
ஏசுதல் எனக்கும் இயற்கை அன்றுகாண்.—
கண்களோ, சிவந்தன ! கமலவாள் முகமோ,
பெண்கள் இரங்கப் பெரிதுவா டிற்று !
இழைகளும் குழைகளும் இலங்கப் பூண்டோம்.
விழைந்து கொய்த விரிமலர்த் தொகுதியைக்
குழையக் கோதிய கூந்தலில் முடித்தோம்.
மழைநெடுங் கண்ணுய் ! வருக ! வனைக
ஆடையா பரணம்! ஆரம் புனைக !
சேடியர் யாரும் சேர்ந்து கும்மி
கொட்டுவம், எழுக ! கோதையே! விரைந்து,
பொட்டும் அணிந்து, பூண்பன பூண்டு,
வள்ளம் பெய்த மதுவினை அருந்தி,
உள்ளம் களித்துன் ஊடல் தீர்ந்து,
செவ்விதின் போதுக! சித்தசன் நலத்தை
நவ்விநேர் விழியாய்! நயந்து பாடுவம்!

மூர்த்தி: மாதருங் கலமே ! மதிவிலா சினியே !
ஏதுனக் கரிதுகாண், ஏழை!நீ செய்யும்

சாலமோ பெரிது! தமனியப் பாவையின்
சீலநன் மொழியுன் சிந்தையைச் சுடுமோ?
வைகறை யாமம் மணல்தடம் மலிந்த
செய்கரைப் பாங்கர்ச் செறிந்த பொழிலிடை
நங்கையர் சூழ்தர நாமிவண் உற்றே
செங்கை சிவப்பச் செழுமலர் பறித்துத்
துங்கபத் திரையில் தோய்ந்துநீ ராடிக்
கொங்குலாம் மலரைக் கோதையில் சூடி
ஆடையும் கலனும் அழகுறப் பூண்டு
நீடுறப் பொலியும் நித்தில மாலையும்
சாந்தமும் புனுகும் தைவரக் குங்குமம்
காந்திட நுதலில் களிப்புடன் அணிந்து
மதுவை உண்டு மனங்களித் திட்டனம்.
இதுவெம் செயலாய் இருப்ப, ஏழை!நீ
வாடிய முகமும் வருத்தம் காட்டிக்
கோடிய சிந்தையும் கொண்டனை யாகி
நின்றனை; பாவம்! நினக்கிது செயலோ?
இன்றுன் கூந்தல் எடுத்து முடிப்பேன்!
வாடியென் கண்ணே! வாடா மலர்களைச்
சூட்டுவன்! கலனும் தோடும் பூட்டுவன்!
திலகம் சேர்த்துவன்! தேனையும் ஊட்டுவன்!
இலகுற எழுவாய், ஏந்திழை யாரொடும்
இனிதின் ஆடி இன்புற் றிருப்போம்.

மதிவி: வனிதை காஞ்சனை வார்த்தையை மறுத்தேன்;
வள்ளம் கொடுத்தால் வணங்கி வாங்குவன்;
உள்ளம் மகிழ்ந்தேன்; ஒண்டொடி! வந்தேன்.

[மூர்த்தியம்மனும் மதிவிலாசினி
யும் வெளியே செல்ல]

சின்ன: காஞ்சனை அம்ம! கருதிய ஆடலில்
யாஞ்சில பாடல் யாதோ இசைப்பது?

காஞ்ச: மன்மதன் கோட்டம் வளரு மாதனம்
நன்மதிக் குடைக்கீழ் ஞாலம் புரப்போன்

சீரினைப் பாடிச் சிற்றிடை துவள
நேரிழை யாருடன் நேயமாய்ப் பாடுதும்
பாங்கியர்! வருக! பாடவும் ஆடவும்
பாங்குடை யார்களும் பரிந்து வருக!
வாழி!என் மூர்த்தியும் மதிவிலா சினியும்
தோழிய ரோடும் துலங்க வருவர்;
வம்மின்! வம்மின்! மாதரீர்!
கும்மி வசந்தனைக் குறித்துக் கொட்டவே.

[மூர்த்தியம்மனும் கோலங் கொண்ட மதிவிலாசினியும் உள்ளே பிரவேசிக்க, தாதியர் செவிலியர் மருங்கு சூழ்ந்து நிற்பத் தோழியராயம்கோட்டம் வளைந்து கும்மியடித்தல். மதிவிலாசினி முறை வைக்க, மற்றவர் எல்லோருஞ் சேர்ந்து சொல்ல]

சித்தசன் கும்மி

மதிவி: கையில் தரித்த சிலைகரும் பாம்;அவன்
எய்யும் கணையும் நறும்பூவாம்;
மையல் இழைப்பதும் பொய்யுருக் கொண்டிந்த
வையத்தை வென்றனன் மங்கையரே!
அந்தச் சிலைக்குயர் நாண் அரி வண்டுகள்
ஆனவை; பச்சைப் பசுங்கிளிதான்
கந்துக மாகவும் கொண்டனன் காணந்தக்
கருப்பு வில்லியும் வல்லியரே!
ஆர்கலி யேமாரற் கறைந்தொ லித்திடும்
பேரிகை யாம்;மல யக்காலும்
தேரெனச் செப்பியே செங்கைகள் கொட்டிநீர்
சேரக் கும்மி அடியுங்கடி.
அம்புலி யைக்குடை யாகவே கொண்டவன்,
அங்கனை யார்படை யன்,கங்குலை

மானை
உம்பல் எனக்கொண் டுயர்ந்தவன் என்றிடை
ஒசிந்து கும்மி அடியுங்கடி.
தேனைப் பழித்தசொல் மானை மருட்டிய
சேல்விழி யீர்!கோகி லங்காளம்;
மீனத் துவசமும் கொண்டனன்; மாரனே
மேதினி வேந்தனும் மெல்லியரே!
சித்தசன் செந்திரு மாமகன் வித்தகன்
செப்பிய வைகளும் தப்பறவே
இத்தனை யுந்தனக் கங்கமாக் கொண்டனன்;
இசைப்ப தென்னினி ஏழையரே!
வாழி திருமகள்! வாழி கலைமகள்!
வாழி மலைமகள்! அன்புறுநம்
தோழியர் நாளும் தழைத்து நலன்கொடு
வாழியர் வாழியர் வாழியரே!

நேரிசை ஆசிரியப்பா

செவிலி: போதுமே கும்மி; பொலந்துடி இடையும்
மாதே! வருந்தும்; மலர்க்கரம் நோகும்;
ஆரம் சிந்திய தாடை நெகிழ்ந்தது;
வேர்வையும் நுதலில் விளங்க லுற்றது;
பாதம் சலித்தது; பருமணிச் சிலம்பின்
ஆதரப் பூட்டும் அற்று விட்டது;
வார்குழல் சரிந்தது; வாட்டம் உற்றனை;
நேரிழை யார்களும் நெடிது சோர்ந்தனர்;
வஞ்சியே! நிறுத்துக!

காஞ்ச: மதிவிலா சினி!உன்
பஞ்சுறும் தளிரடி பாடுற் றதுகாண்!
நன்குன் பாடல்! நன்குன தாடல்!
மென்குயில் மொழிக்குளம் வியந்தனர் பாங்கியர்.

மதிவி: அம்மணி! உன்சார் அமைந்தி ருத்தலே
எம்ம னோருக் கியைந்த பாக்கியம்!
ஆக்கமும் பெறுவேம்; அழகும் பெறுவேம்;
வாக்கும் உறுவேம்; வருங்குறை இல்லேம்!

காஞ்ச: மூர்த்தி!என் செய்தி ?

மூர்த்தி: மூர்த்தியின் செய்தி
நேர்த்தி! நேரம் நினைந்து நின்றனன் !

காஞ்ச: பாங்கியர் அயர்ந்தனர்; பகலவன் கிரணம்
ஓங்க லுற்றதால், ஒண்டொடி யார்களே !
களைப்புத் தீரவிக் கடிபொழி லகத்தும்
உளப்படி சில்பொழு துறைமின்; பின்னர்ப்
பொன்னொளிச் சிவிகையில் போதும்
நன்னகர் மாக்கள் நயந்தெதிர் கொளவே.

ஏழாங்களம்

இடம்:	நகர்ப்புறத்தொரு பூஞ்சோலை
காலம்:	காலை
பாத்திரங்கள்:	மதிவிலாசினி, சின்னம்மன், மூர்த்தி அம்மன், சுந்தரிபம்மன், செவிலி, அச்சுதப்பன், விசுவநாதன், சேவகர்கள்

[மாதர்களும், சேவகர்களும் அல்ல லுற்று நிற்ப]

நேரிசை ஆசிரியப்பா

மதிவி: ஆற்றினில் பார்த்தேம்! அகன்பொழில் பார்த்தேம்!
காற்றென உருவம் கரந்துபோ யினளோ!

சின்ன: 'யாவரும் உளப்படி யாங்கணும் உலாவுக
மேவிய பொழிலிடை மெல்லிய லீர்!'என்
றுரைத்த ஓதிமம் ஒக்கலைப் பிரிந்து
விரைத்தடஞ் சோலையை விட்டே கியதோ!

சேவக: பன்ன சாலையும், பங்கயத் தடமும்,
துன்னு சூழலும் துருவிப் போந்தனன்;
மங்கைகாண் கிலது வாளா வந்தனன்;
எங்குற் றனளென் றேழையேன் அறிகிலன்.

மூர்த்தி: சிற்றிடம் விடாது செவ்விதின் தேடினம்;
'கற்றவர் மதிக்கும் காஞ்சனை காண்கிலன் !

சுந்த : [தனது வளைக்கரம் நெரித்து]
ஏதடி செய்வது! ஏழையேம் இந்த
வாதனைக் கோ இவண் வந்து நின்றனம்!
மன்னவன் கேட்கின் மனம்நிலை கொள்ளுமோ!
அன்னைதான் கேட்கில் ஆற்றுவாள் கொல்லோ!
மாந்தர் மருங்கு மருவி யாழும்
போந்து புகல்வதிப் புன்மை மொழியோ!

செவிலி : மாயமோ! வஞ்சமோ! நேயமா நின்ற
ஆயமும் அவலம் ஆயதே! அந்தோ!
கரைந்து நிற்பதும் காலக் கழிவே!
விரைந்து சென்றிதை வேந்தற் குரைப்பதே
செயலாம். [அச்சுதப்பனும் விசுவநாதனும் அங்கு வர]

அச்சு : என்னே! செவிலி! என்னே!

விசுவ : துயரம் நுமக்குச் சூழ்ந்த தென்னையோ!

செவிலி : ஐயன்மீர்! வருக! ஐயன்மீர்! வருக!
வையகம் புரக்கும் மன்னவன் பின்னவ!
நங்கையர் யாரும் நாடினர் வந்திப்
பொங்கர் புகுந்து, பூக்களைக் கொய்து,
புனல்விளை யாடிப் பொருந்திய காலையில்,
இனத்துடன் ஆடிய இளைப்புத் தீர
மேயினர் மாதர் வேறுவே றாக;
போயினள் காஞ்சனை; புக்கிடம் அறிகிலேம்!
ஓடையும் சோலையும் ஒருங்கு தேடி
வாடினம்; பதைத்து வருந்தினம்; அயர்ந்தேம்;
செய்வ தோர்கிலம்; சேயிழை பிரிவால்
உய்வினை காணு துணர்வு குன்றினம்;
காற்றிற் பட்ட கலமெனச் சுழன்றேம்!
ஏற்றுமின் எங்களை இடர்க்கட லிருந்தே!

அச்சு : எங்கணும் தேடினர், ஏந்திழை காணார்
இங்கிதன் மாயம் ஏதோ அறிகிலம்!

விசுவ : நங்கையை நாடுதும் நண்ப!
துங்கபத் திரையின் சூழல் எங்குமே!

எட்டாங்களம்

இடம்: நகர்ப்புறத்தொரு பூஞ்சோலை

காலம்: காலை

பாத்திரங்கள்: விசுவநாதன், அச்சுதப்பன்

நேரிசை ஆசிரியப்பா

விசுவ : இவ்வடிச் சுவடும் ஏந்திழை அடியே!
நவ்விநேர் விழியாள் நடந்த வழியே!
சிறிய அடியிதோ செல்வது காண்க!
வெறியவிச் சூழலை வேண்டி வந்தனள்!
ஆ! இதோ நண்ப! அடிகளை நோக்குக!
பாவை இங்கே பயந்து நின்றனள்!
இன்னல் ஒன்றவட் கெதிர்ப்படக் கண்டு,
பின்னுறப் பாதம் பெயர்த்து வைத்தனள்!
நாலடி பின்னுற நாடி நோக்கினள்!
காலடி பலவும் காண்பன காணாய்!
வஞ்சமே! காதல! வஞ்சியைச் சிறைசெய
நஞ்சமே அனையவர் நாடினர்! மெய்யே!
அந்தோ! இங்ஙன் அரசே! பாராய்!
பந்தம் செய்தனர் பாவையை என்பது
தோன்றிய இந்தச் சுவடு சொல்லுமே!
ஆன்ற பெட்டியொன் றமைவிடம் இதுவே!
பண்டி உருளை பதிந்த சுவடும்
கண்டனன் காணாய்! கனங்குழை சிறையே
பட்டன ளாகும்! பழிபட நின்றேம்!

அச்சு : மங்கைக் கிந்த மறுவுமெய் தியதோ!

[விசுவநாதன் ஒரு மோதிரத்தைக் கண்டெடுத்து]

விசுவ : நங்கையின் ஆழி! நகுமணி ஆழிகாண்!
காஞ்சனை என்றபேர் காண்க! காதல!

வாஞ்சை கொண்டுநம் வரவை உன்னியே
வாங்கி இட்டனள்!—வளரும் முட்செடி
தாங்கு கின்றதென் ?

[காரைச்செடியின்மீது கிடந்த ஒரு
பந்தையெடுத்து]

தாமரைப் பூவிது !
நாரினல் கட்டி நடுவில் துணியும்
சேரக் கிடத்திய செயலின் நோக்காய் !

அச்சு : இதனல் குறித்த இங்கிதம் என்னையோ ?
புதனைப் போந்த புண்ணியக் குரிசிலே !

விசுவ : வேரியங் கமலமே மெல்லிய லாக,
நாரே நண்ப! நங்கையைப் பிணித்த
பாச மாகப் படிந்த தூசும்
கூச விடாதுவாய் கொடுத்த பந்தா,
காரைச் செடியே கண்டகர் குழுவாத்
தாரைச் சுவடே சகட நெறியாக்
கருதினன் தோழ! கனங்குழை இங்கிதம்
அரிதரிது! ஆயிழை அறிவும் அரிதரோ !

[நாரை விலக்கிப் பூவை நோக்கி]

பூவே! உன்னைப் புரப்பவர் இலையோ ?—
சாவா திருந்தேம் தளைபடக் கண்டும்!
அரசன் புதல்வியே! அருங்குல விளக்கே !
விரசுவார் போற்றும் வில்லுமிழ் மணியே !
தானையும் அரணும் தாவறப் படைத்தும்
தேனே ! விதியின் செயலும் இதுவோ ?
பாவியேம் யாங்கள் படைத்த வலியும்
ஓவியம் போல உயிர்ப்பில தாயதே !
வாடினை நீயும் ! வருத்தம் துய்த்தனை !
தேடி யானுனைச் சிறைமீட் கிலனேல்
வாழும் நாளும் வறிதாய் விடுமே !
தாழுமே வீரம் ! தனிச்சிலை குன்றுமே !—

அச்சுத ! என்றியான் அரிவையைக் கொணர்வனே,
நிச்சயம் அன்றுதான் நித்திரை கொள்வேன் !

அச்சு : [பெருமூச்செறிந்து]

பேதையாள் பெய்யும் பெருங்கண் ணீரே
வாதை யாயவன் வாழ்நகர் சுடுமே !
நாத ! நீயே நாரினை விலக்கிப்
போதைக் கொண்டனை ! புகன்ற சபதமும்
உரைத்து நின்றனை ! உறுவது கூறில்,
விரைக்கருங் குழலை மீட்பவன் நீயே !

விசுவ : வார்த்தை யாடி வாளா நிற்பதோ !
பேர்த்தும் மாதரைப் பேதுறல் ஒழித்து,
நன்னகர்க் கேகி நாமும்
மன்னவற் குரைத்தவன் வார்த்தைகொள் வோமே !

மூன்றும் அங்கம்

முதற்களம்

இடம்:	விஜயபுரிக் கோட்டையில் ஓர் உன்னத மாளிகை
காலம்:	மாலை
பாத்திரங்கள்:	காஞ்சனையம்மன், மம்தாஸ், சுல்தான் மானு

[மாளிகை நிலாமுற்றத்துச் சோர்ந்து
கிடந்த காஞ்சனை புலம்பல்]

நேரிசை ஆசிரியப்பா

காஞ்ச : பேதையர் குழுவைப் பிரிந்ததால் வந்த
வாதனை யோ!விதி வயந்தான் இதுவோ!
செந்திரு மகளின் திருவடித் துணைகளை
முந்து பூசனை முன்னிநின் றேன்;அவள்
அருளும் இதுவாய் அமைந்தது கொல்லோ!
மருளும் என்னை மனச்சிறை கொண்டவன்
இச்சிறை மீட்டெனை ஏற்றிடு வான்கொலோ!
நச்சி நாதனும் நயந்திடான் என்னில்,
என்சிறை நீக்குவார் எவரே! இலங்கையில்
பொன்சிறைப் பட்டனள் போலும் ஆயினேன்!
சின்னாள் வருந்தியச் சீதை அம்மனும்
தன்னு யகனைச் சார்ந்த வாறுபோல்
நலங்கொள் வேனோ! நலியும் இந்த
விலங்கில் பட்டுளம் வெதும்பி நிற்பனோ!
பஞ்சரந் தன்னில் பட்டு வருந்தும்
அஞ்சிறைப் பறவையும், அலைபுனல் பிரிந்து
வாடிக் கிடக்கும் மச்சமும், தன்னினம்
கூடிக் கலந்து குலவா மஞ்ஞையும்,
காட்டின் உலவிக் களிப்பதை விட்டு

வேட்டுவர் வலையில் விழுந்த மானும்,
குரங்கின் கைப்படு கோதையும், காற்சுழல்
கறங்கும் போலக் கலங்கி நின்றனன்!
நானம் ஒழிந்து நல்லுண விழந்து
மேனி மாசுற மெலிந்து விட்டது!
ஆயமும் விட்டிவ் வறிவிலா மிலேச்சர்
ஈயும் உணவை ஏற்றும் இருந்தனன் !
எற்குயிர் இழத்தல் எஞ்ஞ மாயினும்
தற்கொலை புரிதல் தகுதி அன்றெனும்
ஆன்றோர் கூற்றுக் கமைந்து நின்றனன்!
ஏன்றெனைக் கொள்ளா திருப்பனேல் ஆவி
பேணேன்! இந்தப் பிறவியும் பழுதுறும்!

[காவற்பெண் உள்ளே பிரவேசித்து]

மம்தா: காணும் ஆசையால் காவலன் மகளும்
சுல்தான் மாலுவுன் சூழல் புக்கனன்.

காஞ்ச: தொல்லை விதியின் சூழ்ச்சியே கொடிதாட
அதனினும் கொடிதிவ் வறிவிலான் செய்கை!
முதனாள் அறிவிலி மொழிந்தனன் காதல்:
'மன்மதன் கணையால் வருந்தினன்! பைந்தொடி!'
என்றுதான் இரந்தனன்; இரந்தவற் கெதிர்மொழி
ஒன்றல நீதிகள் ஓதினன்! பண்டு
மன்றலங் குழலாள் வைதேகிக்கிடர்
இழைத்த இலங்கை இராவணன் பாடும்,
மழைத்தடங் கண்ணியை மன்னர் அவையினில்
மானம் அழித்த மாசுணக் கொடியோன்
போன கதியும், பொங்கரா நுங்கும்
அமயத் தடவியில் அரவைக் கொன்று,
'தமயந்தி என்றன் தாபம் தீர்,'என
வேண்டிய வேடன் விளிந்த விதியும்,
அகலிகை இடத்தில் ஆசை மிக்குறப்
புகுந்தவண் பட்ட புரந்தரன் பாடும்,

சொல்லினன்! கேட்டிலன்! 'சூழ்ச்சியால் இவனை
வெல்லுதும்,' எனவே வேண்டினன் திங்கள்
ஒன்று தவணையா; ஒருப்பட் டனனவன்!
இன்று வந்ததற் கென்னி மித்தமோ!

[சுல்தான் மாலு உள்ளே பிரவேசிக்க, காவற்பெண் வெளியே செல்ல]

மாலு: ததைமலர் வாளி தனுவினில் தொடுக்கும்
மதனனும் சலாமிடு மாதர் திலகமே!
என்னுடை இதயத் திருக்கும் கண்ணே!
தென்னுண் தேனில் திதிக்கும் கரும்பே!
மாந்தளிர் ஒத்துரு வயங்கும் மின்னே!
காந்தளிற் செவந்து காட்டும் கரத்தாய்!
மழைநிகர் வடித்த மணமுறும் குழலாய்!
உழையின் கண்கள் உனதிரு கண்கள்!
முருக்கிதழ்! பூத்த மூரல் முறுவல்!—
உருக்கொளித் தொதுங்கும் ஒண்சிறைத் தோகை!
கண்களுன் உருவே கருதி நின்றன!
எண்ணமும் அவ்வா றிருந்த தின்சொலாய்!
தவணை கூறித் தமியனை வருத்தினை!
இவணெனை ஏற்றே ஏதம் தீர்ப்பையேல்
உய்வன்; அன்றெனில் உயங்குவன் கோதையே!

காஞ்ச: நைதரத் தவணை நச்சி நின்றனன்;
மன்னவ! என்றன் வாய்மையைக் காத்தி!
பின்னர் உன்றன் பேதுறல் ஒழிப்பேன்.

மாலு: கண்மணி! உனது கருத்துப் படியே
எண்ணருங் காலம் ஆயினும் இருப்பன்!
காதலி யாகக் களித்தெனை அடையின்,என்
மாதவப் பயனு மதிப்பன்!—

காஞ்ச: மன்னவ!
உன்னுளம் அறிந்தேன். ஒருமதி தாழ்த்துப்
பின்னது முடித்தும். பேதையேன் விரதம்

முடியுங் காறும் முன்வரா திருக்க
அடியாள் வேண்டினன்!—

மாலு: அணங்குன துள்ளப்
படியே ஆற்றுக படைத்த நோன்பையும்!
துடியிடை! அந்நாள் தோன்றுவன், செல்வேன்!

[மாலு வெளியே செல்லக் காஞ்சனை பெருமூச்செறிந்து]

காஞ்ச: சிறையிடைப் பட்டுச் சென்றன நாட்கள்!
உறைவிடம் எவரும் உணர்கிலர் போலும்!
நாதனும் வருகிலன்! நாடுவர் கொல்லோ!
பாதகன் நாளும் பார்த்து நின்றனன்;
தெய்வமும் என்வயின் செயிர்த்து நின்றதோ!
உய்வும் எனக்கினி உண்டா குங்கொலோ!
காவல் மாளிகை கடப்பதும் அரிதாம்!
தாவறும் அகழியும் தைவர நின்றது!
உயர்நிலா முற்றத் தொருசார் போந்திச்
செயலார் அகழியில் சிந்துதல் செயலாய்
முடியுமோ அறிகிலன்! முந்துமோ நாதன்
அடியாள் காணவும் ஆகு மேகொலோ!
கண்டகர்க் காகக் கரைத்திடில் உயிரை
விண்டலம் தொடுபுகழ் வீரனை விழைதல்
கூடுமோ! பிறவிதான் கொள்ளுமோ பயனும்!
நாடுவ ராயினும், நானுறும் இடந்தான்
அறிவரோ! சிறந்த அறிவுறு நாதனும்
குறிப்பனே பொழிலிடைக் குறித்த இங்கிதம்!
தெரிந்தெனை மீட்கும் செயலை நாடியே
இருந்தனன் கொல்லோ! எழுந்தனன் கொல்லோ!
என்ன தந்திரம் இயற்றி என்னை
மன்னவன் கொள்வனே! வருந்தி வாணாள்
வாளா வளர எத்தனை
நாளோ துயரம் நலிய இருப்பதே!

இரண்டாங்களம்

இடம்: விஜயபுரியில் சுல்தான் கொலு மண்டபம்
காலம்: எற்பாடு
பாத்திரங்கள்: சுல்தான் இஸ்மேல் அடில்ஷா, கும்மல்கான், அஷாடர்கான், சலாபத்கான், உம்மதுஷா, அமீர்பீரிது முதலானவர்கள்

[அனைவரும் தத்தம் ஆசனத்து முறையே வீற்றிருப்ப]

நேரிசை ஆசிரியப்பா

சுல்தா: தூதுவர்த் தருக! [அமீர்பீரிது வெளியே செல்ல]
துணைவ! மதித்துநீ
ஓதுக, தூதுவர் போதுறு செயலை!

கும்ம: மன்னவர் மன்னவ! மாற்றலர் தென்பால்
துன்னிய நாட்டில் துங்கபத் திரையின்
பாங்கர் முதலாப் படிந்த காவதம்
தாங்கள் கொண்டதாத் தம்மனத் தெண்ணி
அந்நில முழுதவர் ஆணைக் குரித்தென
இந்நிலை உணர்த்தவே எதிர்ந்த தாகுமோ?
முனைந்தவர் நம்மை முதுக்கலில் முறித்துப்
புனைந்தனர் தாரும்; போரில் பங்கலைக்
கொண்டனர் கூலி குட்புஷா வணங்க;
விண்டலம் அளாவும் வியன்மதில் ரேய்ச்சூர்
பன்முறை வளைந்தனர் படைகளால்; யாமும்
வன்முறை குன்றி வணங்கி நின்றனம்;
ஆதலின், முதுக்கலை அடிப்படு குதையா,
தீதறு பங்கலைச் செங்கைக் குதையா,
மத்திய நாட்டினை வார்சிலை யாக,
உத்தியின் அமைத்துவிண் உயர்மதில் ரேய்ச்சூர்
அம்பா, நமையிலக் காகவுங் கொண்டனர்;

நம்பால் வந்ததும் நாட்டின் உரிமையைக்
காட்டுதற் காகும் காவலர் ஏறே!

[அமீர்பீரிது, விசுவநாதன் ஜீவராய் இருவரோடும் வர]

[விசுவநாதன் சுல்தானை வணங்கி]

விசுவ:
தோட்டுணை விசயை சூடிக்கும் விசய!
விசய நகராள் விசய தேவன்
விசய புரிக்கெனை விடுத்தனன் வந்தேன்!
விருப்புடன் கொள்க விளம்பும் மொழியை:
கருக்கொள மேகம் கனைத்துநீர் உண்ணும்
ஆர்கலித் துறையில் அடாதன செய்தனன்,
தார்கலிப் புரவியன், தானை பதியா
வைத்த ரசல்கான்! வடுகல் துறையில்
மொய்த்தநா வாய்களை முருங்கெரி கொளுத்திக்
கடலிடைப் புதைத்துக் கருதிய வர்த்தகம்
இடருறச் செய்தனன். இனைய செய்கையும்,
போர்த்து கீயர்தம் புணப்பினால் அன்று!
பார்த்திவன் இவையெலாம் பார்த்தெனைத் 'தூதாப்
போந்துரைத் துள்ளம் புகல்,'என விட்டனன்!
வேந்துன தாணையை மேற்கொண் டனனோ?
அல்ல தவன்செயல் அமைந்த வாறோ?
சொல்லுக! அவன்செய் தொழிலே என்னில்
தக்கதோர் தண்டனை தருதியோ? அலது
பக்கலுற் றவற்குப் பரிந்துபே சுதியோ?
உரைத்ததை உரைப்பன் ஒற்றனு தலினால்;
வரைத்தடந் தோளினாய்! மனக்கருத் தென்னே?

சுல்தா: நாத!நின் உரைகள் நயந்து கேட்டனன்;
'போதுக!' என்றுரை புகலும் முன்னரே
பேசினை யாதலின், பேச்சில் இருந்தனன்;—
ஆசனத் தமர்க! அடையல ராயினும்,
வீரமிக் குடையரை விழைந்து கொண்டிடும்
வாரமே செய்கையா மதித்து நின்றனன்!

நாதனும் அரிய நாதனும் போரில்
போதகம்! அம்பைப் பொழிசிலை தரித்த
பயோதரம் எனச்சலா பத்கான் பகர்தரக்
கியாதியைக் கேட்டனன் ; கிடைத்த துன் வரவும்;
அமர்க ! நின்வர வறிந்தனன்.—அமைச்ச !
தமர வேலைத் தானு பதியின்
செயலை நோக்குதி ! செவ்விது ! நாவாய்
துயல்வரு துறையில் தொழிற்கிடை யூறு
ஆற்று கின்றதும் அழகிதே ! அம்ம !
சாற்றுவ தினியென் ? தவறிழைத் தவனை
வர்த்தகத் தலைவனு மதித்தல் செய்யேம் !
'கர்த்தனுக் கிணங்காக் காரியம் செய்தனை ;
உன்தொழில் இழந்தினி உறுதுயர் கொள்க,'என்
றின்றே நிருபம் எழுதுக அவற்கு ;—
நாகமன் குமர!நீ நாடி வந்தது
வேகமார் நதியின் விழைவுறும் வடபால்
முன்னர்ப் படுத்திய முதுக்கலைப் பங்கலை
அங்கிலே ரேய்ச்சூர் அரணையும் ஆட்சி
கொண்டிட நீவிர் குறித்த உரிமையை
விண்டிட வாமென விளம்பி யிருந்தேம் !
அன்னது குறிப்பெனில் அகங்களி கொள்ளுமா
றென்ன உரைப்பதென் றிருப்பவே றியம்பினை !

விசுவ: அன்ன தரச ! அமைந்து கிடந்தது,
பின்னது முடிவு பெறும்படி யாக !
உன்னிலை அறிந்தனன் உரைத்ததை உரைப்பேன் !
இன்றிருந் திரவி எழுந்திட எழுவேம் ;
விடையும் தருதி !

சுல்தா: வீரனே ! செல்க !—
படைத்தலைக் கிழவ ! பரிந்துடன் கொண்டுன
தில்லில் இருத்தி இவரை
வல்லை விடுதி வைகறைப் பொழுதே !

மூன்றாங்களம்

இடம்: காஞ்சனை இருந்த உன்னத மாளிகையும் அகம்ப்புறத்து இராஜ வீதியும்

காலம்: யாமம்

பாத்திரங்கள்: காஞ்சனையம்மன், விசுவநாதன், ஜீவராய்

[சந்திரன் பிரகாசிக்க, காஞ்சனை நிலா முற்றத்து நின்று வருந்த]

நேரிசை ஆசிரியப்பா

காஞ்ச: இருபதோ டைந்துநாள் இறந்தன. இறைவன்
வருவதோ காண்கிலன். வாளுள் துறப்பதே
சரதம்! தவிர்க்கும் தனையென
விரதம் இருந்ததும் வீணாய் விட்டதே!

அறுசீர் விருத்தம்

வண்டிருக்கும் மலர்த்தாரான் வனசமலர்
எடுத்தடியேன் வருத்த செய்கை
கண்டிருக்கும் எனிலிறையும் தாழாது
சூழுமெனக் கருதி ஆவி
கொண்டிருந்தேன் இத்துணையும்; கோதில்பெரு
விரதமொன்று குறித்து நின்றேன்;
பண்டிருந்த விதிப்பயனைப் பாயநிலத்
துள்ளவர்யார் பறிக்க வல்லார்!
தருமநெறி யுடையபெருந் தகையருளால்
தமியேன்றன் தளையை நீக்க
வரும்வருமென் றெண்ணிவழி பார்த்திருந்தேன்;
வற்றாத வசைக்குள் ளானேன்;
இருநிலத்தில் என்போல்வார் இனிப்பிறவார்;
பிறந்தாலும் இடரு றார்கள்;
பெருமைதிகழ் விசயநகர் இறைமகளாய்ப்
பிறந்துபெற்ற பேறு நன்றே!

கலி விருத்தம்

பாதகன் தவணைநாள் பார்த்து நின்றனன்;
ஏதினி எண்ணுவ துளதிம் மாளிகை
மீதிவர்ந் தகழியில் விரைந்து வீழ்ந்திவண்
சாதலல் லாதினித் தாழ்க்கற் பாலதோ!

[விசுவநாதன் வீதியில் வர, காஞ்சனை மேலும் வருந்த]

கண்டதும் உண்டுகொல் கணித்த செய்கையும்!
கண்டகர் நாடிதைக் கண்டறி வார்கொலோ!
பெண்டனி மைக்குளம் பேதுறு மோ!எனைக்
கொண்டிட நாதனும் குறித்துற் றான்கொலோ!

விசுவ: நேரிசை ஆசிரியப்பா

கொண்டிட நாதனுங் கூடினன் என்றாள்!—
ஒண்டொடி யாரோ! ஓதிமம் போல
உலாவுதல் ஒழிந்தயல் ஒதுங்கி வருந்தி
நிலாமுற் றத்து நின்றனள் தனியே.

[காஞ்சனையை நோக்கி]

காஞ்சனை!—

காஞ்ச: [கீழ்நோக்கி] யாரது?—காதல!—நாத!—

விசுவ: ஆம்!சிறை மீட்ப அறிந்து வந்தனன்.
வருந்தேல்! கொள்க மனத்திடம்! மாளிகை
இருந்தே உன்னை எளிதிற் கொள்வன்!

காஞ்ச: மாளிகை இருந்தேன்; வளைந்த தகழியும்;
மீளுவ தெப்படி?—

விசுவ: வீசுவன் உன்பால்
கயிற்றே ணியை;நீ கையில் பிடித்துச்
செய்ய துவசம் சேர்த்திய தூணில்
செவ்விதிற் கட்டுக; சேரமற் றோர்முனை
இவ்விருக் கத்தில் இறுகப் பிணிப்பன்.

அன்னது சுவரில் அமைத்த ஏணிபோல்
துன்னும்; 'இஃது துப்புடைத் தாகுமோ !'
என்று காணுமா றேறுவன் இறங்குவன் !
பின்றை அவ்வழி பிடித்துநீ வருக.
சீவராய்!— [ஜீவராய் கயிற்றேணியுடன் பிரவேசிக்க]
வருக! சீக்கிரம் தருக!
[கயிற்றேணியை வாங்கி]
பாவையே! ஏறிவன்; பற்றிக் கொள்கநீ !
[கயிற்றேணியின் மற்றொரு முனையை விட்டெறியக் காஞ்சனை பிடித்துக்கொள்ள]
நன்கு ! நன்கா நாட்டிய தூணில்
வன்புடன் கட்டுக.
[காஞ்சனை தூணிற்கட்ட, விசுவநாதன் மற்றொருமுனையை மரத்திற்கட்ட]
வார்கயிற் றேணி
அமைந்த தழகே ! அரிவை! காண்டி.—
[விசுவநாதன் ஏணி ஏறிச்செல்ல]

காஞ்ச: கமையொடு விரதம்நான் கைக்கொண் டதுநின்
வரவைத் தந்தது. வருக மெல்லவே !
[விசுவநாதன் நிலா முற்றத்துக் குதிக்க]

விசுவ : அரிவை ! கயிற்றில் அமர்ந்து செல்க—
நாட்டம் சிதறேல், நண்ப!—காஞ்சனை !
தாட்டுணை தவறேல்; தளிர்க்கைப் பிடியும்
தளரேல், இறங்குக.—
[காஞ்சனை ஏணி வழியே இறங்கி வீதியில் வந்து]

காஞ்ச: [ஜீவராயனை நோக்கி]
தயையுடைக் குரிசில் !

உளப்பிணி ஒழித்தெனக் குதவி செய்தனை!
மறப்பெனோ நன்றி! [விசுவநாதன் இறங்க]

மன்னவ! வருக!

[விசுவநாதன் வாளையுருவி ஏணியை வெட்ட]

பிறப்பின் பயனைப் பெற்றனன் அடியேன்!

விசுவ : அரிவை! இவணுறல் அழகுடைத் தன்று.
விரைவினிற் செல்லுதும்; விளம்புவன் கேளாய்!—
உன்னையான் மீட்க உதவி புரிந்தவன்
இந்நகர்த் தானைக் கிறைவன்; என் தோழன்
சலாபத் கான்மனை சாருதும். அவனை
அலால்மற் றொருவர் அறிந்திடார் இதனை!
ஆதலின், உருவம் கரந்தவண் விரைந்து
போதலே நெறியாம்! பூணுக என்னுடை,
பெண்ணெனும் உருவம் பிறரறி யாமல்.

[விசுவநாதன் தன் உடைகளைக் களைந்து கொடுக்க]

நண்ணுவன் யானும் நண்பன் சேவராய்
ஆடையைத் தரித்தே!

[காஞ்சனை விசுவநாதனைப்போல் வேடமாற, விசுவநாதன் ஜீவராபைப்போல் வேடம் பூண]

ஜீவரா : அருமைத் தோழ!
வேடம் பூண்டீர்! விளங்கிழை தனக்கும்
உன்போல் வேடம் ஒப்ப நின்றதே!

காஞ்ச : நின்போல் உருவம் நேர்ந்தனன் நாதன்!—

விசுவ : காதல! இங்குக் கடிகை நில்லாய்!
போதுவம் நாங்கள்; புகுந்த பின்னர்
இழைக்குஞ் சூழ்ச்சியால் எழுந்துனை
அழைப்பவன் சேவக னகநீ வருகவே!

[ஜீவராயைத் தனியே விட்டு இருவருஞ் செல்ல]

நான்காங்களம்

இடம்: சலாபத்கான் வீடு

காலம்: வைகறை

பாத்திரங்கள்: நூர்ஜஹான், காஞ்சனையம்மன், விசுவநாதன், சலாபத்கான்

[நூர்ஜஹானும் காஞ்சனையம்மனும் உரையாட]

இணைக்குறள் ஆசிரியப்பா

நூர்ஜ: வார்புனல் கிருட்டினை மருங்கு திகழும்
சோரபூர் தன்னில் தோன்றி வளர்ந்தேன்.
தாதை என்னைச் சலாபத் கானுக்
கீதல் எண்ணி இருந்தனன். சுல்தான்
குட்புஷா தம்பி கூலியி மாதுஷா
உட்படுங் காதல் உடையனாய் உற்றே
கவர்ந்தெனைக் கொண்டு கடுகினன் கிருட்டினை.
தவத்தின் பான்மையால் தையலே! உன்றன்
நாதன் ஆங்கு நண்ணினன், அறிந்து!
வேதனை ஒழித்து விடுத்தனன் பதிக்கே!—
அன்னவன் செய்த அரிய நன்றியை
என்னருங் கணவனும் யானும் மறவேம்!—
உன்குறை தீர்த்தே ஒழித்தனன் சிறையும்
என்ப தவற்கோர் எளிய செயலே!
நாதனும் சிறந்த நாயகன். அவனது
காதலுக் கேற்ற காரிகை நீயே!—
கேளடி காஞ்சனை! கேளிர் எனக்குமுன்
நாளிலென் படிவ நலத்தைக் கண்டு
நுவலரு நாமம் நூர்சகான் என்றே
நவின்றனர். நங்கை!உன் நலத்தையிப் பொழுது

நோக்கில் உனக்கு நூர்சகான் சேகசீன்
ஆக்கிய நாமம் அளித்திடத் தருமால் !—

[விசுவநாதனும், சலாபத்கானும், சேவகனைப்போல வேடந்தரித்த ஜீவராயும் உள்ளே வர]

சலா : எடுத்த வேடம் இராய! நீ, களைக!—
கொடுத்த ஆணைபோல் கொணர்ந்தனன் தோழனை
நாதனே! வைகுறை நண்ணிய தாதலின்
போதலே துணிக!—

விசுவ : போதலெவ் வகையே ?

நூர்ஜ : ஐயரே! நீவிர் அகல்வதே குறித்தீர்!
மெய்யன் புடையார் விலகல் கொடிது!

விசுவ : அம்ம! நீ உரைத்ததும் அன்பின் மிகுதியாம்
எம்மனோர் நிலைமை இருந்த தறியாய்!

சலா : நூர்சே! அன்பு நுவலக் காலமோ!
பார்ப்பவர் அறியாப் பான்மையில் இவர்கள்
இன்னே எழுந்தனர் ஏகுதல் இனிதே!

நூர்ஜ : கன்னல் இன்மொழிக் கபிரவ வாயாய்!
என்னை மறப்பையோ ? ஏகினை யாயினும்
உன்னை மறவேன்! உனக்கியான் கடிதம்
எழுதுவன் நூர்சகான் சேகசீன் என்று!
பழுதிலா நண்பு பாலித் திடுவாய்!

காஞ்ச : எம்மணி நகர்க்கியாம் ஏகுவம் ஆயினும்
அம்மணி! உன்னையும் மறப்ப தாகுமோ ?

விசுவ : நண்ப! இருவரே நாடி வந்தனம்!
பண்படு சொல்லியிப் பாவை தன்னொடும்
மூவ ராகினேம்! மூதூர் கடக்கல்
ஆவதோர் கருமம் அகத்தில் உன்னினன்:
என்னுடை காஞ்சனை ஏற்றுப் போதத்
தன்னுடை தன்னையே தரித்த நண்பனோ
டுனதெழில் ஆடையே உடுத்துக் காலென

மனமெனக் கடக்குமுன் வயப்பரி ஏறி,
நீயுடன் போந்து நெறிக்கொள விட்ட
தேயு மாறே எழுவ தெண்ணினன் !
உபாயம் இதுதான் உன்மனம் ஏற்குமோ ?

சலா : [சிரித்து]

சபாசு ! நாதனே ! தந்தனன் உடையும் ;
தரித்துக் கொள்கநீ சலாபத் கானென ;—

[நூர்ஜஹான் சலாபத்கான் உடைகளைக் கொண்டு வந்து தர]

விசுவ : சிரித்து நூர்சகான் சீருடை தந்தனள் !
வாங்கினன் ; உடுத்துரு மாறுவன் ;—நூர்சகான் !
பாங்கிக் கென்னுடை பண்ணுக !

[நூர்ஜஹான் காஞ்சனைக்கு விசுவநாதன் வேடம் புனைய, விசுவநாதன் சலாபத்கானுடைகளைப் பூண]

தோழனே !
கூத்தெலாங் கண்டு கொண்டனை புன்னகை !
காத்திருப் பவர்கள் காவலைக் கடந்து
போவதற் கான புகலுரை உளதேல்,
ஈவதுன் கடனும் ; எனக்கது பயிற்றுவாய்.

[காஞ்சனையும் விசுவநாதனும் முறையே விசுவநாதன் சலாபத்கான்போல் வேடம் பூண்டு ஜீவராயுடன் நிற்ப]

சலா : என்னைப் போலுரு எடுத்த தன்மையால்,
அன்னதற் கிங்கிதம் அறிதல் வேண்டும்.
உருவினும் ஒத்தாய் ; புரவியும் பெற்றாய் ;
இருளினும் அறியார் என்னினும், வாயில்
காப்பவர் இங்கிதம் கழறுவர் ஆதலின்
ஏய்ப்ப தியலா தெதிர்மொழி கூறிச்

செல்லுதல் சீராம். செப்புவன் கோடி!—
சொல்லுவர் வீரர்கள் தொழுதுனை நின்று,
"குதாபஜாஸ் குதாநஹி;
முகம்மதுபஜாஸ் பீர்நஹி,"
என்றே, அறிவுடை ஏந்தலே! அதற்கு
"மக்காபஜாஸ் மாவாநஹி;
பாஹோர் ஜாநே ராஹா சோடியே,"
என்றுரை தருக!—எயிற்புற வாயில்
நின்றவன் யானென நினைந்தென் மொழிக்கு
நேருரை வழங்குக, நிறுத்த முறையே;—
"குதாபஜாஸ் குதாநஹி;
முகம்மதுபஜாஸ் பீர்நஹி."

விசுவ: கேசவன் பஜாஸ் ஈசன் நஹி;
தேசிகன் பஜாஸ் தேசிகன் நஹி;—

சலா: [புன்னகை செய்து]

இடக்கிது விடுதி; இஞ்சியின் காவலைக்
கடக்க லாவதோர் கட்டுரை கழறுதி!

விசுவ: **மக்காபஜாஸ் மாவாநஹி;**
பாஹோர் ஜாநே ராஹா சோடியே.

சலா: அச்சா!

விசுவ: தோழ! அடுத்தது வைகறை;
இச்சார் எழுந்தியாம் ஏகச் செய்க!

[சலாபத்கான் வெளியே செல்ல]

அரசன் புதல்வி ஆதலின் கொய்யுளைக்
குரகதம் ஊருதல் கூடு மாயினும்,
ஆணுரு அமைந்தனை! அன்னதற் கேற்பக்
காணுமா றெவருங் காப்பதுன் கடனே!

[சலாபத்கான் உள்ளே வந்து]

சலா: நாதனே! குதிரைகள் நயந்து நின்றன!
போதுக நண்பொடும் பொலந்தொடி யோடும்!

காஞ்ச: செம்மலும் நீயும் செய்தன மறவேம் !
அம்ம ! எங்கள் அணிநகர்க் கேகுதும் !
விடையும் தருதி !

நூர்ஜ: விளங்கிழை! செல்லுக!
குடைகெழு வேந்தன் கொடிமதில் கடந்தே!

[சலாபத்கான் நூர்ஜஹானோடு செல்ல]

விசுவ: நுன்னுவம் வருக! தோகையே!
செந்நெலும் கன்னலும் செழித்துள நாடே !

நான்காம் அங்கம்

முதற்களம்

இடம்: விஜயநகரம், அரசன் கொலு மண்டபம்
காலம்: நண்பகல்
பாத்திரங்கள்: கிருஷ்ண தேவ ராயர், குரு பக்க, சாளுவ திம்மன், இராம ராஜன், விசுவ நாதன், பாண்டிவாசி முதலியவர்

[அனைவரும் வீற்றிருப்ப, பாண்டி வாசி சபையை வணங்கி]

நேரிசை ஆசிரியப்பா

பாண்டி: நானிலம் புரக்கும் நாயக! நாகமன்
சேனையோ டெழுந்து சேகரச் சோழனை
மாளிகை தன்னிலே மாய்வுறச் செகுத்து
மீளிபோல் மதுரை மேவிச் சந்திர
சேகரன் றனக்குச் சீர்முடி புனைந்தனன்.
சாகரம் சூழ்ந்த தராதலம் எல்லாம்
இன்பக் கடலில் ஏமாந் திருந்தது.
மன்பதை ஓங்கி மகிழும் நாளில்,
வள்ளுவன் ஒருநாள் மாநகர் வீதியில்
உள்ளம் கலங்க ஒருபறை சாற்றினன்;
யாதெனக் கேட்டேம்: "'இறைபீத் தேறினன்;
ஆதலின் சிறையிட் டாதனம் ஏறினும்;
என்று முரசம் எற்றுக யாவரும்
இன்றே உணர,' என்றார் கட்டளைப்
படிடம் டாம்டாம் படம்டம் டாம்டாம்
அடிப்பன்," என்றனன், அரசர் ஏறே!
இடியே றுண்ட நாகம் ஏய்ப்பக்
கொடியோன் சாற்றும் கூற்றுக் கஞ்சினேம்!

பாண்டியன் செய்த பாவம தாகுக:
ஈண்டிவ னேனும் இன்னரு ளுடனே
அரசு புரிவனே அறிகுவம் என்றே
விரசி ஒழுகினம் ; வீணிவன் நீதி !

கிருஷ்: ஆ! ஆ! கொடிதே! அரிய நாதனை
ஒருவாக் கொண்ட இவன்செயல் இதுவோ ?
ஞான சிகாமணி ! நந்தா விளக்கு !
மானமே பூண மதித்து நடக்கும்
சீரியன் ! செய்கையும் சிந்தையும் நல்லான் !
ஆரியன் ! நாதனை அருங்குல மகனைப்
பெற்ற தந்தையும் பேதுறல் ஆகுமோ !
கொற்றமோ ! நீதியோ ! கோன்மொழி நிற்றலோ !
கூறுக திம்ம!ஓ! கொடிது ! கொடிது !

தமம: ஊறிய புகழினய் ! ஒன்னலர்ச் செருக்து,
வீரமும் வாகையும் வேய்ந்து, வளர்ந்த
பேரணிப் படையின் பெருமிதம் கொண்டு,
ஊரரா முடிபுனை ஒருவன் ஆண்ட
காரறுப் பொழிலும் நீரறுத் தடமும்
பூசுரர் ஆகுதி பொழிதரு சாலையும்
வாசநா ளேதியர் வதியுமா லயமும்
அழகுறப் பொருந்தும் வழுதிநா டதனைத்
தன்னடிப் படுத்திய தன்மையால் துணைவர்
இன்னுரை கொளானய் இதந்தேர் கிலனய்
இருந்தனன்; 'செல்வம் எழுதரு மாயின்,
திருந்திய நீதியும் தெய்வமும் பேணன் ;
சுற்றமும் துணையும் சொல்லும் கொள்ளான் ;
வெற்றியே கருதுவன் ; வெம்பகை எண்ணன்
என்பதிவ் வுலக இயல்பாம் என்பர்!
தன்புகழ் துடைத்துத் தரணிப ! நினக்குப்
பழியும் தந்தனன்.

இராம: செழியன் பித்தே
வழுதிநா டாள வழியைத் தந்தது.

நாகமன் பித்தோ, நமக்கு வெற்றியும்
வாகையும் தந்து வழுதிபித் தொழிக்கும் !

குருபக்க: அப்ப!நின் மொழிமிகு செப்பம் உடைத்தே!

கிருஷ்: செப்பரும் பகைவர் சீற்றமிக் குடைய
துருக்கர் தாமெனத் துணிந்து நின்றேன் !
விருப்புடை யாரும் விரோதிய ராயினர் !
கண்மணி காஞ்சனை கடுஞ்சிறைப் பட்ட
எண்ணருந் துன்பம் இரிந்ததிக் குரிசில்
நாதன் புரிந்த நன்றியால்; நாகமன்
ஏதம் களைந்திவ் விடரினைத் தொலைத்தவன்
தலையைத் துமித்துத் தருபவர் இலரோ?

[சபையோர்கள் மௌனமாய்
இருப்ப]

விசுவ: அலைகடல் உடுத்த அவனியைப் புரக்கும்
இறைவனே! அவையில் இலரோ ஒருவரும்
அறநெறி கடந்த பகைவனை அடக்க ?
பேசா திருப்பது பெருமை உடைத்தோ ?
கூசா தரசன் கொடுத்த ஆணையைக்
கடந்த எந்தையைக் கடிந்து கொணர்வான்
படர்ந்து செல்வன் படையுடன், பார்த்திப !

கிருஷ்: இன்னதே வீரம் ! இன்னதே வார்த்தை !
இன்னதே பெருமை ! இன்னதே புகழும் !
இருந்தார் அவையோர் ! எதிர்மொழி கூறிலர் !
இருந்தார் மார்பன் இவனலா தொருவர்
இப்பெருஞ் செயலை இழைத்தல் ஒண்ணுமோ ?
ஒப்பரும் அமைச்ச !

[திம்மனும் அரசனும்
தனித்து உரையாட]

திம்ம: உயர்மதி உடையான்,
நல்வழி பிறழான், நாதன்; ஆயினும்,
செல்வழி ஒன்னலர் சேர்ந்தவன் மதியைக்
கலைப்பர்; கலைத்தால் கல்லும் கரையும்.

கிருஷ்: துலைமுகம் ஒத்த தூமதி உடையான்,
ஆதலின் நாதன் அயல்மொழி கொள்ளான்,
போதலே நன்கு !

திம்ம: போதகம் அனையான்,
அறந்தலை நிறுத்தி அப்பனைத் திருத்தித்
திறமுற வெற்றித் திருவொடும் திரும்பும் !

கிருஷ்: [சபையோரை நோக்கி
நாதனே செழியன் நகரம் ஏக
மேதகை யோனென விளம்பினன் அமைச்சன்;
எமக்கும் அதுவே எண்ணம்; அவையோர்
தமக்கும் இதுவே தழைத்த கருத்தெனத்
தோற்றும்; ஆதலின், [விசுவநாதனை நோக்கி
தோன்றலே! இன்னே
ஆற்றல் படையுடன் அணிவகுத் தேகுக,
உந்தை மறத்தொழில் ஒழிந்து,
செந்தமிழ் நாடு சிறப்புற் றோங்கவே !

இரண்டாங்களம்

இடம்: சோழவந்தான் புறத்து இறுத்த பாசறை
காலம்: மாலை
பாத்திரங்கள்: விசுவநாதன், மங்கம்மாள், போர் வீரன்

நிலைமண்டில ஆசிரியப்பா

விசுவ: [தனியே நின்று]
உலகெலாம் புகழ உடம்பெடுத் தவர்கள்
அலகிலா விளையாட் டாடுமோர் ஈசன்
அமைத்த அறநெறி ஆற்றிநின் றோரே
சமைத்தமா தவரெனச் சாற்றும் பெரியோர் !
அடியேற் குலக அனுபவம் பலவாம்;
முடிதரித் துலகம் முறையினோ டாளும்

மன்னவர் அவையும் மாந்தர் ஈட்டமும்
துன்னலர் படையும் சூழ்ச்சியும் வஞ்சகர்
கூட்டமும் சீரியர் குழுவும் பற்பல
நாட்டின் இயற்கையும் நன்குணர்ந் துள்ளேன்;
மாக்கள் உழலும் வல்லிருட் கானில்
ஊக்க முடனிருந் துலவுகா மாதி
வருத்தும்; அப் பேய்கள் வசப்பட் டார்பலர்.
கருத்தற நெறியில் கலந்து தூண்ட
நன்மையே இழைத்தவர் நல்லவர் என்பதே
என்மனத் தெழுந்த இசைப்பருங் காட்சி !
ஆதலின், யானும் அன்னவர் காட்டில்
போதரல் அமைந்தும், புன்னெறி புகாமல்
நன்னெறி நாடி நலங்கொளக் கருதினன்:—
என்னவென் றுரைப்பேன்! எழிலார் மாடமும்
தோரண வீதியும் தோகைவாழ் பொழிலும்
ஆரணம் ஓதும் அந்தணர் இருக்கையும்
தமிழினை வளர்க்கும் சாலையும் செறிந்த
அமிழ்தினும் இனிய அகன்புனல் வைகை
வளநா டுற்ற வான்பெருஞ் செல்வம்
உளநா டுற்றதால் உயரறம் துறந்து
மன்னவன் ஆணையும் மறந்து சரண்புகு
தென்னவன் றனையும் சிறையிடை வைத்தான்
தந்தை; அன்னவன் றனைஅடக் கென்று
கந்தடு களிற்றுக் காவலன் என்னை
விடுத்தனன்; வந்தேன். வெம்போர்க் களத்தில்
படுத்துவ தோவெனைப் பயந்த தந்தையை ?
துறப்பதோ ஆணை ? தொன்மை அறத்தை
மறப்பதோ கொடிது ! மன்னவன் பார்த்தன்
தந்தையும் தமயனும் தம்பியர் பலரும்
விந்தைகற் பித்த வில்லா சிரியனும்
ஆர்வம் மிக்க அரசரும் நிறைந்த
போர்முனை நின்று பொருவ தொழிந்து

வருந்த, அன்னவன் மயக்கம் ஒழிந்து
திருந்த மாயவன் செப்பிய மொழியை
யாவரே மறப்பர்? ஆதலின் அவனி
காவலன் இட்ட கட்டளைப் படியே
நிற்றல் அறனென நினைந்து நின்றனன்!—

[ஒரு வீரன் பிரவேசிக்கிறான்]

வீரன்: வெற்றிவேல் இறைவ! விழைந்துனைப் பெற்ற
தாய்மணிச் சிவிகை தனிலமர்ந் திங்கு
வாயிலில் இறங்கி, 'வரவுரை,' என்றனள்.

[மங்கம்மாள் உள்ளே வர, விசுவநாதன் பணிந்து]

விசுவ: அன்னாய்! வருக! அலகிலா நாட்கள்
உன்னைப் பிரிந்தேன்.

மங்க: உனைப்பிரி துயரால்
நானும் வருந்தினன், நாதனே! மதுரை
மாநகர் உறாது வழியிடை நின்றனை;
ஏனிது? தந்தையும் இரங்கி நின்றனன்

சிவ: கோனெழிற் படைதனைக் கொண்ட சீவராய்
தந்தையைப் பொருது தரும நெறியைப்
புந்தியிற் புலப்படப் புகல வந்தனன்;
அவனுடன் போந்தனன் அன்னையே!

மங்க: அப்பனே!
எவனுடன் பொருவது? எவனவன் பொருவது?
ஏனவன் பொருவது?

விசுவ: எந்தை நன்னெறி
தானகன் றானெனத் தராபதி கேட்டுச்
சீவ ராயனைச் சேனையோ டனுப்பினன்.

மங்க: ஆவ தென்னினி?

விசுவ: அரும்போர் விளையும்!

மங்க: நீயும் போரிடை நிற்றல் அமையுமோ?

விசுவ: ஆயே! அறநெறி ஆற்றலே கடனும்.

மங்க: தந்தைக் கறன்வழி தனையன் பகர்வதோ ?
விந்தை ! விந்தையே ! வேண்டா ! கேளாய்:
உலகியல் முற்றும் உன்னிலும் அறிந்தவர்;—
நலனெனக் கொண்டு நயந்து செய்தனர்;
ஆதலின், போர்த்தொழில் அகற்றி உன்றன்
தாதையோ டிணங்கித் தாரணி காக்கும்
செல்வம் பெறுதி.

விசுவ: [செவியைப்பொத்தி]
சிவசிவ ! போதும் !
கல்வியும் மதியும் கைவரப் பெற்றது
அறநெறி விட்டிவண் அவத்த மானதோர்
மறநெறிக் கேதுவாம் வாழ்க்கை பெறவோ ?
தந்தைதாய் மொழியைத் தாங்குதல் எனக்கு
முந்தையோர் மொழிந்த முழுமறை யாயினும்,
அறனலா தியற்றற் கடியேன் பொருந்தேன் !

மங்க: விறற்படை மதலாய் ! வெற்றி மடந்தையும்
அரசச் செல்வமும் ஆக்கமும் பெயரும்
விரசுவார் வணங்கும் வீரமும் கீர்த்தியும்
நின்னுடைச் செல்வமாய் நிலைக்கக் கண்டு,
மன்னவன் தாயென மாநிலங் கூறும்
நல்வினை என்வயின் நாடிய அன்றே,
மல்வலித் திண்தோள் மகனே ! பாக்கியம்
அடைந்தவள் ஆவேன்.

விசுவ: அம்மணி ! அடியேன்
கடைப்புறங் காவல் காவலர் செலுத்தப்
பாவலர் புகழப் பணிக்குடை அதன்கீழ்
ஏவலர் இறைஞ்சும் இறைமக னயின்
பாக்கியம் படைத்துப் பலபல போகமும்
ஆக்கிய இன்பமும் அடைந்து மகிழ்வையோ ?
அன்னையே ! விசய நகர மதனில்
மன்னவர்ப் பயந்த மாதவப் பெண்டிர்
நின்வயின் மிக்க நேயம் உடையர்

இன்பமும் நலமும் எண்ணருஞ் செல்வமும்
ஆடையும் கலனும் அரிவையர் ஆயமும்
மேடையும் மாடமும் மென்மலர்ச் சோலையும்
சில்லெனக் குளிர்ந்த சீதளச் சேக்கையும்
மெல்லென மேனி வீசு தென்றலும்
இன்னிசை இன்பமும் எதிர்ந்தன ஆயினும்,
நன்னிலை தனையுளம் நாடிற் றிலையால்,—
என்றவர் கூறினர் என்றுநீ பகர்ந்தன
அன்றே மறந்தனை அன்னாய்!

மங்க: பாலக!

நின்மொழி அறமே ஆயினும் ஆகுக;
என்னுரை கேட்டியேல், இவணுறு தானையோ
டணிமதிற் கூடல் அடைந்திள வரசாய்
மணிமுடி மன்னவர் வணங்கவீற் றிருப்பாய்;
அரசதந் திரமும் அன்னதே!

விசுவ: அழகிதே

அரச தந்திரம்! ஆருனக் குரைத்தார்?
பேதைமை கொண்டு பிதற்றுகின்றனை?
மோதுறு படையுடன் முனைந்து மன்னவன்
நாளையே போரில் நலிய வந்திடும்
வேளையித் தந்திரம் வெல்லுமோ? பேதாய்!
அன்றியும் மனுமுறை ஆட்சி செய்யும்
மன்றல் மாலை மன்னவர் மதியார்;
துன்பமே சுற்றும் துரோகசிந் தனையால்
மன்பதை விரும்பாது; மாநர கெய்துவம்;
ஆதலின், நின்னுரை அகற்றற் பாலதே!—
போதுக!

மங்க: [மிக்க சினங்கொண்டு]

என்னுரை புல்லிதென் றிகழ்ந்தனை!
நல்லது! போர்த்திறம் நாடினை! நீவிர்
வெல்வதும் தோற்பதும் விளங்கும் நாளையே!

[மங்கம்மாள் வெளியே செல்ல]

மூன்றாங்களம்

இடம்: சோழவந்தான் புறத்து வெற்றிடம், விசுவ நாதன் பாசறை

காலம்: மாலை

பாத்திரங்கள்: போர் வீரர் இருவர், புலவர், விசுவ நாதன், அரியநாதன், சேவகர்

[இரண்டு போர்வீரர் ஒரு புலவரை இழுத்து வந்து]

நேரிசை ஆசிரியப்பா

1-ஆம் வீர: நீவிரோ புலவர்? நீவிரோ புலவர்?
மேவிய கவிகையும் விதானச் சிவிகையும்
விருதுரைப் பாரும் விரல்மோ திரமும்
அரைதனில் பட்டும் அமைந்தமுண் டாசும்
மன்னவர் யாரும் மதித்தன ராகி
அன்னவர் அளித்ததோர் ஆரமும் தூசும்
எவண்கொலோ வைத்தீர்? ஏட்டுச் சுவடியும்
தவறிய தெங்ஙனே? தப்பறை உரைத்தீர்,
நீவிரோ புலவர்? நேரலர் விடுத்த
ஏவலர் நீரே! எம்படை ஆற்றலும்
நேர்மையுங் கண்டு நிருபற் குரைக்க
நேர்ந்திவண் வந்த நீவிரோ புலவர்?
நாகமக் குரிசில் நலமே? சந்திர
சேகரன் றானும் சிறைதனிற் சுகமே?
வஞ்சமும் களவும் வயங்கு சூழ்ச்சி
நெஞ்சுடை ஒற்றரே! நீரோ புலவர்?

புலவ: அன்புமிக் குடையீர்! அடியோ பொறுக்கிலன்,
முன்புவி வேந்தர் மூவரும் வழங்கிய
வரிசையால் உயர்ந்தேன்; வானிதி பெற்றேன்
புரசை யானையும் புரவியும் தேரும்

காணியும் இல்லமும் கைவரக் கண்டேன்;
வாணியும் கமலையும் மருமகள் மாமி
ஆனதோர் வழக்கால் அடியன் பொருளெலாம்
போனவா கண்டேன்; பொல்லா வறுமைநோய்
வந்தெனைப் பற்றி வாதனை கண்டது.
நொந்தனன்; மனைவி நுவல கிற்றிலள்;
குழவியும் தாய்முகம் குழைந்து நோக்க,
பழவினை கொடிது! பரிந்தெனை மனைவி
நோக்க, நும்மிறை நொய்தினென் மிடியைப்
போக்கும் என்றிவண் போந்தனன், பாரீர்!
இந்திரன் இருந்தனன் இடையிற் கலையாய்;
வந்திரு விழிகளில் வருணன் அமர்ந்தனன்;
தேயுவும் வயிற்றினைத் தேடிப் புக்கனன்;
வாயுவே அன்றி மற்றுண வறியேம்;
தீரம் குறைந்து தேய்ந்தவிவ் வுடலைச்
சாரம் அற்றதாச் சமனும் வெறுத்தான்;
நிருதி போலும் நிலவிய கொடையான்
விருதுடை நாதன் விரும்பிக் குபேரன்
ஆக்கும் என்றிவண் அடைந்தனன், கேண்மின்:
தாக்கினீர், தாளேன்! தவறுமோ ஈசன்
விதிவலி? நீவிர் வேருய் எண்ணினிர்!
பதமுறப் பாடும் பாவலன் அறிமின்!

[பாசறையிலிருந்த மற்ெருரு புலவர் வெளி வந்து]

கச்சிப்புல: யாரடா வெளியே? யாதடா அரவம்?
போரது முடிந்ததோ? புகலுமின், இவரார்?
2-ஆம் வீர: புலவராம்! தமிழைப் புந்தியாம் புணையால்
நிலையுறக் கண்டவர்! நெருநல் வந்தவர்
இப்புலம் துன்னி இன்னிசை பாடிச்
செப்பரு மிடிகெடச் செல்வமும் பரிசும்
பெற்றுளம் மகிழப் பெருந்தகை அருளை
முற்றிலும் நாடி முன்னினர்! யாங்கள்

போர்க்களம் முற்றப் பொருந்தார் தூவென
ஈர்த்து வந்தனம், இருங்கவி வாணரே!

கச்சிப்புல: வம்மின் புலவீர்! வறுமைநோய் துய்த்துக்
கம்மிய குரலும் கந்தைச் சிதாரும்
இளைத்த மெய்யும் ஏந்திய கையுமாய்க்
களைத்து வந்தீர்! காவலன் கண்டால்
இரங்கும்; வருந்தும்; ஏழைமை அகற்றும்;
அரங்கம் ஏற்றி அன்புரை கூறும்.

மதுரைப்புல: மன்னவன் புகழை மருங்கிருந் துரைக்கும்
பன்னரும் புகழ்சால் பாவலர் ஏறே!
இன்னுரை கேட்டேன்; இன்னல்
என்னைவிட் டோடும்; இன்பம் நாடுமே!

தானை மாலை

போன்முடி அரசவை பொலிதரும் புலவீர்!
மின்னொளி வடிவேல் வேந்தன் பெருமையைப்
போர்முனை அறிந்தேன், புகலுவன் கேண்மின்:
'கார்முனைந் தெழுந்து காலாந் தரத்தில்
பேரொலி இட்டுப் பிறங்கு மாறுபோல்
பாருளோர் திகைக்கப் பணைக்கை நீட்டிக்
களிற்றினம் ஒருபால் கலந்து பிளிற,
துளித்தெழு நுரையொடு துள்ளும் அலைபோல்
பாய்பரிப் பந்திகள் படர்ந்து கனைக்க,
வேய்வளர் மலைகள் விசையுடன் எழுந்து
தாக்குதல் போலத் தடந்தேர் முட்ட,
ஆக்கையில் தைத்த அம்பினை வாங்கி
நாரியில் பூட்டி நடுங்க எய்து
வாரியைக் கலக்கும் மந்தரம் போல
வீரர்கள் ஒருபால் வீரம் பகர,
கூர்கடந் தப்பால் கற்பகம் அளாவி
விண்ணகம் திரிந்து விரிசிறை உதறி
வண்ணம் பலவாய் வயங்கும் பறவைபோல்

கண்ணகன் களத்தில் காவலர் கொடிகள்
நண்ணியந் தரத்தில் நாடகம் பயில,
ஓங்கலில் தண்மதி உதித்தெழு மாறுபோல்
தூங்கலில் வெண்குடை துலங்கிமீ தோங்க,
வெள்ளநீர்த் தரங்கம் விரிதலின் கவரி
வெள்ளிவெண் கோட்டு வேழமேல் தவழ;
செந்நிறக் குருதி சேண்படிந் தென்னப்
பொன்னிறக் கதிரவன் பொலஞ்சுடர் அளைந்து
களிற்ருெடு புரவியும் காலாட் படைகளும்
நெளித்துறு தன்மையால் நிலத்தெழு பராகம்
திரள்விரிந் தாடிச் சிவந்து காட்ட,
பரவையின் பரப்பில் படியும் தாரகை
இனத்திளங் கதிரின் எதிரொளி போலத்
தனித்தனி வீரர் தாங்கிய படைகள்
தானையங் கடலில் தவாவொளி வீச,
மேனிவந் தெழுந்து விரிதிரை போர்க்கும்
கற்பூரந் தத்துறு கார்முழக் கென்ன
விற்பால் விளக்கும் வீறுடைச் சங்கும்
பேரியும் உவகை பெரிதுறக் காட்டும்
தூரியம் பலவும் துடியும் சின்னமும்
கலந்து மயங்கிக் கல்லெனக் கறங்க,
நிலமும் விசும்பும் நிலைதடு மாற,
நாகமன் சேனையும் நாதன்
வேகவெம் படையும் விரைந்தெழுந் தனவே!

வஞ்சி மாலை

எழுந்த படைகள் இருகடல் எதிர்ந்தெனப்
புழுங்கு சினத்துடன் புகுந்து பொருதவா!
சொல்லவும் பெறுமே? சூலிருங் கொண்மூ
கல்லகம் பொழியும் கனமழை கடுப்பப்
பெருங்கணை மாரி பெய்தனர் வீரர்;
மருங்குறு வாளை வாங்கிச் சிலவர்

எதிர்ந்தோர் தம்மை இருகூ றாக்கினர்;
அதிர்ந்து நடந்தங் கறைகூ வினரைத்
தண்டால் புடைத்துத் தள்ளினர் சிலவர்;
கண்டார் கலங்கக் களத்தவிந் தார்பலர்;
அற்றகை வாங்கி அறுத கைக்கொடு
செற்றனர் சிலரைச் சிங்கவே றன்னூர்;
தலையற் றனர்பலர்; தாளற் றனர்சிலர்;
சிலையற் றனர்பலர்; நிலையற் றனர்சிலர்;
தோள்பட் டனரும் தொடைபட் டனரும்
நாள்பட் டனரும் வாள்விட் டனரும்
பரிகெட் டனரும் படைகெட் டனரும்
கரிகெட் டனரும் கணக்கிறந் தவரே;
வாலிழந் தோடின வாம்பரி சிலவால்;
காலிழந் திட்ட கலினமா பலவால்;
துதிக்கை இழந்த தும்பிகள் கோடி;
கதுப்பினம இழந்த கரியினம் கோடி;
பாரொடிந் தழிந்தன பலபல தேர்கள்;
ஆரொடிந் தழிந்தன அலகிலா விமானம்;
தட்டொழிந் தனசில தடந்தேர்; கொடிஞ்சி
பட்டொழிந் தனவால் பற்பல திகிரி;
புகையொடு பரந்தவும் பொங்கெரி கான்றவும்
ககனமேல் சென்றவும் களத்திற் பட்டவும்
பரியினைப் பிளந்தவும் பதாதி சாய்த்தவும்
கரியினைத் துளைத்தவும் காலெனச் சென்றவும்
தலைகளை உடைத்தவும் தரியலர் படையின்
நிலைகளைந் தனவும் நெடுங்குழாய் கான்ற
கரும்பொற் குண்டுகள் கணக்கிறந் தனவால்!
அருங்கவிப் புலவீர்! ஆயிரம் நாவுடை
அனந்தனும் புகல ஆற்றல் இலானேல்,
மனந்துணி வெய்துமோ? மற்றது கோடிரால்!
அடுத்திவ் விருவர் அமர்க்களந் தானை
எடுததுமேற் செலவே, இளைத்தோன் படைகள்

வென்னிட, நாகம விலங்கும்
மன்னவன் வலையில் வந்தகப் பட்டதே!

[விசுவநாதனும், அரியநாதனும் உள்ளே பிரவேசிக்க]

வாழ்கை மாலை

வந்தகப் பட்ட மதுரை மன்னன்
தந்திரம் இழந்தனன்; தீனயன்—இவனே
ஆகுதல் வேண்டும்—அரும்போர் கடந்தோய்!
சாகரஞ் சூழ்ந்த தராதலம் எல்லாம்
செங்கோல் ஓச்சும் செல்வம் பெறுவோய்!
எங்கோன்! என்னுயிர்! என்குறை தீர
எழுந்தகற் பகமே! ஏதிலார் பகையே!
தொழுந்தொறும் மன்னவர் தொங்கல் மவுலி
தோய்வுறத் தேய்வுறும் தொடுகழல் வீர!
பாய்திரை உலகில் பழையநல் லறங்கள்
நிலைபெற வந்த நீதியின் நிலையமே!
விலையொரு காசும் மேவப் பெறாத
துன்னல் சிதாரும் தொடர்ந்த வறுமையும்
இன்னற் படுத்தும் ஏழையேன் வார்த்தை
இன்னுரை அருந்தும் இருசெவிக் கேற்றந்
தன்னைப் பயக்குமோ ? தமிழறி புலவரைத்
தாங்கும் தண்ணளித் தடக்கை வள்ளால் ?
வாங்கு வரிசிலை வயவர்தம் திலக !
ஆயினும் கேட்டி ! அரும்போர் விளைத்த
பேய்குனித் தாடும் பெரும்போர்க் களந்தான்
சுனைவளக் குன்றுசூழ் சோழவந் தானெனும்
புனல்வளச் சிற்றூர்ப் புறத்து வெற்றிடம்;
சோழமா ளிகையில் சூழ்படை தொலைத்துச்
சோழனைச் செற்றுத் தோழமை கொண்ட
பாண்டியற் குரிமைப் படுத்திய தாக
ஆண்டுளோர்க் கிதமுற அபிநயம் காட்டிக்

கன்னி நாடதனைக் கவர்ந்த வீரனும்
மன்னவன் பகைவன் ; வகுதினி வாரிதி !
போர்த்திறம் எம்மால் புகல ஒண்ணுமோ ?
பார்த்தவர் திகைப்பர், பரிதிவா னவனும்
கீட்டிசை உதித்துக் கிளர்ந்து மேற்றிசைக்
கோட்டினை அடுத்துக் குறுகும் வரையில்
வெம்போர் விளைத்தனை ; விசும்புளோர் வியந்தார் !
கம்பித் துலகம் கடலுறு கலம்போல்
சுழன்றது ! பகைவர் தூசிப் படைகெடத்
தழல்விழிப் பரியினம் தாவுறச் செலுத்தினை
அணிவகுத் திட்ட அனிகம் குலைந்திடக்
கணிப்பருங் குண்டுகள் களத்தில் உய்த்தனை ;
கூறுவ தென்னினி ? குருதியா றோடப்
பாறுகள் சுற்றப் பல்பிணக் குன்றில்
அலகைநின் றாட, அணுகிநாய் தொடர,
நிலைபெயர்ந் தெங்கும் நேரலர் தானை
பின்னிடைந் தோடப் பெட்பில் குறுநில
மன்னவர் வணங்கி வாகையைச் சூடத்
திருப்புயந் தன்னில் திருவிருந் தாட,
விருப்பொடு முரசொலி வெற்றியை விளக்க,
நாற்கடல் தானை நாகமன் தோள்வலி
தோற்புற் றனையத் துவண்டு நிற்ப,
இன்றுநீ பெற்ற இயம்பரு வெற்றியைக்
குன்றிருந் தாங்குக் குறிப்புடன் நோக்கினன் !
கண்டவா பகர்ந்தேன், காவல ! உன்னை ;
மண்டலம் பரந்த வான்புகழ் சேர,
எண்டிசை மதிக்கும் இறைவ !
அண்டினள் என்னை அம்புயப் பொன்னே !

கச்சிப்புல: [விசுவநாதனை நோக்கி]

கவித்திறம் உடையார் கல்விமிக் குடையார்,
புவிக்கொரு திலக ! போரிடைக் கண்டநின்
ஆற்றல் அனைத்தும் அழகுறப் பாடினர் :

ஏற்றனன் யானும் இருசெவிக் கமுதாய்;
தானையும் பாடித் தரியலர் மேற்செல
ஏனைய வாகையும் எழிலுறப் பாடினர்;
ஆதலின் புலவர் அருளிய மாலையைக்
காதலித் தவரைக் கண்ணியம் செய்க.

விசுவ: [புன்னகை செய்து]

புனைந்தனை மாலை, புகழ்ந்தனை பெரிதா?
அனந்தனில் அறிவும் அருங்கவித் திறனும்
பெற்ற பெற்றியால் பேசினை; ஈன்பால்
உற்றதோ என்னில், ஒருசிறி தில்லேன்!
மதுரமே பெருக மனத்தினைக் கவர
இதமுற வந்திங் கின்னிசை பாடினை!
கேட்டனன், நாளும் கேட்பக்
கூட்டுற வாகக் கூடி வாழ்கவே!

[சேவகர் வெளியே நிற்ப, மற்றவர் பாசறை புக]

நான்காங்களம்

இடம்:	பாண்டியன் கொலு மண்டபம்
காலம்:	காலை
பாத்திரங்கள்:	விசுவநாதன், அரியநாதன், நாகமன், சந்திரசேகர பாண்டியன், குணவீர வர்மன், சொக்கலிங்கன் முதலானவர்

[அனைவரும் தததம் ஆசனத்தில் முறையே வீற்றிருப்ப]

விசுவ: [எழுந்து நாகமனைப் பணிந்து]

நேரிசை ஆசிரியப்பா

எந்தையே! இத்துணை ஏதிலார் போலுன்
சிந்தை புண்படச் செய்தன பொறுப்பாய்;
அரசன் ஆணையும் அறநெறித் துணிபும்

விரதமாக் கொண்டேன் ; வினைப்பயன் கொடிது!
சிறப்புற இருத்திச் சேவடி பணிந்து
பிறப்பித் தவனைப் பெரிதுறப் பேணும்
செய்தவம் இழந்தேன்; சிந்தையும் நொந்தேன்;
கொய்யுளைப் பரியினங் கொணர்ந்தநாள் ஒருவன்
கூறிய மெய்க்கதை கூடிய தென்பால்:
ஏறலை தவழும் இருங்கடல் துறைசேர்
நகரமொன் றதனில் நாய்கரில் ஒருவன்,
பகர்விலை தனக்குப் பண்டம் விற்பவன் ;
அன்னவன் தனயன் அருங்கலை பயின்றோன்;
மன்னவன் சுல்தான் மனத்தினில் மகிழ்ந்து
தன்னகர் நீதியந் தலைவர்க் குதவி
இன்னவன் ஆகென இசைந்தவன் ; ஒருநாள்
பட்டினம் புகுந்து பற்பல வணிகர்
கட்டளைக் கல்லையும் கைத்துலைக் கோலையும்
முத்திரைப் படியையும் முழக்கோல் தன்னையும்
உய்த்தறிந் தேகினன் ; ஒருசார் அமர்ந்த
தந்தையை நோக்கித் 'தனயனே யாமெனச்
சிந்தை செய்திடேல்; செய்திற முணர்வான்;
ஆதலின், முகத்தல் அளத்தற் கருவிகள்
ஏதம் உறாதன ஏற்றிடு வாய்,'எனப்
பக்கத் துள்ளார் பகர்தரு காலையில்,
நக்கனன் வணிகன்; நணுகினன் புதல்வன்;
வாம்பரி இழிந்து வந்தவன் கடையில்
ஆம்பல கருவிகள் ஆய்ந்தனன்; பிழையெனக்
கண்டனன், சிந்தை கலங்கி அவற்குத்
தண்டனை விதித்தனன்; 'தரும தேவதை
தந்தைதாய் எனவும் தன்கிளை எனவும்
சிந்தை செய்யுமோ? சிறிதும் தன்னிலை
தவறுமோ? தந்தாய்! தாளிணை பணிந்தேன்;
எவரை யாகிலும் இப்பணிக் கிறைவன்
ஏவிலன், இத்துயர் இட்டனன் என்வழி!

ஆ!விதி தன்னை ஐய!நீ பொறுத்தருள்,'
என்று தொழுதனன்;—எனது நிலைமையும்
இன்றது சான்றதால்! என்பிழை பொறுப்பாய்.

நாகம : மைந்த!நீ வருந்தல்; வாய்மை காத்தனை ;
உந்தையைக் காய்ந்ததா ஒருவரும் ஏசார்;
ஆண்டு முதிர்ந்தும் ஆசைப் பெருக்கால்
ஈண்டிறை ஆணையை இகந்தனன்; நீயோ,
தாங்கினை; தவறும் தாய்மொழி தள்ளினை;
பாங்குறும் அரிய நாதன் பகர்ந்த
நன்மொழி கொண்டிலேன்; நாத! நின்செயல்
நன்றெனக் கொள்ளும் நானிலம்!

ஜீவரா : நாகம!
'பிழைசெயல் இயற்கை! பின்னது நினைந்து
குழைவுறு வாரேல் குற்றம் தவிர்ந்தார்
மாந்தர்,' என்றே மாநிலம் கூறும்!
ஏந்தலும் காட்ட இயற்றிய வினைதான்
தீதெனக் கண்டனை, தெரிந்த தன்மையால்
கோதும் அகன்றது; கொற்றவன் பொறுப்பான் !
ஆதலின், நின்னகர் அரசாம் இவரை
ஆதனம் ஏற்றி அமைவன செய்து
பெருமையோ டெழுந்து பெருநகர்க் கேக
ஒருமையாய் உன்னுதும்.

நாகம : [பாண்டியனை நோக்கி]
ஒளிமணிப் பூணினய்!
சிறியேன் செய்த சிறுபிழை யாவும்
பெரியோய் பொறுத்தி!

சந்திர : பெறலரும் புதல்வனைப்
பெற்ற பெற்றியோய்! பிழைநீ செய்திலை.
உற்றதை விலக்க ஒருவரால் ஆகுமோ ?
என்விதி என்றே எண்ணுதல் ஒழித்து
நின்வயின் நிகழ்த்த நியாயம் உளதோ ?

விசுவ: [அரியநாதனை நோக்கி]

அருமைத் தோழ! அகன்பொழில் சூழ்ந்த
விரிசடைப் பெருமான் விளங்கும் கூடல்
நகரணி செய்து, நல்லதோர் நாளில்
தகைமைசால் அரசைத் தமனியப் பீடந்
தன்னில் அமர்த்தித் தாரணி மன்னவர்
மன்னவன் மகிழ மணிமுடி கவிப்பான்
கருதினன்; கருதிய காரியம் கைவரத்
தருதிமன் னவற்குத் தக்கதோர் துணையாய்
அமைந்திவண் இருத்தி; அணிநகர் நோக்கித்
தமருடன் ஏகுவன் தாழ்த்திடல்.

அரிய: நண்ப!

அன்னதே செய்கை! ஆற்றுவன்
மன்னவர் மன்னனை மாநிலம் தொழுவே!

ஐந்தாங்களம்

இடம்: விஜயநகரம், கன்னி மாடம்

காலம்: எற்பாடு

பாத்திரங்கள்: காஞ்சனையம்மன், மதிவிலாசினி,
மூர்த்தியம்மன், கிருஷ்ண தேவர்

[காஞ்சனையும் மதிவிலாசினியும்
கழல் விளையாடிப் பாட]

ஆசிரியத்தாழிசை

காஞ்ச: உலகுறும் உயிர்கள்மேல் ஒறுத்திடும் அவுணர்கள்
நிலையுறுார் அரன்முன்னென் றூடாய்கழல்;
நிலையுறின் துஞ்சுவரென் றூடாய்கழல்.

மதிவி: துஞ்சினல் என்னையவர் தொல்குலக் கிளைகள்
எஞ்சலில் எழுந்திடுமென் றூடாய்கழல்;
இத்தகையர் ஏதிலரென் றூடாய்கழல்.

காஞ்ச: தன்பகை யவர்ப்பொருது சாடினும் கருத்துறும்
அன்பர்க் கெளியவனென் றூடாய்கழல்;
அண்டம் கடந்தானென் றூடாய்கழல்.

மதிவி: நண்ணார்க் கிடர்புரிந்தா னாகிலும் தனையெவர்
நண்ணினும் அருள்பவனென் றூடாய்கழல்;
நாடுகள் புரப்பானென் றூடாய்கழல்.

காஞ்ச: முண்டகக் கண்திறந்து முப்புரம் அழற்படப்
பண்டுநின் றாடினனென் றூடாய்கழல்.
பாரியை தனக்கிதனென் றூடாய்கழல்.

மதிவி: பற்றலர் இரிந்துபாத பங்கயம் பணிந்திட
வெற்றிபூண் டிட்டானென் றூடாய்கழல்;
விச்சுவ நாதனென்றே ஆடாய்கழல்.

காஞ்ச: [பெருமூச்செறிந்து]

நேரிசை ஆசிரியப்பா

ஏதடி! மானே! எவர்பெயர் உரைத்தனை!
பேர்தடி புனைந்தும் போதினள் அருளிலள்!
புங்கவன் மனத்தில் புக்கிருந் தவனும்
என்கரம் பற்றிலன்; ஏழையேன் விதிவசம்
எப்படி இருக்குமோ! ஏந்திழை! அறியேன்.

[தனது மலர்க்கரத்தால் மதி முகத்தை மறைத்துத் தேம்பி அழ]

மதிவி: செப்படி! எவர்பெயர் செப்பினன் பேதை?
கைவளை கழன்றது! கருங்குழல் சரிந்தது!
மெய்வியர்ப் புற்றது! மின்னிடை மெலிந்தது!
மேனி பசந்தது! மெல்லவே உன்னிறை
மானமும் கவர்ந்து மனத்தினில் கரந்த
கள்வனர்? உரையாய்!

[மூர்த்தியம்மனும் கிருஷ்ண தேவரும் உள்ளே பிரவேசித்து ஒதுங்கி நின்று உரையாட]

மூர்த்தி: கன்னிதன் உளத்தில்
உள்ளுறை காதலன் ஒருவனைச் சொல்லெனக்
கேட்டீர், வருக! கிஞ்சுகச் செவ்வாய்
வாட்டடங் கண்ணி வார்த்தையால் அறிதிர்!

கிருஷ்: இவண்மறைந் திருப்பேன்; ஏழைநீ முன்னரே
இவள்கருத் திசைத்திலை!

மதிவி: [காஞ்சனையை நோக்கி]
எழுதரு மேனியாய்!
வஞ்சித் திதுவரை மறைத்து வைத்தனை!

காஞ்ச: [நெடிதுயிர்த்து]
வஞ்சியே! நெஞ்சுறை வள்ளலை உணர்கிலை!
மன்மதன் அழகில்! மதியினில் சிறந்தோன்!
என்மனத் தெழுந்த எழிலார் கற்பகம்!
எளியவர்க் கிரங்கி இன்னருள் புரிவோன்!
களிறெனத் தகையன்! கல்வியில் பெரியன்!
ஆற்றலில் முருகன்! ஆடவர் திலகன்!
மாற்றமென் உரைக்கேன்! மதிவிலா சினி!நீ
எவையெவை கூறினும் என்மனத் தெழுந்தாற்
கவையவை பொருந்தும், அணிவளைத் தோழீ!
நாதனர் பெயரை நங்கையர் நவில்வரோ?
ஆதலின் அவனே ஆர்வலன்!
[வெட்கித் தலை குனிய]

மதிவி: விசுவ
நாதனின் பெருமையை நவில ஒண்ணுமோ?
காதலன் அவனே! கலந்து வாழ்க!

காஞ்ச: [மிகுந்த ஆர்வங்காட்டித் தோழியைக் கடைக்கணித்து]
அவனையே மணக்கும் அரும்பெரும் பாக்கியம்
தவறு தெய்துமோ? தையலே! மலர்மகள்
இன்னருள் தருமோ? எனக்கு
மன்னவன் அன்றி மணமகன் எவனே?
[சோர்ந்து தரையிற் சாய]

அறுசீர் விருத்தம்

மூர்த்தி: வெங்காமத் தழல்படிந்து வேகின்ற பசுங்கொடியே!
விழைவே! எங்கள்
மங்காத செல்வத்துக் குறைவிடமே! மாதரசே!
மணியே! பொன்னே!
இங்காரும் புகழ்ந்தேத்தும் ஏந்தலையே மணந்து
எய்தி நாளும் [நலம்
சிங்காரம் படைத்துலகில் திருமாலும் திருவுமெனச்
சேர்ந்து வாழி!

[என்று கூறித் தன் தோழியைத்
தரையினின்றெடுத்துத் தழுவு
கிறாள்.]

நேரிசை ஆசிரியப்பா

மதிவி: மூர்த்தி! ஏதடி! மொய்குழல் சோர்ந்தனள்,
வேர்த்த முகத்தாள், வேதனை ஒழிந்து
காய்கனல் அடங்கக் கன்னியை
ஆய்மலர் தூவிய அமளிசேர்த் துவமே!

[மூர்த்தியும் மதிவிலாசினியும்
காஞ்சனையை எடுத்துச் செல்ல]

நேரிசை ஆசிரியப்பா

கிருஷ்: [தனியே]

அறியா திருந்தேன் அழகியின் காதல்!
வெறியார் மாலையன் விசுவ நாதனை
விரும்பினள்; விரும்பிய விருப்பின் படியே
பெருமணம் முடிப்பன்; பெருந்தகை சாலவும்
ஏற்றம் உடையோன், எழிலோன்;
ஆற்றலும் உடையோன்; ஆரவன் நிகரே?

[வெளியே செல்ல]

ஆறுங்களம்

இடம் : விஜய நகரம், இராஜ சபை

காலம் : காலை

பாத்திரங்கள் : கிருஷ்ண தேவர், சாளுவ திம்மன், அச்சுதப்பன், இராம ராஜன், குரு பக்க, சபையோர்கள்

[அனைவரும் முறையே தத்தம் ஆசனத்தில் வீற்றிருப்ப]

நேரிசை ஆசிரியப்பா

கிருஷ்: அவையீர் ! கேண்மின் : ஆணைமேல் கொண்டு,
சுவைமதுத் துளிக்கும் சோலையில் தும்பி
தமிழினைப் பாடும் தமிழகம் சார்ந்து,
கமையுடன் இருந்த காவலற் கரசைத்
தந்துதன் தந்தையைத் தன்னுடன் கொண்டு
வந்தனன் வாகை மாலை மார்பன் ;
நாதன் இங்ஙன் நாகம னோடும்
போதரும். அவர்கள் போதரு காலையில்,
நாகமன் இழைத்த நவையினைக் கருதாது
ஓகையின் எழுந்துநல் உரைகளைப் பகர்மின்.
அன்னவ னிடத்தில் அற்றதென் சீற்றம் !

[விசுவநாதன், நாகமன், ஜீவராய் மூவரும் உள்ளே வர]

இன்னே வந்தனர் !—எழிலார் தடக்கை
நாத ! வருக ! நாகம ! வருக !
ஏதம் களைந்த இராய!நீ வருக !

[மூவரும் கிருஷ்ண தேவரை வணங்கி நிற்ப]

என்னுரை இகவா தெழுந்துமேல் சென்று
தென்னவன் உரிமை திருத்திய தீர !

அழகினில் மதன! அறிவினில் சேட!
இழைத்திடும் கைம்மா றென்னுள் தம்ம!
இவனைநன் மகனை ஏற்றிடச் செய்த
தவமே பெரிது! தானையின் தலைவ!
இவணுறும் ஆதனத் தினிதின் அமர்க!

நாகம: பவத்தொழில் புரிந்தேன்; பார்த்திவன் ஆணையைக்
கடந்தவன் ஆனேன்; காவலர் அவையில்
இடந்தரப் பெறுதல் ஏற்குமோ?

கிருஷ்: நாகம!
சென்றது கருதேல்!

நாகம: செய்தது பொறுத்தி!
இன்றடி பணிந்தேன்! எளியேன் மனமிக
நொந்தனன் ஐய! நோதலைத் துடைத்தி.

கிருஷ்: சிந்தையில் கவலை சிறிதும் கொள்ளேல்!
பன்னெடுங் காலம் பழகினன்; பகையை
உன்னுடை வலியால் ஒழித்தனன்; உயர்ந்தேன்;
அத்துணை நன்மையை அறியா திருப்பனோ?
இத்துணை எளிமை இசைத்தனை வீர!
இன்னருள் வேண்டினை; என்னுற வளித்தனன்.

குருபக்க: 'இன்னருள் புரிதல் இறைமகற் கியற்கை,'
என்பதற் கேற்ப இன்னுரை கூறினை;
நின்னருள் வாழி! நேயனும் வாழி!

திம்ம: நேயனும் துன்னலர் நேர்ந்த காலையில்
ஆயநற் றுணைவனும் அரும்போர் முனையில்
சிங்கஏ றன்ன சிறந்த தலைவனும்
துங்கபத் திரையும் துர்க்கையும் நாண
நகரம் காக்கும் நற்றொழில் உடையனும்
புகழ்தரும் புண்ணியப் புதல்வனைத் தந்த
தந்தையு மான தானையின் தலைவ!
சிந்தையில் தவறிச் செய்த பிழைதனை

இன்றே மறத்தி; இறைவன் அருளினன்;
நன்றே! தவிசில் நாகம! அமர்க!

அச்சு: [நாகமனை ஆசனத்தில் அமர்த்தி]

பிழையெனப் படுமோ? பெரியோய்! புதல்வன்
தழைவுறும் புகழைத் தரணிகொண் டாடச்
செய்தனை; இழிவு செய்ததாக் கண்ணீர்
பெய்தனை; நின்செயல் பிழையெனப் படுமோ?

இராம: வழங்குறு கலங்களில் வண்புனல் வார்த்தே
அழுக்கினைப் போக்குதல் அவனியோர் செய்கை;
அன்னது நிகர்ப்பவிவ் வாண்டகை குறையைத்
துன்னுகண் ணீரினல் துடைத்தனன் அவையீர்!

கிருஷ்: [சிம்மாசனம் விட்டிறங்கி, நாகமனைத் தழுவி]

என்னுயிர்த் தோழ! எழுந்தியாம் ஏகித்
துன்னுதும் கதிரவன் சுடர்களைத் துரத்தும்
நீழலும் தண்மையும் நிலவிய சோலையின்
சூழலில்; பகரும் சொற்களுக் கினிய
மாற்றம் கூறுக; வனிதை காஞ்சனைக்கு

[சபையோர்கள் எழுந்து நிற்ப]

ஏற்ற நாயகன் எய்தினன்; அவளும்
அணங்கினுக் கணங்காம்; அழகினுக் கழகு;
குணங்களுக் குறைவிடம்; கோலமார் வஞ்சி;—
கடிமணம் செய்யும் காலமும் எதிர்ந்தது;
மடவரற் கேற்ற மணமகன் தேடுதல்
நம்பெருங் கடமை; நாகம! நினைந்து
வம்பவிழ் சோலை வழியே செல்லுதும்!
திம்ம!நீ வருக!

இராம: திருவுளப் படியே
அம்மணிக் கானவோர் ஆடவன் அமையும்!

[கிருஷ்ண தேவர், திம்மன் நாகமன் இவர்களுடன் வெளியே செல்ல]

குருபக்க: இளமை தொடங்கி இந்நாள் வரையும்
உளப்பிணிப் போடும் ஒற்றுமைப் பட்டாள்,
ஆடலும் பாடலும் அருங்கலைப் பயிற்சியும்
ஏடவிழ் மலர்ப்பொழில் இனிதுலாம் தன்மையும்
ஒருங்குடன் பெற்ற ஒண்டொடி நல்லாள்;—
இருங்கலை விநோதன் எழிலார் நாதன்
தன்னையே அல்லால் தரணியில் எவரை
உன்னுவள் நாதனுய்? உலகம் புரக்கும்
தேவனும் இதனைத் தெரிந்து நன்மணம்
யாவரும் விரும்பி யாணர் நன்னகர்
வீதியில் தோரணம் விழைவுடன் பொருத்தி
வேதிகை திருத்த விரைவினில் முடிக்கக்
கருதினன்; அவையோர் கருத்தும் அன்னதாம்;
குரிசில்!உன் கருத்தும் கூறுக!

அச்சு: பெரியோய்!
என்னருந் தோழன் ஏற்றமிக் குடையோன்
நன்னலம் திகழும் நங்கையை மணக்க
வேண்டும் என்றே விரும்பினன் நெடுநாள்!
ஈண்டுரை தந்தீர்; என்மனம் களித்தேன்!

குருபக்க: அவையீர்! கேண்மின்! அவனிகா வலவன்
அவிரிழை நங்கையை ஆண்டகை நாதற்
கெழில்மணம் புரிய இசைந்தனன்; அவ்வுரை
வழங்கென, மகிழ்ந்துரை வழங்கினன்; நீவிர்
களிப்புடன் உங்கள் கடிமணம் போலத்
திளைத்துளம் மகிழ்ந்து திருமணம் காண்க!

அச்சு: [விசுவநாதனை நோக்கி]
நாதனே! வருக! நாமும்
போதுலாம் பொங்கரில் பொழுதுபோக் குவமே!

[சபை கலைய]

ஏழாங்களம்

இடம்: பூங்காவனம்

காலம்: எற்பாடு

பாத்திரங்கள்: அச்சுதப்பன், விசுவநாதன், மூர்த்தி அம்மன், காஞ்சனையம்மன், கிருஷ்ண தேவர், குரு பக்க, நாகமன், திம்மன், மதிவிலாசினி

[அச்சுதப்பனும், விசுவநாதனும் பளிங்கு மேடையிலிருந்து உரையாட]

நேரிசை ஆசிரியப்பா

அச்சு: நாத! நண்ப! நவிலும் என்மொழி
ஏதடா! நின்செவி ஏறிடக் காணேன்—
தனிமையி லிருந்து தன்னுளத் துடனே
இனிமையிற் பேசி இருக்கும் தருணம்
இதுவே ஆதலின், ஏகு கின்றனன்!—

[அச்சுதப்பன் பிரிந்து செல்ல]

விசுவ: [தனியே]

மதிநிகர் முகத்தாள், மதுரமென் மொழியாள்,
முத்தநேர் முறுவல் முருக்கிதழ்ச் செவ்வாய்
நத்தினை ஒத்த நகுமணி மிடற்றாள்,
செவ்வரி படர்ந்து சேலினை மருட்டிப்
பவ்வமே சாலும் படைநிகர் கண்ணாள்,
நங்கை காஞ்சனை நந்தாக் காதல்
பொங்கிட என்னைப் பொருளாக் கருதினள்!
பாக்கியம் படைத்தேன்! பாவைபால் எனக்கும்
ஆக்கிய காதல் அமைந்துள தாயினும்,
வாக்கினால் புலப்பட வார்த்தை கூறிலன்;
நோக்கினால் குறித்திலன்; நுவலருங் காதல்
தன்னிலே வளரத் ததும்பி நின்றனள்;
கன்னியின் மனத்தைக் கவர்ந்திடற் கான

இங்கிதம் காட்டி இருப்பனேல் குற்றம்
தங்கும் என்வயின்; தையலோ டென்றும்
அத்தகை நடந்தில னாயினும், அவளுக்
கித்துணை ஆர்வம இயற்கையின் அமைந்தது!
அங்கனை அன்பினால் ஆர்க்கப் பட்டனன்!

[மூர்த்தியம்மன் உள்ளே வந்து]

மூர்த்தி: பொங்குதேன் பொழியும் பொலந்தார் மார்ப!
பங்கயம் அலர்த்திப் படியினில் புதுமையாய்
இங்கொரு கதிரவன் ஏகினன் கொல்லோ?
தலைவியின் மனத்தைத் தன்னுடன் கவர்ந்திவ்
விலைமரப் பொதும்பர் இடைவெளிச் சென்ற
கள்வன் ஒருவனைக் கண்டனை கொல்லோ?
புள்ளிமான் அன்ன பொற்றொடி வருந்த
எயினர் பதியென ஏவினைச் செலுத்தியிவ்
வயினொரு மதனன் வந்தனன் கொல்லோ?
பெண்மைக் கிரங்கும் பெருந்தகை! என்பால்
உண்மையைப் பேசுக!

விசுவ: ஒன்றும் அறியேன்;
இவ்வழி ஒருவரும் ஏகிடக் காண்கிலன்.

மூர்த்தி: எவ்வம் படைத்தென் ஏழையை வருத்திய
கள்வனைக் கண்டேன்! கள்வனும் நீயே!—
புள்விளை யாடும் பொங்கரில் நின்றனை;
உருவினும் ஒத்தனை; உள்ளுறை வஞ்சனை
திருமுகம் தோற்றத் திருடனில் நின்றனை;
கார்முகத் தழும்புன் கைத்தலம் கண்டனன்!
வார்குழல் தலைவிமுன் வருக; நின்னை
விட்டினிச் செல்லேன்!

விசுவ: விளங்கிழை! பழிதான்
இட்டனை; இனியெனக் கிளமான் விதிக்கும்
தண்டனை எதுவோ?

மூர்த்தி: தன்னரு அன்பாம்
திண்கயி றிட்டுச் சிந்தையாம் சிறையில்
வைத்துனக் கென்றும் வார்த்தையாம் உணவைப்
பொய்த்திடா தளிக்கும்! போதுக!

[காஞ்சனை பிரவேசிக்க]

தலைவியும்
வந்தனள், அம்ம!—மார!நீ மங்கையின்
சிந்தையிற் படுதல் செவ்விதே!—செல்வன்.

[மூர்த்தியம்மன் வெளியே செல்ல]

காஞ்ச: கருங்கலோ மனமும்? கருணைதான் இலையோ?
அருங்கலை பயின்றும் அழகுறப் பொலிந்தும்
நற்குணம் படைத்தும் நாடொறும் பழகியும்
எற்குறு காதலை இவர்தரச் செய்தும்
உனையலா தொருவன் உறுதுணை வேண்டா
நினைவெனக் கருளியும் நெடுநாள் காதலை
வெளிப்படை குறிப்பின் விளம்பிய தையலைக்
களிப்புறச் செய்யாக் கைதவம் கொடிது!

விசுவ: வேந்தன் புதல்வியே! விளைதரும் காதலை
ஈந்தனன் என்றாய்! இடையறாப் பழக்கம்
நேர்ந்ததை அன்றி நேரிழை அறியேன்
சார்ந்ததோர் குற்றம்; தையலே! உன்றன்
தந்தையும் உனக்குத் தகுமணம் முடிக்கச்
சிந்தை செய்தொரு செங்கோல் உரிமைச்
சிறுவற் களிப்பன்!

காஞ்ச: செங்கோல் உரிமைச்
சிறுவன் எவனே, சிங்கஏ றனையாய்!
நின்பொருட் குரியோன்?

விசுவ: நிலமுழு தாளும்
மன்னவன் செல்வி! மன்னவர் குலத்தில்
பிறந்து வளர்ந்தனை; பெரும்புகழ் அரசரில்
சிறந்துளோன் ஒருவனைச் சேர்ந்திடல் அன்றி

எளியனை மணத்தல் ஏற்றம் ஆகுமோ ?
ஒளிமணி மாலை உயர்முடி மன்னவன்
விதித்த வழியின் மெல்லியல் !
மதிதனைச் செலுத்தின் மணாளன் எய்துமே !

காஞ்ச: [புன்னகை செய்து]

நேரிசை ஆசிரியப்பா

நண்பனும் நாதன் நடுநிலை பகர்ந்தான் ;
பெண்பால் இரங்கிப் பெருமதி உரைத்தான் ;
சீரினைச் செய்யும் திருவும்,
பார்த்திவர் தன்மையும் பகர்தரக் கேண்மோ :

நேரிசை ஆசிரியப்பா

திருவெனத் தருவது திருவளர் புயத்தோய் !
ஒருவழி நில்லா தோடும் சகடம் ;
விழியினைக் கட்டி விளையாட் டயரும்
தொழிலினோர்க் குறுபொருள் ; தொடுகடல் தவழும்
வெண்டிரை ; ஆதலின், வேந்தே !
உண்டுகொல் நிலைதான் ? உள்ளம் தெளிகவே

நேரிசை ஆசிரியப்பா

பார்த்திவர் தன்மை பகரக் கேண்மோ:
பார்த்திவர் வியக்கும் பல்படை விநோத !
நகரமும் செல்வமும் நண்ணார் கைக்கொளப்
பகரருந் துன்பம் பற்றினர் திரிந்தார் ;
பொன்முடி துறந்தார் ; போர்க்களத் தவிந்தார் ;
மன்பதை ஒறுக்க மாண்டனர் ; விடத்தால்
மாய்ந்தனர் ; ஆதலின், மன்னவ !
ஆய்ந்தறிந் திதனை அகத்தில் தெளிகவே !

நேரிசை ஆசிரியப்பா

ஆதலின் அரசும் ஆக்கமும் பிறவும்
போதகம் அனையாய் ! புற்புதம் நிகர்க்கும் !
அன்னவை வேண்டேன், ஐய! நின் காதலி
என்னவே மாநிலம் இசைகரும் பாக்கியம்
ஒன்றையே வேண்டினன் ; உதவி புரிக!

விசுவ: மன்றலங் கூந்தல் மங்கையர் திலகமே!
உன்பிதா ஒருவற் குவந்தளிப் பானேல்,
என்படும் உள்ளம்? ஏழைநீ நவில்வாய்!

காஞ்ச: எறிபுனற் படுவனே! எரியிடைப் புகுவனே
பிறிதொரு வகையால் பிரிப்பனே ஆவி!

விசுவ: பேதை!நீ கொண்ட பேதுறல் ஒழிக!
தாதை எனக்கே தருவதா எண்ணினன்!
பாவையே! உன்றன் பணிதலைக் கொள்ளும்
சேவகன் ஆயினன்!

காஞ்ச: சேவகன் நீயோ?
என்பெருந் தலைவ! என்பெருஞ் செல்வ!
என்பே ருயிரே! என்பெருங் காதல!
என்பெரும் பிறப்பே! என்பே ரரசே!
என்பே ருடலே! என்பெரு மனமே!
என்பெரு மதியே! இருவரின் உயிரும்
ஒன்றெனச் சேர்ந்ததோர் உயர்மணம் கண்டோம்!
ஓருயிர்க் கிருடல் உற்ற ததிசயம்!

[மூர்த்தியம்மன், கிருஷ்ணதேவர், குரு பக்க, நாகமன், திப்மன் இவர்கள் அங்கே வந்து நாத னுடன் நின்ற காஞ்சனையைக் கண்டு]

கிருஷ்: காரிகை வாழி! காதலன் வாழி!

நாகம: நங்கையும் வாழி! நாதனும் வாழி!

ஏனையோர்: மங்கையும் நாதனும் வாழி!நீ டூழி!

குரு பக்க: [தனியே]
காதலன் காதலி களித்ததைக் கண்டு
ஆதரத் தமரர் அலர்மழை பொழிக!
கானம் எழுக! காவும் தளிர்க்க!

[தேவர் பூமழை சொரிந்து கானம் செய்ய]

நாகம: வானகத் திருந்து மலர்மழை பெய்ததும்
இன்னிசை எழுந்ததும் இசைப்பரு விந்தை!
குருபக்க: கன்னி தனக்கிசை காதலன் என்று
விண்ணவர் தாமும் வியந்தனர் போலும்!

[மூர்த்தியம்மன் ஒருசார் மறைந்து கொள்ள, மற்றவர் வெளியே செல்ல]

விசுவ: [தரையிற்கிடந்த ஒரு மலரை எடுத்துக் காஞ்சனைக்குத் தந்து]

கண்மணி! இம்மலர் கற்பகக் காவில்
பூத்த நறுமலர்! பொலிவினைப் பாராய்!
காஞ்ச: ஏத்தரும் புகழோய்! இனிதின் செல்லுதும்
நித்தில மாலைகள் நிலவிய
பத்தியின் குயிற்றிய பன்மணி மாடமே!

[இருவரும் வெளியே செல்ல]

மூர்த்தி: [காதலர் இருவருக்கும் நிழலைத் தந்த பூங்கொம்பருக்குத் தனது முத்து மாலையைச் சாத்தி]

நேரிசை ஆசிரியப்பா

அலர்தனைத் தாங்கி அசைந்திடும் கொம்பே!
உலகினில் இவர்போல் ஒருமனப் பட்டார்
அரிதெனக் கண்டு,நீ அசைந்தலர் சொரிந்தாய்!
பெரிதென மாலையைப் பேதையேன் அளித்தேன்!

[மதிவிலாசினி உள்ளே வந்து]

மதிவி: என்னடி! பேதை! இம்மலர்க் கொம்புடன்
பன்னு கின்றனை பலபல மொழிகள்!
அனைவரும் இப்பகல் அதிசயம் உற்று
நினைவொரு நிலையில் நின்றிடார் ஆகிக்
களித்திடற் கான காரியம் என்னை?
மூர்த்தி: களித்திடும் காரணம் காரிகை கேளடி!
காதலிற் காவலன் கன்னியை
நாதனுக் களிக்கும்; நாளைநன் மணமே!

ஆனந்தக்களிப்பு

நல்ல மணமிது பெண்ணே !—சகி
 நாதனை யேபதி யாகப் பெறுமணம் (நல்ல)

காமப் பெருங்கடல் மூழ்கி—உறு
 காசினை வீசியே கன்னியைத் தேடிப்
பாமரர் செய்மணம் என்னே !—புகழ்
 பாரக மேவப் படைத்தவன் செய்மணம் (நல்ல)

மங்கை தனக்குயர் செல்வம்—வர
 வாஞ்சையில் தேடி வரித்திடும் மங்கலம்
மங்கல மாகுமோ ? மாதே !—மட
 மானையிம் மன்னவன் மாலையி டும்மணம் (நல்ல)

மன்மதன் அழகினில் என்று—மண
 மகளையோர் வீணனைத் தேடி மடுத்தல்
நன்மண மோ?புகழ் மன்னன்—மகள்
 நாதனை நாளை நயந்திடும் மாமணம் (நல்ல)

படித்தவ னென்று தேடி—ஒரு
 பண்பும் இலாவெறும் பேதையை நாடிக்
கொடுப்பதோ நன்மணம்? சேடி!—எழில்
 கோமக ளைப்புகழ் மாமகன் செய்மணம் (நல்ல)

உள்ளம் ஒருநிலை கொண்டும்—உயர்
 செல்வமும் கல்வியும் ஒத்திடக் கண்டும்
கொள்ளும் திருமணம்! பண்டு—பயில்
 கோதில் தவமெவர் கூடின துண்டு ? (நல்ல)

[இவ்விதம் இருவரும் ஆனந்தக் களியாடி வெளியே செல்ல]

எட்டாங்களம்

இடம்: விஜயநகரம் இராஜவீதியிலுள்ள ஒரு மாளிகையின் நிலா முற்றம்

காலம்: மாலை

பாத்திரம்: மதுரைப்புலவர்

நேரிசை ஆசிரியப்பா

மதுரைப்: [தனியே]

காவளர் சோலைக் கன்னிநன் னாடும்
வார்புனல் பரந்த வளவன் பதியும்
கண்டிவண் வந்தேன்; கனக மாடமும
விண்தொட நிவந்த வியன்மதில் காவலும்
பற்பல சிறப்பும் பயிலுமிந் நகர்க்கு
விற்பனர் உவமை விளம்பல் ஆகுமோ!
இந்நகர் தன்னில் இருந்தநாள் சிலவே!
பன்னெடு நாளிற் பாருளோர் காணும்
காட்சி அனைத்தையும் கண்டனன் ஆதலின்,
'மாட்சிமை மிகுந்த மாநகர் பலவும்
திரிந்து நோக்குதல் திருத்திடும் கருத்தை;
விரிதரச் செய்யும் விளக்கமில் மனத்தை;
நாற்றிசை மாந்தர் நடையுடை ஒழுங்கையும்
போற்றிடு வழக்கையும் புலப்படக் காட்டி
அறிவைப் பெருக்கும்,'என் றன்றோர் அருண்மொழி
சிறிதும் பிழைபடாச் செயலினை அறிந்தேன்;
ஆடவர் திலகன் அரும்பெறல் நங்கையை
ஆடகத் தொடியணி அன்னமெல் லியலை
மணம்புரி செய்கையின் மாநகர்க் கெழுந்த
தணிப்பரும் உவகையைச் சாற்றுவ தரிதாம்!
பன்மணி இழைத்த பவளக் கால்நிறீஇ
மின்படக் குயிற்றிய விதானமண் டபத்தின்

நாப்பண் அமைத்த நகுமணித் தவிசில்
காப்புடன் திகழும் கன்னிகாஞ் சனையை
நானிலம் புகழும் நாதன் றனக்கு
வானவர் வாழ்த்த வன்னிமுன் பாக
நறும்புனல் பெய்து நயந்து தந்தனன்;
உறுங்கிளை மகிழ்ந்தது; உத்தமர் வியந்தார்;
மங்கல வாழ்த்தொலி மங்கையர் பாடச்
சங்கினம் பொங்கத் தனித்தனி பல்லியம்
கறங்கின; அவ்வயின் காவலன் களித்து
மறையவர் பாணர் வண்கவிப் புலவர்
ஏழையர் பலரும் இன்புற நிதியறைத்
தாழ்திறந் திட்டவா தாமே கொள்கென
விடுத்தனன்; கண்டதை வியன்நகர் மாந்தர்
கொடுத்தனர் தாமும் குறைவிலாச் செல்வம்;
இன்னுரை கூறிய ஏழையர் தமக்குப்
'பொன்மணி ஆரம் பூண்மின்,'என் றளித்தார்;
நெய்யுடன் பருப்பு நெகிழ்ந்த உண்டியும்
தெய்வவெண் மதியெனத் திகழ்தயிர் பெய்து
வெண்ணெயும் கலந்து விளங்குவெண் சோறும்
பண்ணுறும் பலவிதப் பணியா ரங்களும்
இனிப்புறு கனிகளும் இருவிழி பிரசம்
நனிசொரிந் திட்டு நன்மணம் கமழ்ந்த
பாயச வெள்ளமும் பாலடைக் கட்டியும்
வாய்ந்த வறுவலும் மாங்காய் முதலிய
ஊறு காயும் உண்பவர்க் குள்ளம்
ஏறிட உவகை இருபிறப் பாளரும்
மற்றுளார் தாமும் வயின்வயின் நுகரப்
பெற்றன ராகிப் பெருமகிழ் வெய்தினர் ;
சந்தனம் பனிநீர் தாம்பூ லாதிகள்
தந்தனர் ; நறுமலர்த் தாமம் சூட்டினர் ;
ஏந்தலுக் கெய்திய இன்பம் கண்டு
மாந்தர் யாவரும் மனங்களிப் புற்றார் ;

ஆடலும் பாடலும் அமைந்தவிந் நகரில்.
ஏடவிழ் மாலை இளைஞரும் ஏழையர்
தாமும் பெருங்களி தாங்கு கின்றனர்.
ஏமம் படைத்தன இருங்களி யானை;
வாம்பரித் தொகுதி வாலுளை அசைத்து
மேம்படு மகிழ்வை விளக்கி நின்றன;
பாகரும் களித்தார்; பதாதியும் களித்த;
வேகநல் இரத வீரரும் களித்தார்;—
மன்னனைக் காணவும் மணவினை காணவும்
துன்னினர் அரசர்;—தொடுகடல் தவழும்
உரியநாட் டரசும் உறுபொருள் வணிகம்
புரியும் மேற்றிசைப் போர்த்துகல் தலைவனும்
கோலகுண் டாநகர்க் குட்புஷா தானும்
ஓலமார் கடல்சூழ் உதய கிரியின்
காப்புடைப் பிரதாப ருத்திர கசபதி
மாப்புகழ் வீரனும் மலையமா னட்டுச்
சேரன் திருவடிச் செம்மலும் குன்றில்
காருலாம் கொங்குறை காவலன் றானும்
சந்திர கிரியின் தலைவனும் பொதியச்
சந்தனம் கமழும் தண்டமிழ் வழுதியும்
குறுநில மன்னர் குழுவும் கூடினர்;—
குறளுரு முன்னர்க் கொண்ட நெடியவன்
அண்டம் உறைதரும் அணிவழி ஒருப்பக்
கண்டனன் இந்நகர்; கருங்குழல் மாதர்
கார்வரக் கண்ட களிமயில் நிகர்ப்ப
ஆர்வமுற் றனராய் அணிபல பூண்டு
மணமகள் ஒப்ப மனமகிழ் வெய்தினர்;
திணிதோள் கிருட்டின தேவ ராயனும்
சின்ன தேவியும் திருமலை யம்மனும்
மன்னனச் சுதனும் மகிழ்வர தம்மனும்
சுற்றமும் மந்திரச் சூழ்ச்சிக் கிழவரும்
உற்றனர் உவகை; உயர்மனை திருத்தினர்;

பழமணல் போக்கிப் புதுமணல் பரப்பினர்;
கழையினை நாட்டிக் கட்டினர் தோரணம்;
வாழையும் கமுகும் வயின்வயின் பொருத்தினர்;
காழகில் புகையைக் கமழ்தரப் போக்கினர்;
சுண்ணமும் மலரும் தூவினர்; தூண்டா
வண்ண விளக்குகள் வாயிலின் வைத்தனர்;
பூரண கலசம் பொலிதர வைத்தனர்;
நாரியர் வீதியில் நலனுறக் கோலம்
இட்டனர்; நகரம் எழிலுறப் பொலியக்
கட்டழ கமைந்த காஞ்சனை தன்னொடும்
பொலங்தேர் ஏறிப் புதுமணக் குரிசில்
நலமுற இவ்வழி நகர்வலம் வருவன்:
ஆதலின் யானும் அருங்கவிப் புலவன்
காதலன் கச்சிக் கவிவலான் உடனே
புகுந்து காண்பன் பொன்னொடு
நகுமணி மாட நகர்வலச் சிறப்பே!

வாழ்த்து

நேரிசை வெண்பா

மங்கையுடன் வாழ்க மகப்பெறுக மாநிதியம்
தங்கிநலம் சூழ்க தரணியெலாம்—திங்கட்
குடைவளர்க நாதன்செங் கோல்பெறுக மாலை
முடிபுனைக பைம்பொன் முடி.

ஐந்தாம் அங்கம்

முதற்களம்

இடம்: விஜயநகரம், வேங்கட விலாஸம்

காலம்: காலை

பாத்திரங்கள்: அச்சுதப்பன், திம்மன், சகள ராஜ குமாரன், விசுவநாதன், அரியநாதன், இராம ராஜன், சின்ன வேங்கடாத்திரி, ஜீவ ராய், சதாசிவ ராய் முதலானவர்கள்

[அனைவரும் தத்தம் ஆசனத்தில் முறையே வீற்றிருப்ப]

நேரிசை ஆசிரியப்பா

அச்சு: மந்திரத் தலைவ! மன்னவர் செருக்கைத்
தந்திரம் கொண்டு தகைந்திடு மாறு
தென்றிசை நாடித் திரிந்தநாள் இந்த
வென்றிசூழ் நகரம் விளக்கம் உற்றதோ?
மறையவர் நியமம் வழாஅது நடந்ததோ?
குறைவிலா அறங்கள் கூடின கொல்லோ?
நால்வகை வருணமும் நந்தா துற்றவோ?
கோல்வழி நோக்கிக் குடியமர்ந் தனரோ?
வானவர் உவப்ப மாமகம் நடந்ததோ?
தானமும் தருமமும் தழைத்தவோ? எங்கும்
மாமழை பொழிந்ததோ? மாநிலம் தளிர்த்ததோ?
கோமடி சுரக்கக் கொண்டதோ அமுதம்?

திம்ம: வெற்றிவேல் இறைவ! வேங்கடாத் திரியின்
கொற்றவெண் குடையில் குவலயம் எங்கும்
இன்பமே பொருந்தி இருந்தது; மாநகர்
மன்பதை மகிழ்ந்துநல் வாழ்வு பெற்றது;
செல்வம் பெருகித் திருநகர் செழித்தது.

அச்சு: கல்விமிக் குடையீர்! காசினி புரந்த
அடியன் முன்னவன், அரும்பெறல் மகவாய்ப்
படிபுகழ்ந் திடவெனைப் பரிவொடு வளர்த்தவன்,
திருமுடிக் கிருட்டின தேவனும் மன்னவன்
அரும்பதம் சென்ற அற்றைநாள் அடைந்த
துயரம் துடைத்தெனைத் தூமுடி தாங்கி
உயரறம் நிறுத்தென, உரைவழி நின்றனன்.
அன்ன காலையில் ஆயிரம் கதிரவன்
தன்னிலை ஒடுங்கத் தமந்திரண் டென்னக்
குறுநில மன்னவர் குழுமிப் பரந்தனர்;—
உறுபகை அடக்க ஒருதனிப் படையுடன்
எழுந்தனன்; சந்திர கிரிசென் றெய்தினன்,
தொழுதனன் வேங்கடம், தூயகா ளத்தி
மலையினை வணங்கி, மாயவன் விளங்கும்
தலமாம் விட்டுணு கஞ்சியில் தங்கி,
அண்ணா மலையார் அருளினைப் பெற்று,
நண்ணிய வேட்டுவர் நட்பினைக் கொண்டு,
கண்களி ஊட்டும் காவிரி யாற்றின் மடுத்
தண்ணெனக் குளிர்ந்த தடங்கரை மருவி,
தரங்கமுத் தெறியும் தண்புனல் ஆறுசூழ்
அரங்கமா நகரை அடைந்து தங்கினன்;
நாகமன் படையால் நானிலம் துறந்த
சேகரன் பின்வரு சென்னியாம் நம்பி
திருவிதாங் கூரிறை திருவடி சரண்புகுந்
திருந்தனன். அவனை எதிர்த்திடச் சகள
இராச குமாரன் ஏகினன்; எதிர்ந்து
விராவிய சேனையை வென்னிடத் துரத்திச்
சோழனைப் பிணிக்கச் சோர்ந்த திருவடி
தோழமை வேண்டித் தொழுதெனை அடைந்தான்:
உடன்பா டிழைத்தவற் கொற்றுமை காட்டினன்;
திடமுறத் தென்னவன் திருவடிக் குயர்வாம்
பதம்பெற வைத்தனன்; பாயல் அரங்கனை

இதம்பெற ஏத்திக் கொங்குநா டெய்தினன் ;
படையொடு புகுந்துசீ ரங்க பட்டணம்
அடைந்தனன் ; துளுவ அரசர்கள் இறுத்த
திறையினைப் பெற்றுத் திரும்பு காலையில்,
மறவினை புரியும் மாற்றலன் வடபால்
ஆனகா வதநா டச்சுவு பதியின்
தானமே என்று தருக்குடன் பேசிப்
பொங்குதல் கேட்டுப் போந்தனன் விரைவில்;
திங்களின் மரபைத் திருத்திய துணைவ !
அன்னவர் விடுக்க அடைந்த தூதனை
முன்னர்க் கொணர்க.

திம்ம : [சதாசிவ ராயனை நோக்கி]

மூர்க்கன் விடுத்த
தூதனைத் தருக. [சதாசிவராயன் வெளியே செல்ல]
தொன்றுதொட் டிவர்கள்
பேதமை கொண்டு பிதற்று கின்றனர் ;
நாடு நமதென நாட்டினம் பலகால் ;
கேடுசூழ் மதியினர் கேட்கிலர் படுவார் !

[தூதன் பிரவேசித்து]

தூத : மன்னவர் ஏறே! வந்தனம் தந்தனன் !
என்னுரை கேண்மின்: எம்மிறை காவத
நாட்டின் உரிமையை நாட்டு கின்றனன் ;
கேட்டுநீர் மறுப்பின் கிளர்ந்திடும் போரெனக்
கூறுக என்றொரு கொடிப்படை கூட்டிச்
சீறிய மாலுவைச் சேனைத் தலைவனாய்
அமைத்தரண் சூழ்ந்த அடற்கரும் ரேய்ச்சூர்
இமைப்பொழு தேகென இயம்பினன்; அவனும்
புகுந்தனன் யானும் போந்தனன் உரைத்தேன் !
நகுமணி மாலை நரேந்திரர் தலைவீர் !

அச்சு: [சினங்கொண்டு]

நன்கு ! நன்குரை ! நாளையே போரென
என்கருத் துரைக்க எழுதி போதிநீ !

[தூதன் செல்ல]

நாத ! நமது நால்வகைப் படையை
ஓதக் கடல்கிளர்ந் தொருவழிப் பெயர்ந்தெனக்
கூட்டுக; ரேய்ச்சூர்க் கொடிமதில்
கோட்டுதும் நமது கொடிப்படை கொண்டே !

இரண்டாங்களம்

இடம்:	ரேய்ச்சூர்க் கோட்டையின் வெளிப்புறத்து இறுத்த பாசறை
காலம்:	மாலை
பாத்திரங்கள்:	விசுவநாதன், மதுரைப்புலவர், கச்சிப்புலவர்

[விசுவநாதனும் மதுரைப்புலவரும் உரையாடி வீற்றிருப்ப]

நேரிசை ஆசிரியப்பா

விசுவ:

பெரும்படை பின்னுறப் பெருவழி கடந்து
பொருந்தொழி லோடு பொழிலிரு மருங்கும்
தங்கி நிழலிடும் தண்புனல் கிருட்டினைத்
துங்கநல் லாற்றினைத் தோணியிற் கடந்து
நண்ணினன் மாலுவும்; நாமெதிர் புகுந்தவன்
எண்ணிலாத் தானை இரிந்து பின்னிடத்
தாக்குதும்; இதுவே தகுதி ! இவ்வயின்
ஊக்கமே காட்டினம்; உயர்மதில் முற்றுகை
வெற்றி பயந்தது; வீரனும் ஆரியன்
மற்றது முடிக்கும்; மதுரைப் புலவீர் !
சேனையோ டெழுவன்; சேர்ந்து வருதிரோ ?

[கச்சிப்புலவர் பிரவேசித்து]

பெரிய

கச்சிப்: மானவேல் வீர! வான்புகழ் அரிய
நாதன் விடுக்க நண்ணின்; வீரன்
ஏதிலார் அரணை எண்ணிலாக் குண்டுகள்
எறிந்து தகர்த்தங் கிடைவழி செய்து
செறிந்த படைதனைச் சிக்கெனச் செலுத்தி
உம்மது ஷாவின் உயர்படை செகுத்து
நம்மதென் றரண்மேல் நாட்டினன் கொடியை;
அன்னதோர் வெற்றியை அறிவி என்றனன்.

விசுவ: முன்னரே உணர்ந்தேன் மொய்ம்புடைக்கொடியால்
ஆரிய நாதன் ஆற்றலே பெரிது!

கச்சிப்: சீரிய சிந்தையோய்! செய்வினை பணிக்க.

விசுவ: கோட்டையைப் பிடித்துக் குறுகலர் தானையை
வீட்டிய ஆரியன் வீரம் செப்புக!

கச்சிப்: ஆரது புகலும் ஆற்றலுள் ளார்கள்?
நேரது நோக்கியும் நிகழ்ந்தவா கூறல்
அரிதாம்; ஆயினும் ஐய!நின் பணியைப்
பெரிதெனக் கொண்டு பேசுவன்! மலைமுழை
பதுங்கும் இருளைப் பரிதியின் சுடர்கள்
கதுமெனக் கவ்விக் காய்ந்த தன்மைபோல்,
ஆரியன் படைகள் அரணைச் சூழ்ந்தன;
பேரிடி முழக்கெனப் பெருங்கால் அடிப்பக்
கிடையுகத் தெழுந்த கடலும் கனலும்
புடைபரந் தெங்கும் போர்த்திட வருந்தும்
மன்னுயிர் போலவும், மறலியின் பாசப்
பின்னலில் சிக்கிப் பெருந்துயர் கொள்ளும்
சீவனைப் போலவும், சேண்மதிற் பட்ட
பாவகற் கீந்த பசுந்தளிர் அனையார்
பதைத்து வருந்தினர்; பார்ப்பவர் பயங்கொளக்
குதைவரிச் சிலையில் கொடுங்கணை போக்கினம்;
குந்தா லிப்படை கோடரி குறுந்தடி
சிந்தா குலமுறச் செலுத்தினம்; கவணிற்

கற்களை எறிந்தோம்; கரும்பொற் குண்டுகள்
பற்பல விடுத்தனம்; பாயிருள் பரந்த
வானிடை இடியும் வயங்கும் மின்னலும்
மானவே புகையிடை மலிந்தன சுடரொலி;
மண்ணினும் கல்லினும் வகுத்த மதிலின்
எண்ணிலா முடியுறப் பிடித்தன குண்டுகள்
தகர்ந்த முடியெலாம் தசமுகன் தலைகளை
நிகர்த்தன; வேழம் நெட்டிருப் புலக்கை
வாங்கி மதிலின் வலிகெடத் தகர்த்தன ;
ஆங்கொரு புடையின் அரணடி பறித்தனர்
பாரைமண் வெட்டிப் படைகளால் வயவர்;
ஆரைமீ தேறியும் அகன்றிடப் பிளந்த
அரண்வழி நுழைந்தும் ஆர்த்தனர் வீரர்,
பெருந்தீ இட்டனர் ; பிடித்தனர் சிலரை;
முடித்தனர் பலரை; முழக்கினர் பேரி;
கொடிப்படை ஆரியன் கோட்டையுள் புகுந்து
வித்தியா ரணிய வெற்றிக் கொடியினை
மத்தியில் நாட்டினன் மதில்முடி துலங்க;
இத்தகை முடிந்த திஞ்சியின் முற்றுகை,
எத்திசை யும்புகழ் ஏந்தலே!

விசுவ: இனிதாம்!
எண்ணிய வண்ணம் இயற்றினன் திறலோன் ;
நண்ணுக நாதனை; நாற்பெரும் படையுடன்
மாலுவின் சேனையை மலையுமா றெழுவன்
கோலநீ ராற்றின் குளிர்கரைப் பாங்கர்.
இவ்வுரை உணர்த்தி இறைவனச் சுதனை
அவ்வயின் தூண்டுமா றரியநா தற்குச்
செப்புக போதிர், செந்தமிழ் வல்லீர்!

கச்சிப்: ஒப்பருஞ் சீர்த்தி உயர்படைத் தலைவ!
கச்சையங் கடகரிக் காவலன்
அச்சுதன் பின்வந் தமர்நோக் குவனே !

மூன்றாங்களம்

இடம்: கிருஷ்ணா நதியின் தென்கரை, அச்சுதப்பன் படை வீடு

காலம்: எற்பாடு

பாத்திரங்கள்: அச்சுதப்பன், ஜீவராய், மதுரைப் புலவர்

[அனைவரும் வீற்றிருப்ப]

நேரிசை ஆசிரியப்பா

அச்சு: வேகவெங் காலென வெள்ளப் படையுடன்
நாகநீள் மதிலை நாடிப் புக்கனன்;
முற்றுகை முடித்து மூதெயில் கொண்டு
வெற்றியம் பதாகை மீதுற நாட்டிய
ஆரிய நாதன் அரும்போர்க் களத்தில்
சேரலன் மாலுமுன் நின்றுபோர் செய்யச்
சென்றனன் நாதன் சேர்மினென் றுரைப்ப,
நன்றெனப் போந்தேன்; நான்வரு முன்னர்ப்
பெரும்போர் விளைத்துப் பீடுசால் ஆற்றின்
கரைவழி மாலுவும் கலங்கித் தானையும்
ஓடுமா றிழைத்தனன் ஒருதனிப் படையான்!
ஓடைமா களிற்றின் உயர்முடி பிளக்க
வடிந்திடும் குருதி வான்பரந் தென்னக்
குடவரை செவ்வான் குலவக் கதிரவன்
மறைந்தனன்; பகலில் வாளமர் புரிந்த
திறந்தனை முற்றும் தெரிந்திட விரும்பினன்;
நாதனைத் தருமின்!

[மதுரைப் புலவருடன் விசுவநாதன் உள்ளே பிரவேசிக்க]

ஜீவரா: நண்பன் வந்தனன்!
தீதறச் செலுத்திய செருவெலாம் கூறப்
போந்தனன் மேதகை.

விசுவ: போர்த்திறம் கூற
வேந்தனே! எய்திலன்; வீரம் குன்றிய
குமரன் செய்தியைக் குறித்தவ் வடில்ஷா
அமரினை நிறுத்தி அன்பினை வேண்டினன்,
ஆற்றங் கரையின் அகன்பொழில் இருந்தனன்;
சாற்றுமா றருள்க தண்புனல் ஆற்றின்
தென்கரை மருவும் செழும்பதி யாவும்
உன்பதி யாக்க உடன்படு வாரேல்
ஒக்குமே உள்ளம்?

அச்சு: உயர்தனிச் சிலையோய்!
இக்கரை நாட்டை ஈவரேல் உன்றன்
கருத்துடன் ஒக்குமென் கருத்தும்; ஆதலின்,
திருத்துக மேல்வினை.

விசுவ: திக்கெலாம் புகழும்
இறைவனே! ஏகி இசைத்தவா முடிப்பன்.—
துறைபல பாடும் சொற்பயில் புலவீர்!
அரசனோ டிருத்திர்.

[விசுவநாதன் வெளியே செல்ல]

அச்சு: அருந்தமிழ்ப் புலவீர்!
முரசொலி எழுந்த மொய்போர்க் களத்துத்
தலைவனோ டிருந்தனிர்; தமரவா றிதிபோல்
மலைந்திரு சேனையும் வளைந்தவா றியம்புக.

மதுரைப்: கடல்கிளர்ந் தெழுந்து கடும்புனல் ஆறுதன்
புடைவர எதிர்ந்து புக்கதைக் கொள்ளும்
தன்மைபோல், அரச! தவாநெடும் படைதான்
வன்மையால் உயர்ந்த வளைமதில் ரேய்ச்சூர்
விட்டெழுந் தேகி விரைவினில் படர்ந்து
துட்டர் இரும்படை தொலைவுறப் பாய்ந்து
போரிடப் புக்கது. போர்க்களத் தெழுந்த
பேரியின் ஓசையும் பேராள் முழக்கமும்
கலந்து களத்தில் கம்பலை மிகுத்தது!

மலைந்திரு சேனையும் மயங்கு காலையில்,
வானுற எழுந்து வளர்ந்த பராகம்
மாநிலத் துடனே மற்றைய நான்கு
பூதமும் கலந்து பொருந்தின போன்றது!
ஓதக் கடல்வாய் உலவும் ஆமையின்
கான்முகந் தெரியக் கருந்தோற் கவசம்
மேன்முழு தணிந்து வீரவாள் கேடயம்
கைகளில் தரித்துக் கழலணி வீரர்
மொய்களந் திரிந்தனர்! முகிலிரு கூறுகள்
குளிர்வான் எதிர்ந்து கொட்டும் தாரைபோல்
வளைந்திரு படைகளும் வாளிகள் ஏவின!
பரசுகொண் டெற்றினர்; பட்டயம் ஓச்சினர்;
விரசுவார் தம்மை வீட்டினர் வாளால்;
ஆறுபோல் உதிரம் அமர்க்களத் தோடப்
பாறுகள் சுற்றிடப் பதாதியிற் பல்லோர்
புண்படக் கலங்கியும் பொத்திடும் அம்பினால்
மண்படக் கிடந்தும் மயங்கியும் அயர்ந்தார்!
ஊனும் உதிரமும் ஊறிய சேற்றில்
தானை வீரர் தளர்ந்து தவித்தனர்!
துதிக்கையால் யானை தூக்கிவான் எறியக்
குதித்திறந் தார்சிலர் குருதிவெங் கடலில்!
கரலா கவத்தினால் களத்திடைத் திரிதந்
தொருவனே பலர்போல் உணர்த்தி நின்றனன்!
ஆயதோர் காலையில் அடையலர் திகைத்து,
'மாயமே வல்ல வாட்படை அவுணர்
பூண்டினை ஒழிக்கப் புகுந்தமால் இவனே!
காண்டிவம் எடுத்துக் காண்டவம் அழித்த
தனஞ்சயன் இவனே! தக்கன் வேள்வியைச்
சினங்கொடு தொலைத்த சிவபிரான் இவனே!'
என்றுரைத் தெங்கும் இரியலுற் றனரால்!
அன்றொரு காலையில் அரவினம் எல்லாம்
அனலிடைச் செலுத்தி ஆற்றிய வேள்விச்

சனமே சயன்போல் சமரிடை வீரன்
தந்தியின் கரத்தைத் தள்ளினன் களத்தில்!
விந்தைவாழ் இவன்படை வீரர்கள் அஞ்சா
நெஞ்சராய்ப் புகுந்து நெருக்கிநே ரலரை
அஞ்சும் கலங்க அடித்தனர் ! மாலுவும்
ஓடினன் ; அவனுடன் ஓடினர் துருக்கர்!
கோடொளிர் கரிகளும் குதிரையின் ஈட்டமும்
கொண்டனம் ஆகிக் கொற்றமும் படைத்தோம் !
எண்டிசை மதிக்கும் இறைவனே ! இதுதான்
போர்த்திறம் !

அச்சு : புலவீர்! புகன்றனிர்; மகிழ்ந்தேன்;
நேர்த்தியே! நாதன் நினைத்தது முடித்தான்;
வார்புனல் ஆடி வைகறைப் பொழுதில்
நேர்கடன் முடித்து நிற்குதும்; காலையில்
உடன்படு நெஞ்சனாய் உறுவன் அடில்ஷா ;
அடைக்கலம் புகுமேல் அன்பினைத் தருவோம் ;
இன்றுயில் கொண்மின் எவரும்
குன்றிடை உறங்கும் கோளரி போலவே!

நான்காங்களம்

இடம்:	கிருஷ்ணா நதியின் தென்கரை, அரசன் படை வீடு
காலம்:	காலை
பாத்திரங்கள்:	அச்சுதப்பன், ஜிவ ராய், சலாபத் கான், சதாசிவ ராய், இராம ராஜன், கச்சிப் புலவர், மதுரைப் புலவர் முதலானவர்கள்

[அனைவரும் வீற்றிருப்ப]

நேரிசை ஆசிரியப்பா

அச்சு : இதம்பெற நாதன் இயற்றினன் அரிய
உதவிதான். இதனை மறத்தல் ஒண்ணுமோ !
அரசன் அடில்ஷா அணைந்திடும் முன்னர்

உரிமையில் தெரித்தனன் உறுமுடன் படிக்கையில்
காட்டிய நிபந்தனை காவதம் கொண்ட
நாட்டினைத் தருதலும் நயந்த வர்த்தகத்
துறைமுக வடுகலைத் தொடுகடல் உலவும்
நிறைமரக் கலங்கள் நின்று துயல்வரப்
பொதுவிடம் ஆக்கலும் பொருந்தும் இரண்டென;—
கதுமென எழுந்த கடும்போர் முடிந்தவா
வியப்பே! இனியவர் விழைவுமேற் கொண்டு
பெயர்ந்திவண் வருவதாய்ப் பேசினர் ; அதுபோல்
வந்திலர் என்னே !

[விசுவநாதனும் சலாபத் கானும் உள்ளே வர]

வார்கழல் வணைந்த
தந்திரத் தலைவன் தன்னுடன் ஒருவனைக்
கொண்டிவண் வந்தனன்.

ஜீவரா : கொற்றவ! இவன்றான்
திண்டிறல் சலாபத் கானெனும் தெவ்வர்
படையின் தலைவன்; பரிவுமிக் குடையான்;
கடைநெடு வேற்கண் காஞ்சனை சிறையை
மீட்குநாள் உதவிய மீளி மொய்ம்பினன்.

அச்சு : வாட்படை வீர!நின் வரவுக் குவந்தனன் !
அமர்க!நின் அரசன் ஆணையென் ? கூறுக.

சலா : தமருடன் அரசன் சார்ந்தனன் உனது
பாசறை வாயிலின் பார்த்திவ! உன்றன்
நேசமே நாடிய நிருபனை நின்முன்
அழைத்து வருவதோ ?

[சலாபத்கான் வெளியே செல்ல]

அச்சு : அன்பனைத் தருக !
தழைத்திடும் புகழோய்! தரியலர் தம்மை
வென்னிடத் துரத்தி வெற்றியை நாட்டி
என்னிலம் எனக்கே ஈந்தனை என்பதென் ?

நேமிசூழ் வலயம் நின்றநின் பெருமைக்
காமிதோர் செயலோ ? அன்ப!நின் ஆற்றல்
யாவரும் உணர்வர்; யானினி உரைப்பதென் ?
மேவிய காரியம் மேம்பட முடிந்ததோ ?

விசுவ : வெற்றிவேல் இறைவ! வீங்குநீர் ஆற்றில்
கொற்றமே காட்டும் கொடிபயில் நாவாய்
செலுத்தியான் செல்கையில், திகழிரு கரையும்
நிலைத்திடும் சேனையின் நேயமே காணப்
பாதலத் துறைவார் பரிவினுற் றதுபோல்,
காதலுற் றவர்நிழல் கடிபுன லகத்தில்
கலந்துற வாடின; காவலர் இருவரும்
நலந்தனை நினைத்தவர் நன்னேக் குறுமுன்,
இருவர்தம் படையிருந் தெழுந்த தூளிகள்
மருவிக் கலந்தன ; வான்கரை இரண்டும்
துன்னிய சேனையில் துவைத்த பேரியின்
மன்னிய பேரொலி வான்முக டளாவிச்
சேர்ந்து முழங்கின; சேனை இரண்டிலும்
நேர்ந்தபல் கொடிகளின் நெற்றியைத் தைவரும்
காற்றினம் களித்துக் கலந்தன ; காவல !
சாற்றுவ தென்னினி! சமாதா னம்பெற
வந்தனன் மன்னவன்.

அச்சு: மகிழ்வும் எய்தினன்!
நந்தம் காலமும் நன்மை பயந்தது !

[இஸ்மேல் அடில்ஷா, மானு, கும்மல் கான், அஷாடா கான், சலாபத் கான், அமீர் பீரிது, உம்மதுஷா முதலானவர்கள் உள்ளே வர,—அச்சுதப்பனும் அவன் சபையோரும் எழுந்து நிற்ப, — இஸ்மேல் அடில்ஷா முன் வந்து அச்சுதனைப்பணிய]

கச்சிப்: [மதுரைப் புலவருடன் தனியே]

மதுரைப் புலவீர்! மமதை அடங்கிப்
புதுத்தோல் பொருந்தப் புனேதோல் உரிக்கும்
விடப்பல் இழந்த வெங்கணு கம்போல்
அடையலன் அச்சுவ பதிநாட் டரசன்
நுரையென வெளுத்த நொய்தாம் அங்கியைச்
சிரமுதல் கால்வரை சேர்த்தி விசய
நகராள் அரசன் நரேந்திரன் முன்வந்
தகமிகக் குழைந்தங் கணிமுடி தாழ்த்திச்
சலாமிடு கின்றனன்!

மதுரைப்: சாகரத் திடையில்
குலாவுறும் கராவின் கூர்வாய்ப் பட்ட
கரியினைப் போல்படைக் கடலில் பகைவன்
அரசனச் சுதனை அஞ்சுகின் றனனல்!

அச்சு: அன்பினை வேண்டும் அரசனே! வருக!
முன்புள வருத்தம் முழுவதும் போக்கி
இன்றுதொட் டிருவரும் இசைந்த மனத்தராய்
ஒன்றுபட் டொழுகுதல் உயர்நலம் விளைக்கும்;
ஆதனத் தமர்க!

இஸ்மே: அரசர் ஏறே!
ஆதரிப் பாயென் றடைந்தவர் தம்மைப்
போற்றும் பெருந்தகைப் புண்ணிய பூபதி!
ஏற்றமார் நரச இராச குமாரனே!
நின்வயின் அப்புகழ் நிலவுறு கின்றதால்!
அன்புடன் இருவரும் அமர்ந்திடல் இனிதாம்.

அச்சு: படைகளின் தலைமை படைத்தீர்! கேண்மின்:
நடுநிலைப் படிநீர் நாட்டிய நிபந்தனை
யாவையும் செப்பேட் டெழுதுமின்! யாங்கள்
ஆவலின் முத்திரை அதனில் இடுவோம்.—
அன்பனே! அச்சுவ பதிநாட் டரசே!
இன்பமே விளைக்கும் எழிலார் சோலையின்

வம்பவிழ் மலரால் வயங்கும் நதிக்கரை
நம்படை சூழ்ந்திட நாம்களித் திருந்து
விருந்துண் டவரவர் வெற்றித்
திருநகர்க் கெழுவோம் சேனைசூழ் வரவே!

ஐந்தாங்களம்

இடம்:	மதுரை, சித்திர விலாஸம்
காலம்:	காலை
பாத்திரங்கள்:	விசுவநாதன், குமார கிருஷ்ணப்பன், காஞ்சனை, ஜீவராய், அரியநாதன், சொக்கலிங்கன், மதுரைப் புலவர் முதலியவர்கள்

[விசுவநாதன், குமார கிருஷ்ணப்பன், காஞ்சனை மூவரும் உரையாட]

நேரிசை ஆசிரியப்பா

விசுவ: மணிமுடி கவித்த மன்னவன் ஏவ
அணிமதிற் கூடல் அடைந்தனம். அந்நாள்,
ஏந்திழை! இவனை எழில்மலர்க் கையால்
ஏந்திநீ வந்தனை! இளவலுக் கிந்நாள்
ஆண்டுபத் திரட்டி ஆயின. வெற்றியைப்
பூண்டதோர் விசய நகரிற் புகுந்த
கலக்கமும் துன்பமும் காதினல் கேட்டோம்!
விலக்குமா றொருவரும் வேண்டினர் இல்லை.
வேங்கடாத் திரிக்கு விரோதமே செய்து
பாங்குறு வார்க்குயர் பதங்களை வழங்கும்
மந்திரி திம்மன் வஞ்சகம் கண்டு
சிந்தை கலங்கித் திருநகர் உள்ளார்
சினந்திடத் திம்மன் சிறுவனைக் கொன்றனன்!
மனங்கொதித் திந்நகர் மாந்தர் இருவகைப்
பட்டனர் என்னப் படையொடு புகுந்து

கிட்டினன் இபுரகீம்; கெடுமதி அமைச்சன்
எட்டிலக் கம்பொன் ஈந்தவன் ஏக
விட்டனன். ஆயினும், வியனகர்க் குழப்பம்
அடங்கில தென்றவ் வடில்ஷா தனையே
'தொடங்குக போர்,'எனத் தூண்டினன். அவனும்
வந்தது கண்டு மன்குலத் தவர்கள்
சிந்தைகன் றினராய்த் தீயவன் கொள்ள
ஐம்பதி லக்கம் அரும்பொன் அளித்து
நும்பதிக் கேகென நுவன்றனர்; சென்றான்.
அன்னதோர் காலையில் அமைச்சனை ஒறுக்க
அந்நகர் உள்ளார் அனைவரும் திரண்டு
சதாசிவன் இராம ராயனும் தந்நகர்ப்
பதாதித் தலைவரைப் பரிந்து வேண்ட
வளைந்தனர் அமைச்சன் வளமனை. அவனும்
உள்நதளர்ந் தினிநமக் கொருதுணை இலையென
நிலத்தினில் கத்தியை நிறுத்தி அதன்மேல்
வலனுறப் பாய்ந்து மார்பகம் கிழிய
மாண்டனன், அந்தோ! 'வஞ்சகத் தொழிலே
தூண்டிடுங் கேடெ'னச் சொல்லுவர், நல்லாய்!
மாநகர் அமைதி மன்னிய காலையில்
'கோனிவன்' என்னக் குடியெலாம் ஏற்ப
இராம ராயனே இறைவன் ஆயினன்!
விராவிய படையுடன் மேவலன் வருகையும்
அமைச்சன் தீமையும் அணிநகர்க் குழப்பமும்
அமையுமோ, யானும் அந்நகர் இருந்தால்?
மந்திரி செய்த வஞ்சனை யாலும்
தந்திரத் தடில்ஷா தாக்குத லாலும்
தம்பொருள் தம்முயிர் தம்மனை தமதென
நம்புதல் இலராய் நகருளார்க் கெய்திய
விதிகொடி தென்ன வேலைசூழ் போர்த்துகல்
பதிநூல் வல்லோன் பர்னோ நூனிசு
எழுதிய நிருபம் எதிர்ந்தநாள் முதலாப்

பழுதிலா நகரும் பழுதுபட் டதென
வருத்தம் எய்தினன்.

காஞ்ச : மன்னவ! ஈசன்
கருத்தை எவர்கொலோ கடந்திட வல்லார்?

[சில பிராமணர்களும், ஜீவராயனும், அரியநாதனும் உள்ளே வர]

ஜீவரா : நாட்டினுக் கென்றும் நல்லறம் புரிந்தது
கூட்டுறும் பயனைக் குறித்திடாக் கோவே!
அறமே புரிந்தனை: ஆதலின் நின்பால்
அறத்தின் மூர்த்தி அருள்சுரந் தவனாய்
அரசனைக் கொண்டுனக் கரசு தந்தனன்.
விரவிய சீர்க்குண வீர வர்மன்
மாண்டது கூறி மதுரை வாசிகள்
வேண்டினர் உன்னை வேந்தெனக் கொள்ள!
மன்னவன் மகிழ்ந்து வான்புனல் கங்கை
நன்னீர் ஆட்டி களிர்முடி சூட்டி
வரும்படி விடுக்க வந்தனன், நண்ப!
அருமறை நவிலும் அந்தணர் தம்மால்
புனித மாக்கிய பொன்னுருக் கொண்ட
துனிதரும் கூர்வேல் துர்க்கையும் வந்தனள்!

விசுவ : காக்கும் தொழிலுடைக் கன்னிவந் தனளோ?
நோக்கருள் மாது நோன்பினுற் றனளோ?

[வெளியே ஜனங்கள் கூட்டங்கூடி நின்முர்த்து]

ஜனங்கள் : செயசெய! இராம ராச! செயசெய!

விசுவ : வியன்பெரு வீதியில் விழைவொலி என்னே?

அரிய : மாந்தர் உரைப்படி மன்னவன் இராமன்
ஈந்தனன் என்ன இருங்களி எய்தினர்!

விசுவ : நாரணி இந்த நகர்வந் தாளெனப்
பேருவப் பெய்தினன்.

அரிய : பேசுவன் கேண்மின் :
மேவிய புகழோன் வெற்றிவேல் கிருட்டின
தேவன் செங்கோல் செலுத்தும் நாளையில்
நவராத் திரியெனும் நன்னாள் முடிவில்
தவறு தரசனும் தன்குலக் கிளைஞரும்
கொடிமதில் காக்கும் குமரிமுன் சென்றவள்
அடிபணிந் தலரால் அருச்சனை புரிந்து
பகட்டினை நிறுத்திப் பார்ப்பவர் வெருளத்
தகட்டுரு வாய தனிவாள் எடுத்தோர்
வெட்டினில் கழுத்தை வெட்டிப் பலியிடல்
இட்ட தேவதைக் கினியதோர் பூசை !
வெட்டொன் றில்தலை வீழ்த்தப் படாதேல்,
நட்டமும் துன்பமும் நகருக் கெய்தும் !
ஆதலின் இப்பலி ஆண்டுக டோறும்
காதலின் அரசர் கைவிடா தியற்றுவர்!
ஆண்டொரு நாளில் அவ்விதப் பூசை
ஈண்டிய காலையில், இறைவன் வேட்டமேல்
சென்று கானகம் திரிந்து, மைந்நிறக்
குன்றுகால் பெற்றுக் கொண்டலின் முழங்கிக்
கொம்பினல் தருக்களின் கோடுகள் முறித்துப்
பம்பிய கானில் பாய்ந்து குளம்பினல்
பாரினை எற்றிப் பராகம் எழுப்பி
நேர்முக மாக நிற்பது போல
நிற்கும் பகட்டின் நேர்மையைக் கண்டனன்;
விற்குனித் தெய்யும் வேடரைக் கூவி,
"வலையினை வீசுமின் ! வளைந்து நெருங்குமின் !
நிலையுறக் கொணர்மின் நீவிரிக் கணம்!"என
எயினர் வளைந்தனர்! ஏறெழுந் துறுமி
வயின்வயின் ஓடி வளைந்தவர் தம்மை
முட்டித் தள்ளி முழங்கும் எல்லையில்,
கட்டிக் கொணர்ந்த கழலோன் இவன்காண் !
வேந்தன் கிருட்டினன் வியந்து, 'சூலம்

ஏந்திய கையாள் ஏற்றிடும் நற்பலி
இதுவென நகரம் எய்தி, நாளையே
கதுமெனச் சென்று காளிசன் னதியில்
பலியிடு வோம்'எனப் பறையறை வித்தனன்.
'வலிமிகு பகட்டை வாளினால் நாளைச்
செருப்பவர் எவர்?'எனத் திகைத்தனர் வீரர்!
நகுமிளங் கதிரவன் நண்ணிய காலையில்,
ஆயுதச் சாலையை அடைந்தனன். ஆங்கண்
போயித மான பொரும்படை துருவி
நின்ற நாதனை நெருங்கித் 'தோழ!
இன்றிவண் வந்ததற் கேது காரணம்?
விளம்பெ'னக் கேட்டேன்; விசுவ நாதனும்
உளம்படு கனவை உரைத்தனன். அதுவும்
இரவினில் கண்ட எனது கனவும்
விரவிய தன்மையால், வியந்தனன். தேவி
கூறிய வண்ணம் கூர்வாள் எடுத்துப்
பாறுசூழ்ந் திட்ட பலியிடம் சென்றோம்.
ஆங்கண் அரசன் அவலமுற் றவனாய்,
'ஈங்கிதைக் கொல்வார் எழுந்திலர்,' என்று
வருந்துங் காலைஇவ் வாட்கை வீரன்
திருந்தவே நின்று திகழிரு கொம்பின்
வளைவினில் படாமல் வாளினைச் சாய்த்து
விளையாட் டாக விலங்கின் கழுத்தைத்
துண்டித் தெறிந்தனன்; துண்ணென வியந்தார்!
மண்டலம் புரந்த மன்னவன் களித்தான்!
காளியும் பூசையைக் களிப்புறக் கொண்டாள்!
மீளிமொய்ம் பனுக்கு வெற்றியே உதவி
என்றும் பிரியா திருந்த தெய்வம்
இன்றிங் கெழுந்தனள்; ஏமம் படைத்தனன்.

விசுவ: வாய்மையே உரைத்தான்; வாகையும் செல்வமும்
தாய்தர வந்தன!

[வெளியே ஜனங்கள் மற்றொரு
முறை ஆர்த்துச் சொக்கலிங்
கனை முன் செலுத்தி]

ஜனங்கள்: தாழ்க்கிலம்! தாழ்க்கிலம்!
இன்னே இறைவற் கெழில்முடி சூட்டத்
துன்னுதி! போதி!—தோன்றலே வாழி!

விசுவ: மற்றொரு முறையும் மாநகர் மாந்தர்
உற்றுரும் ஒக்க உயரொலி கிளப்பினர்!

[சொக்கலிங்கன் உள்ளே வந்து]

சொக்க: வைகைநா டோங்க வந்த பூபதி!
கைகளைக் குவித்துக் கடைப்புறம் நின்று
பொன்முடி புனைகெனப் புகன்றனர் மாந்தர்!—
தென்னவன் குலத்தில் சிறுவர் இன்மையால்
மன்னவன் இராமன் மதித்த வண்ணமே
இன்னே மவுலி எழிலுறப் புனைக!

ஜனங்கள் : [வெளியே]
புனைக! புனைக! பொன்முடி புனைக!
நனைக! நனைக! நறும்புனற் கங்கை!
செங்கோல் பெறுக! சிங்கா தனத்தில்
எங்கோன் என்ன இருந்துநீ வாழ்க!

விசுவ : [சொக்கலிங்கனை நோக்கி]
அவ்விதம் ஆகுக! அணிநகர் மாக்களைச்
செவ்விதின் அமர்த்திச் செலுத்துக! போதி!

அரிய : [ஜீவராயனைப் பார்த்து]
நண்பனே! முடிபுனை நன்னாள் இதுவெனப்
பண்புறு கணிதர் பகர்ந்தனர் கொல்லோ?

ஜீவரா: நாளைநன் னாளென நவின்றனர் மேலோர்!

அரிய: வாளைபாய்ந் துழக்கும் வண்புனல் நாட்டின்
மாந்தர் அனைவரும் மாநகர் புதுக்கிப்
பூந்தார் சூட்டிய பூரண கும்பமும்
பொலம்பா லிகைகளும் பொன்னொளிர் கவரியும்

நலந்திகழ் விளக்கும் நங்கையர் எடுப்பச்
செய்வன செய்திநீ சேனைத் தலைவ!
மைந்நிகர் தந்திமேல் வார்முர சேற்றி,
'நாளையே முடிபுனை நல்விழா நடத்தும்
நாள்,'எனச் சாற்றி நகருக் குணர்த்துக!

சொக்க: இத்துணை ஆணையை ஏற்றேன்! மகிழ்ந்தேன்!
மெய்த்தவம் இருந்தவா!—மேதினி உள்ளார்
களிப்பர், திளைப்பர், களியாட் டயர்வர்!
ஒளிப்பரும் உவகையால் ஓடித் துள்ளுவர்!
ஆதலின், ஐய!நின் ஆணைமேற் கொண்டேன்,
போதுவன். [சொக்கலிங்கன் வெளியே செல்ல]

விசுவ: கேண்மின்: பொன்முடி புனைந்து
செங்கோல் தரித்துச் சேணிலம் குடையில்
தங்குமா றிருந்து, தந்திரத் தலைவரும்
மந்திரத் தலைவரும் மன்னரும் சூழ
இந்திரன் நிகர்ப்ப இருந்து, மங்கையர்
பல்லாண் டிசைப்பப் பார்ப்பனர் ஆசி
சொல்லால் எழுப்பச் சுருதிநூற் படியே
மாநிலம் காத்தல் மனுவிற்கு மாகுமோ?
யானிதற் காளோ? யாமனை கருணையும்
ஆன்றோர் அருளும் அமைந்தால் அன்றி
ஏன்றிடற் கொண்ணுமோ இப்புவிப் பாரம்?
சுமையின் தன்மையைச் சொல்லுவன், கேண்மின்:
அமைச்சர் முதலாம் அவையோர் சொற்படி
நிற்றலும், மாந்தர் நினைத்தவா புரிதலும்,
கற்றவர் விதித்த கதியினிற் போதலும்,
அறன்வழிச் சேரலும், அதற்கு மாறு
மறன்வழி விலக்கலும், மங்கையர் பாலகர்
மூப்பினர் முதலாம் மொய்வலி இழந்தார்க்
காப்பதும், கள்வரைக் கடிவதும், காமம்
ஆதிமுக் குற்றமும் அடக்கலும், நகரில்
சாதியே தத்தவர் தத்தம் நிலையில்

தவறு தொழுகத் தக்கவா றியற்றலும்,
இவரலை படரும் இருங்கடல் மீது
வங்கம் செலுத்தி வர்த்தகம் புரிதலும்,
எங்கணும் பயிர்த்தொழில் இயற்று வித்தலும்,
பிணிபசி நீக்கலும், பெரும்போர் துடைத்தலும்,
அணிநகர் வீதி யாவையும் திருத்தலும்,
குளம்பல நிரப்பலும், குடிகளைப் பெருக்கலும்,
வளம்பட ஆவணம் வகுத்தலும், பற்பல
கைத்தொழில் வளர்த்தலும், கல்வியை வளர்த்தலும்,
பொய்த்தலை உவக்கும் பூரியர் பகையை
நால்வகை வழியால் நலிவுறச் செய்தலும்,
மேல்வரு வினையை விநயமாய் உணர்தலும்,
நாற்றிசை மன்னவர் நட்பைக் கோடலும்,
வேற்றுமை காட்டும் வேந்தரோ டுறழ்தலும்,
இத்துணைச் செயல்களை இழைத்தல் எளிதோ?
கத்துவா ரிதிசூழ் காசினி புரத்தல்
என்வயின் அமைந்ததும் ஈசன் செயலாம்!—
பன்னருந் துணைவர் படைத்ததோள் வலியும்,
மன்பதை அன்பும், மாதவத் தோர்கள்
என்பால் வைத்த இரக்கமும், ஈசன்
அருளும் தாங்கி ஆணைமேற் கொள்ளக்
கருதினன்; சபையீர்! காட்டுமின் ஆர்வம்
மணிமுடி தாங்கி மாநிலம்
அணிபெறப் புரக்கும் அரசனைக் காத்தே!

[வெளியே ஜனங்கள் வாத்திய கோஷம் செய்ய, மதுரைப் புலவர் உள்ளே பிரவேசித்து]

மதுரைப்: வாழ்த்து

கலி விருத்தம்

வாழ்க! மனனவ! வையகம் நின்குடை
வாழ்க! வானவர் மானவர் வாழ்வுற
வாழ்க! நல்லறம் மாதவம் ஓங்கிட
வாழ்க! காஞ்சனை மாதொடு வாழ்கவே!

முற்றிற்று.

அருஞ்சொல்

முதலியவற்றின் அகராதி

ஸ்ரீ :

அருஞ்சொல் முதலியவற்றின் அகராதி

அ

அகலம் - மார்பு, 40.
அகலிகை, 58.
அகில், 109.
அகிலம் - முழுதும், 24.
அகோ-ஆச்சரியக் குறிப்பு, 18.
அங்கம் - உடல், 13, 18, 26.
அங்கனே - பெண், 100.
அங்கனேயார் - பெண்டிர், 50.
அச்சா - நன்று, 71.
அச்சுவம் - குதிரை, 24.
அஞ்சு - ஐம்பொறி, 119.
அடவி - காடு, 58.
அடி - பாதம், 92
அடைக்கலம், 119.
அடையலர் - பகைவர், 62, 118.
அடையலார் - பகைவர், 16.
அடைவு - முறை, 17.
அண்டம் - உலகம், 18,92, 108.
அண்டர் - தேவர், 13.
அணங்கு - தெய்வப்பெண், 97; பெண், 60.
அணி - ஆபரணம், 108; அழகு, 47, 72, 91, 93, 108, 128.
அணே - படுக்கை, 13.
அபிநயம் - பாவனே, 86.
அம்புயம் - தாமரை, 87.
அம்புலி - சந்திரன், 50.
அம்ம - வியப்பிடைச்சொல், 28 ; தாயே, 46, 69.
அமயம் - காலம், 22, 41, 58.
அமர் - யுத்தம், 6, 117.
அமர்க்களம் - யுத்த பூமி, 85.
அமளி - படுக்கை, 94.
அமுதம் - பால், 88, 110.
அமைச்சன் - மந்திரி, 124, 129.
அமைதர - பொருந்த, 14. 90.
அமைவன -பொருத்தமானவை,
அயர்ந்தனர்-சோர்ந்தனர், 52.
அயார்ந்தேம் - தளர்ந்தோம், 53.
அயன் - பிரமன், 10.
அரங்கம் - சபை, 83.
அரங்கமாநகர்- ஸ்ரீரங்கம், 111.
அரண் -கோட்டை, 3, 63, 112, 114, 115; பாதுகாப்பு, 2, 46.
அரவம் - ஒலி, 82.
அரவு - பாம்பு, 58, 118.
அரன் - சிவபெருமான், 23.
அரா - பாம்பு, 44, 48.
அரியாசனம் - சிங்காதனம், 5.
அரி வண்டு -அழகிய வண்டு, 50.
அரிவை - பெண், 22, 24,56,66.
அருங்கலே விநோதன், 23.
அருத்தி - விருப்பம், 28.
அரும்பதம் - மோட்சம், 111.
அருவி - ஆறு, 21.
அருள் - இரக்கம், 9.
அரை கழல் - (எதுகை) ஒலிக் கின்ற வீரகண்டை, 14.
அலகிலா-அளவில்லாத, 19, 76.
அலகை - பேய், 87.
அலமந்தேன் - தடுமாற்றம் அடைந்தேன், 45.
அலர் - பழிச்சொல், 48; பூ, 20.

அலரி - அலரிச்செடி, 20.
அலுத்துக்கொள்வது - வெறுப்பது, 10.
அலைப்பன் - வருத்துவன், 19.
அவண் - அவ்விடம், 7, 19, 35.
அவத்தம் - பழி, 79.
அவம் - வீண், 10.
அவலம் - துயர், 5, 12, 46, 53.
அவனி - பூமி, 46, 75, 78, 97.
அவிந்தனர் - இறந்தனர், 6.
அவிந்தார் - இறந்தார், 85, 102
அவிநயம் - அபிநயம், 21.
அவுணர்கள் - அரக்கர்கள், 91.
அவை-சபை, 58, 75, 76, 77.
அளக்கர் - கடல், 22.
அளாவி - கலந்து, 3, 83, 121.
